உ

தேவிசகாயம்.

—()—

# ANUBOGAVYTHIA

## BRAHMA RAHASIAM

கோஷாயி சுவாமிகள்

# அனுபோகவயித்திய

## பிரம்மரகசியம்

மூன்றும் பாகம்.

---

இஃது

ஜெகந்நாதஸ்தலம்

## கோஷாயி சுவாமிகள்

அனுக்கிரகத்தின்படி

சிறுமணவூர்.

## முனுசாமி முதலியாரால்

எழுதி முடிவுபெற்று

---

பூவிருந்தவல்லி.

பூ. சு. குப்புசாமி முதலியார் குமாரர்

பூ. சு. கு. கோவிந்தராஜ் முதலியார்

அவர்களால் வெளியிடப்பட்டது.

**1950.**

(Registered Copy Right.)

---

அடியில் கண்ட மருந்து தேவையிருந்து கீழ்க ண்ட விலாசத்துக்கு எழுதினல் வி. பி. தபால் மூலமாய் அனுப்பப்படும்.

## புத்திரசந்தான ஔஷதம்

ஸ்த்ரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அப்பப் போது விந்தைப் புசித்துவிடுவதினலும், விபரீதச் சேர்க்கையிலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சொறிபற்றி இரத்தக் கட்டி இருந்தாலும் மதத்துக் கொழித்திருந்தாலும், மூலச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினுலும் கருத்தரிக்காது.

இந்தமருந்தை காலை மாலை இருவேளையும் சாப்பிடவும் அதின் மேல் பசும்பால் சாப்பிடவேண்டியது. அதாவது வீட்டு தூரம் ஆகும் தினமுதல் கொண்டு 7-நாள் வரையில் சாப்பிடவேண் டும். இதே மாதிரி 2-மாதம் வரையில் சாப்பிட்டால் கருக்குழி யில் இருக்கப்பட்ட புழுவை நாசமாக்கி விடும். ஆருவித குற் றங்களையும் நீக்கி கருக்குழி சுத்திசெய்துவிடும். மறுமாதத்திலே கர்ப்பந்தரிக்கும். இந்தமருந்தை நாங்கள் ஆயிரக்கணக்கான நண் பர்களுக்கு கொடுத்து அதனல் சுகமடைந்து இருக்கிருர்கள் இதற்கு கடுமையான பத்தியங் கிடையாது.

சிலருக்கு வயிற்றில் அதிசவலியால் மாதமாதம் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிருர்கள். அப்பேர்ப்பட்ட கஷ்டம் ஒரே மாதத்தில் நிவர்த்தியாய்விடும் சிலருக்கு கருதரித்து 2, 3, 4, மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்துபோவது முண்டு. இப்பேர்க்கொத்த கர்ப்பதோஷமெல்லாம் இந்தஔஷதத் தால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருதரிக்கும்.

14-நாள் மருந்து விலை ரூ. 2 0 0

---

## காது நோய்க்கு குண்டலாதி தைலம்.

காதில் சீழ் வருதல், காதிரைச்சல், காது குத்தல் சயித்தியம் இவைகள் தீரும் இருவேளையும் 2—3—துளி கணக்காக காதில் விட்டு பஞ்சு அல்லது, சீலையாவது அடைத்து வைத்திருக்க வேண்டியது. கால் அவுன்ஸ் புட்டி அணு 4.

---

விலாசம்:—பி. கே. கோவிந்தராஜ் மெடிகல் ஹால்,
நெ. 31, வல்லபங்காரு செட்டி தெரு,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்

தங்கள் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும்.

அனுபவமான! பத்தியமில்லாத கைகண்டமருந்து!!

பிரசித்தியடைந்தது!!!

# அயக்காந்த திராவகம்

## அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

# அயக்காந்த திராவகத்தின் குணம்

1. முக்கிய ஸ்தானத்தில் வாய்வு மீறி நாதமுடைந்தவர்கள், 2 மேகவாய்வினால் பலயீனப்பட்டவர்கள், 3 ஆண்மை சக்தியில்லாதவர்கள், 4. மண்டைக்கொதிப்பினால் தலைமயிர் உதிர்ந்தவர்கள், 5. சுரரோகத்தினால் இரத்தம்கெட்டு உடம்பு வெளுத்தவர்கள், 6. மேகரோகத்தினால் இரத்த ஓட்டம் கெட்டு உடம்பில் சத்தியில்லாதவர்கள், 7. பித்த வெட்டையினால் உதிரம் கெட்டு பலயீனப்பட்டவர்கள், 8. பித்தச்சூட்டினால் கை கால் உடம்பு எரிச்சலுடையவர்கள், 9 பித்த உபிரியினால் நாக்கு ருசியறியாமல் அரோசகமுடையவர்கள், 10. உஷ்ணவாய்வினால் பசியில்லாமலும் வயிறுமந்தமுடையவர்கள், 11. பித்தகாமாலையினால்முகமும் கண்களும் வெளுத்தவர்கள், 12. மஞ்சள் காமாலையினால் உதிரம்போல கண் சிவந்தவர்கள், 13. நாபியில் சூடுண்டாகி இந்திரியம் நீர்த்தவர்கள், 14. மஞ்சள்காமாலையினால் மாலையில் கண் தெரியாதவர்கள், 15. கைகால்களில் செபமேகம் போலவே தேமல் படையுள்ளவர்கள், 16. கருமாசியைப்போல் அழுக்குத்தேமல் சொரிசிரங்குடையவர்கள். இத்யாதி குணபேதமான எல்லா வியாதிக்கும் இந்த அயக்காந்த திராவகத்தை ஆக்ஷேபனை யில்லாமல் சாப்பிட்டு குணமடையலாம் "இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்" என்ற பழமொழியை சாதாரண பாமர ஜனங்களும் சொல்லுவார்கள். இரும்பின் சத்தைப்பற்றி வைத்தியர்கள் சிலாகித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. மேற்படி திராவகத்தை 48-நாளைக்கு விடாமல் சாப்பிட்டு வருவார்களாகில் மேற்சொல்லிய எல்லாதுர்க்குண வியாதிகளையும்நிவர்த்திசெய்து சுத்த உதிரமுண்டாகும் சகல நரம்புகளும் பலப்படும்.

48-நாள் மருந்து சீஷா 1-க்கு விலை ரூ. 2

24-நாள் மருந்து சீஷா 1-க்கு விலை ரூ. 1 2-0

எமது விலாசம்:— தபால் செலவு ரூ. 1-4-0

**P. K. கோவிந்தராஜ் மெடிகல் ஹால்.**

No. 31, வல்லம் பங்காரு செட்டி தெரு,

வேப்பேரி போஸ்ட் மதராஸ்.

## விளம்பரம்.

21 - கதைகளடங்கிய

## கலியுகவிநோதகதை.

இதிலடங்கிய கதைகளானது இதுவரையிலும் யாவராலும் அச்சிடாததும் யாவரும் கேட்டிராததுமான அதிக விநோதமாகிய கதைகள்

1-வது, சாஸ்திரத்தை நம்பி ஜெயமடைந்தவன் கதை. 2 வது, விவேகமற்ற வீரகோபாலன்கதை. 3-வது, ஸ்ரீதேவிக்கும் மூதேவிக்கும் வழக்குண்டான கதை. 4-வது, கொண்டவனைக் கொல்லநினைத்த குண்டோதரிக் கதை. 5-வது, வர்த்தகக்குமாரன் வேசியால்கெட்ட கதை 6-வது, வெரிமுண்டா கொடுக்கதை. 7-வது, புகையிலையின் மருத்துவக்கதை. 8-வது, சோதிடவல்லவன் கதை. 9-வது, பிராமணப்பெண் கதை. 10-வது, வயித்தியன்கதை. 11-வது சுயம்பாகிக்கதை 12-வது, சந்தியாவந்தனக்கதை. 13-வது, ஈயாபத்தன்கதை. 14-வது, மூக்கரையன்கதை. 15-வது, ஆயிரம்புளுகன்கதை. 16-வது, அரக்கமாட்டாதவன் சூத்தில் அன்பத்தெட்டறுவாளென்ற கதை. 17 வது, பெண்பார்க்கும் தூதன்கதை. 18-வது, பிராமணன் பூனையாகப்பிறந்தகதை. 19-வது கெட்டகுமாரன் கதை. 20-வது, மதிகெட்டான்கதை. 21-வது, வைராக்கிய ராஜகுமாரன்கதை. இவைகள் அடங்கியது

புத்தகம் 1-க்கு விலை அணா - 12

வே. ஸ்ரீ பாலகிருஷ்ண முதலியார் இயற்றிய

## மூலிகை ஜாலரத்தினம்

1-2-பாகங்கள்

இந்த மூலிகை ஜாலரத்தின மென்னும் புத்தகத்தில் அதிக நூதனமான முறைகள் அனேகம் அடங்கியிருக்கின்றன. அதாவது இந்திரியஸ்தம்பனம், ஜெகவசியம், தேவதாவசிய முதலிய அனேகவசிய முறைகள், அஞ்சன மைகள், பேய்களை விரட்டும் முறைகள், பேய்களை ஆட்டு முறைகள், அஷ்டசித்திமூலிகைகளின் முறைகள், தேள்பாம்புமுதலிய சர்வ விஷங்களையும் நீக்கும் முறைகள், மோகினி-ஜின்-முனி முதலிய தேவதைகளை விலக்கும் முறைகள், குழந்தைகளுக்குண்டாகும் சர்வ தோஷங்கள் வியாதிகளையும், பெரியவர்களுக் குண்டாகும் சர்வ துன்பங்களையும் நீக்கும் முறைகளும், இன்னும் அனேக அபூர்வமுறைகளும் அடங்கியிருக்கின்றன. இவைகளெல்லாம் நமது உள்நாட்டில் சுலபமாய் கிடைக்கக்கூடியமூலிகைகளினால் முடிக்கும்படியான முறைகள். 1, 2, பாகம் சேர்ந்தது விலை அணா 12.

உ

தேவிசகாயம்.

# அவுஷதங்களின் அட்டவணை.


| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| நூன்முகம் | 9 | தைலாப்பஞ்சனகுணம் | 30 |
| ஆயுர்வேத உற்பத்தி | 11 | வைத்தியர்லக்ஷணம் | 31 |
| சாஸ்திரங்கள் | 〃 | துஷ்டவயித்தியலக்ஷணம் | 〃 |
| புராணங்கள் | 〃 | கூப்பிடவருபவன்பரிக்ஷை | 32 |
| கலைக்கியானங்கள்-கூச | 〃 | அசுபசகுணங்கள் | 〃 |
| யுகங்கள்-ச | 12 | சுபசகுணங்கள் | 33 |
| சல்லியம் ஸஸ்திரீகம் | 13 | சரீரலட்சணம் | 〃 |
| ஊர்த்துவாங்க சாலக்கியம் | 〃 | தேகதத்துவசாஸ்திரசங்கிர | 〃 |
| காயசிகிச்சை | 〃 | இரத்தவ்ஷபவிவரணம் | 34 |
| பூதவயித்தியம் | 〃 | ஜடராக்கினிவிசாரம் | 35 |
| கௌமாபிரத்தியம் | 〃 | வாதாதிபேதவிவரணம் | 36 |
| அகந்திரம் | 〃 | வாதத்தின்தொழில் | 39 |
| ரசாயனதந்திரம் | 〃 | பித்தத்தின்தொழில் | 40 |
| வசீகரணதந்திரம் | 〃 | சிலேஷ்மத்தின்தொழில் | 〃 |
| ரோகங்களைப்பற்றியவிபர | 18 | நாடிபார்க்கும்விதி | 〃 |
| வயத்தியபரிபாஷை | 21 | ஸ்திரீபுருஷநாடிபேதம் | 41 |
| எரிப்புதிட்டம் | 23 | ஜீவசாட்சிநாடிகதனம் | 〃 |
| புடதிட்டம் | 〃 | நாடிசின்னம் | 〃 |
| லங்கணம | 〃 | அஷ்டதாதுஸ்தானங்கள் | 42 |
| வயத்தியர்கவனிக்கவேண்டி | 〃 | ஸ்வஸ்தநாடிலட்சணம் | 43 |
| கியாழவிதி | 25 | தோஷநாடி | 〃 |
| கலகப சுரசவிதி | 〃 | ஸ்பரிட்சலட்சணம் | 44 |
| சூரணவிதி | 26 | ரூபலட்சணம் | 〃 |
| மருந்து அருந்துங்காலம் | 〃 | சத்தலட்சணம் | 〃 |
| மாத்திரைவர்த்தி | 27 | ரோகோற்பத்தி | 〃 |
| ஔஷதம்கூட்டுமுறை | 28 | சுரரோகஸ்வரூபம் | 45 |
| பஸ்பவிதி | 〃 | இஜ்வராதிபேதங்கள் | 〃 |
| கல்வங்களின் லக்ஷணம் | 29 | முறைக்காய்ச்சலின்லட்ணம் | 46 |
| பத்தியபிரம்சை | 〃 | சீதசுரலட்சணம | 47 |
| சிகிச்சைபேதங்கள் | 〃 | பாசுபதாஸ்திரரசம் | 〃 |
| நோயன்றிருக்க | 30 | மஹாபாசுபதாஸ்திரரசம் | 〃 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| துவாஹிகசுரலட்சணம் | 48 |
| திரிராத்திரிசுரம் | 0 |
| பிரதாபமார்த்தாண்டரசம் | 0 |
| சுராங்குசம் | 49 |
| விஸ்வாமித்திரசுராங்குசம் | 0 |
| நந்திதேவர்சுராங்குசம் | 50 |
| 4-நாளைக்கொருமுறைசுர | 51 |
| மஹாதக்கினிகுமாரரசம் | 0 |
| முறைக்காச்சலுக்குசிய | 52 |
| அம்மைசுரலட்சணம் | 0 |
| அசாத்தியஅம்மைசுரலட் | 53 |
| ஷை சிகிச்சை | 0 |
| அம்மைசுரங்களுக்கு | 0 |
| புழுக்களாலுண்டாகுஞ்சுர | 55 |
| கிருமிரோகபத்தியங்கள் | 56 |
| கிருமிரோகிகட்குஆகாது | 0 |
| பூச்சிக்கடியா லுண்டான சுரலட்சணம் | 0 |
| கீடமார்த்தனசுரம் | 57 |
| சுராதிலட்சணம் | 0 |
| கனகசுந்தரரசம் | 0 |
| ரக்தாதிசாரலட்சணம் | 58 |
| தோஷாதிசாரம் | 0 |
| சுரம்விட்டதற்குலட்சணம் | 59 |
| சுரம்வருங்காரணம் | 0 |
| சுரத்தின்முன்ரூபம் | 60 |
| வாதசுரம் | 0 |
| பித்தசுரம் | 61 |
| சிலேஷ்மசுரம் | 0 |
| வாதபித்தசுரம் | 62 |
| வாதசிலேஷ்மசுரம் | 0 |
| சிலேஷ்மபித்தசுரம் | 63 |
| தொந்தசுரலட்சணம் | 0 |
| சந்திபாதசுரம் | 0 |
| தாகசுரம் | 64 |
| அசிரணசுரம் | 0 |
| பூதசுரம் | 65 |
| அபிகாதசுரம் | 66 |
| விஷச்சுரம் | 0 |
| காலாக்நிருத்திரபைரவரச | 67 |
| சுக்கிலகாசுரம் | 0 |
| சுரசிகிச்சை | 68 |
| சங்கமதோஷச்சுரம் | 69 |
| வாந்திசுரம் | 0 |
| ஷை சிகிச்சை | 0 |
| வாந்திசுரத்திற்குஅக்கினிகுமாரரசம் | 70 |
| காமாலைசுரம் | 0 |
| தருணசுரபிரமாணம் | 0 |
| அசாத்தியசுரலட்சணம் | 0 |
| சுரத்தின்தசாவஸ்தைகள் | 71 |
| சுரத்தின்பிரமாணம் | 0 |
| பழயசுரங்களுக்குமாலினீவசந்தசரம் | 72 |
| ரசகல்பங்கள் | 0 |
| கபரிசுத்தி | 73 |
| ஜ்வரமுராரி | 0 |
| இச்வாஹரி | 0 |
| சகலசுராதிஹாரகுளிகை | 74 |
| ஜ்வரவைரிகுளிகை | 0 |
| ஜ்வரகஜகேசரி | 75 |
| நாரசிம்மரசம் | 0 |
| சகலசுரங்கட்குசண்டேஸ்வரரசம் | 0 |
| ஸ்ரீஜயமங்கள ரசம் | 76 |
| சகலசுரங்களை அரிக்கும் கஷாயம் | 0 |
| வாதசுரத்திற்குகஷாயம் | 77 |
| பித்தசுரத்திற்கு திராஷாதி கஷாயம் | 0 |
| சிலேஷ்மசுரத்திற்கு பிப்பல்யாதி கஷாயம் | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். |
| --- | --- |
| வாதசிலேஷ்ம சுரத்திற் குமூஸ்தாதிகஷாயம் | 0 |
| வாதபித்தசுரத்திற்குகஷா | 0 |
| பித்தசிலேஷ்மசுரத்திற் கு கண்டகாரியாதி கஷாயம் | 78 |
| சன்னிபாதத்திற்குபூநிம்பாதிகஷாயம் | 0 |
| ஆகந்துகசுரத்திற்கு வியாக்ருதிகஷாய | 0 |
| விஷசுரத்திற்கு முஸ்தாதிகஷாயம் | 79 |
| ஆயிகசுரங்களுக்கு நாகராதிகஷாயம் | 0 |
| திரிதீயசுரகஷாயம் | 0 |
| சகலசுரத்திற்கு சுகபேதிகஷாடம் | 0 |
| சாதுர்த்திகஷாயம் | 0 |
| அதிசாரசுரத்திற்கு கஷாயங்கள் | 80 |
| ஆமாதிசாரத்திற்கு தான்யாதிகஷாயம் | 0 |
| சுராதிசாரங்களுக்கு நாகராதிகஷாயம் | 0 |
| இரக்தாதிசாரசுரத்திற்கு | 0 |
| சோமாதிசாரத்திற்குகஷா | 0 |
| பழயசுரங்களுக்குமகாலவங்காதிசூரணம் | 81 |

| அவுஷதங்கள். | பக்கம். |
| --- | --- |
| பழயசுரங்களுக்கும் க்ஷயகாசங்களுக்கும் ஏலாதி சூரணம் | 0 |
| முறைக்காச்சல்களுக்கு நிம்பாதி சூரணம் | 82 |
| சகலசுரங்களுக்கு சுதரிசனச்சூரணம் | 0 |
| சகலசுரங்களுக்கு ஆமலக்யாதிசூரணம் | 83 |
| விஷசுரங்களுக்கு ஹரீதக்யாதிசூரணம் | 0 |
| சீதசுரத்திற்குகிராதாதிசூர | 0 |
| மேகசுரத்திற்குஅஸ்வகந்திரசாயனம் | 84 |
| அந்தர்கதகாய்ச்சலுக்கு அஸ்வகந்திலேகியம் | 0 |
| சுரங்களுக்கு வாய்விளங்காதிசூரணம் | 85 |
| சகலசுரங்களுக்கு பிப்பிலாதிரசாயனம் | 0 |
| சுரபாண்டுரோகத்திற்குதாளிச்சாதிவடகம் | 86 |
| அஜீரணத்திற்கு ஹரித்ராவடகம் | 87 |
| சுரங்களுக்கு அரக்குதையி | 0 |
| விஷசுரங்களுக்கு சஹதேவிகிதரும் | 88 |
| விஷசுரங்களுக்கு க்ஷீரஷப்பலகிருதம் | 0 |


## அவுஷதங்களின் அட்டவணை

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

சிவகிரி அங்குமுத்துசுவாமி நாயகர்

அனுபவமாயிருந்த

# தீர்மான நாடி.

கனமாகவே மூன்று நாடியுக்தானெழுந்திடில் ஜன்னியாம்
தானசைந்துகுதித்து அம்புபோல்தானடந்திடில்ஜன்னியாம்
ஊனமாமைபம் ரெண்டுவாதம் தொன்றுஓடிடில்ஜன்னியாம்
உற்றவாதத்தை ஐபத்தோடுற வோடிபாடிடில் ஜன்னியாம்
மீனபம்பரம் நீரில்வண்டுபோல் மீரிசுற்றிடில் ஜன்னியாம்
மிக்கவேதெரித்தோடிடில்பித்தமிக்க ஒளித்திடில்ஜன்னியாம்
போனமாய்கை மாதர்தப்மை புணர்த்திசெய்வது போலவே
பித்தவாதத்தை பையத்தோடுற பேசியாடிடில் மரணமே.

## தினவெண்பா.

உத்தமத்திலுத்தமாம் உதையகதிர்வெள்ளி
மத்திபமாம் திங்கள் புதன் வன்குருவே—சத்துருவாம்
செவ்வையாய் சனிமரணம் செப்பினேமித்தினத்தில்
நல்வாய்மருந்துண்ண நால்.

## வினையரியும் விருத்தம்.

தந்தவெற்றிலைப் பாக்கையெண்ணி மூன்றிற் பெருக்கியாரில்
முந்தவேகழித்துமீந்த தொன்றுக்குலாபம்ரெண்டில்
வந்திடும்ஆனிமூன்றில் வருஞ்சுபம்நாலில்துக்கம்
ஐந்துஜீவனமுண்டாகும் ஆறுக்குமரணந்தானே.

உ

தேவிசகாயம்.

# நூன்முகம்.

இதைக் கண்ணோக்கும், ஆசிரியரே, இவ்வுலகின்கண் பேரின்பத்தைப் பெறவும், சிற்றின்பத்தை யனுபவிக்கவும், மனிதனல்லது மற்றப் பிராணிகளுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது ஏனெனில், நன்மை தீமையென்கிற கிருத்தியங்களைப்பகுத்தறிந்து நடக்கவும், கஷ்ட, சுக, துக்க, சந்தோஷங்களைத் தனது செய்கைவாறு அனுபவிக்கவும், வருங்காலம் நிகழ்காலம், சென்றகாலம், என்னும் முக்காலங்களின் உணர்வை உணரவும் ஏதுவான ஆன்மா என்னு அறிவு மானிட தேகத்தில் நிலைகொண்டிருக்கிறது. மற்ற ஐந்து வர்க்கத்திற்கும் பகுத்தறியும் அறிவுஇல்லாமையால்மனிதன் சகலஜந்து ஜாலங்களுக்கு மேலானவன் எனப்படுகிறான் ஆகையால் தான்மற்றச் சராசரப்பொருள்கள் இவனது உபயோகார்த்தமாக உண்டாக்கப்பட் டிருக்கிறதென்று எண்ணப்படுகிறது. மனிதனுக்குவேண்டிய நன்மைகளைசிருஷ்டித்த கடவுளை எவ்வாறு தொழுவதோ தெரியவில்லை.

மனிததேகம் தாயினது குக்ஷியிலிருந்து "பிரசூதிகா வாயுவினால்" தலைகீழாய் பூமியின்மேல்தள்ளப்பட்டதுமுதல் (மரணம் அதாவது தேகமாறல்) வரைக்கும் கஷ்டம், சுகம் துக்கம், சந்தோஷம், என்னுமவைகளை பிரத்தியேகமாயும் கலந்தும் அனுபவித்தே வருகிறது, அனுபவிப்பது ஆன்மாவா அல்லது தேகமா? என்று கேள்வி கேட்கும் பட்சத்தில் நூலாசிரியர் அவரவர்களுக்கு தோன்றும் வாறு தங்கள் கிரந்தங்களில் புகட்டியிருக்கிறார்கள். அவைகளை யெடுத்துக் கூறின் இச்சிறியநூல் விஸ்தாரமாய்முடியும். ஆன்மா வென்ற பதத்திற்குப் பொருள், சுருதி ஆத்துமகீத்ரு ஸஸ்தூல சூக்ஷ்மகாரண சரீரேப்யோ வியதிரிகத: பஞ்ச கோசாதீத, அவஸ்காதிரிய ஸாக்ஷிஸ்ஸன் எதிஷ்டதிஸா ஆத்துமா" ஆன்

மா வென்பது புலன் படாது, ஸ்தூலமும், சூக்குமம், காரணம் என்னும்: காரணப்பெயருடைய மூன்று சரீரங்களுக்கு வேருனது, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்கியானமயம், ஆனந்தமயம் என்னும் (ஐ) கோசங்களுக்கு யெட்டாதது, சாக்கிரத்தை சுவப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தைகளுக்குசாட்சிசுரூபமாயுள்ளது. இத்தியாதிகுணங்களுடையதை ஆன்மாவென்று சொல்லுவார்கள்.

'தேகம்'' என்னும் பதத்திற்குப்பொருள்;-திஹயதே அன்னரஸேனேதிதேஹ: அப்னதிஹ உபசயே அன்ன ரசாதிகளினுல் விருத்தியாகப் படுகிறது தேகம், சரீரம் என்னும் சொல்லுக்கு சீர்யத இதிசரீரம், ஸ்ரூஹீம்ஸாயாம், நசிக்கிற சி சரீரம், என்று பொருள், வார்த்தைகளது சொல்லர்த்தத்தை ஆராயும்பொழுது மேற்கூறிய சுகதுக்காதி விஷயங்களை (ஆத்துமா என்னும் பிராணன்) தேகத்தினிடமாக அனுபவித்து வருகிறதல்லாது தேகத்தைவிட்டல்ல பிராணனை ஆக்கையினிடமாக உண்டென அறிந்தோமேயல்லது பிரத்தியக்ஷமாய் பார்த்ததில்லை. விஷயாதிகளின் பயனை தேகத்தின் பிறிவுகளால் ஆன்மா அனுபவிக்கிறதென்று பூர்வாசிரியர் தங்களதுசெய்யுட்களில்புகட்டியிருந்தாலும், தோற்றத்திற்கு தேகத்திற்கென்றேநிச்சயிக்கப்படுகிறது. வியாதிகள் சம்பவிப்பதால் பிராணனுக்கு இடையூர் உண்டாகுமென்றபயமேயல்லது வேறல்ல ஒருமனிதனுக்கு வியாதிகளுண்டாகி சிகிச்சைகள் செய்யாமல் அதிகரித்தால் வரும்பயன் "பிராணன் போய்விடும்'' என்றேமுடியும் "ஆத்மசுத்தி" என்னும் இரண்டுசொற்களுக்கு தேகத்தில்வியாதிகள், உறுப்புகளின் ஆக்கிரம நடத்தல் என்பவைகள் இல்லாமலிருத்தல், மனசாஞ்சலியம் இல்லாமை எனப்பொருள் விளங்குகின்றது ஆகையால் "பூர்வஜன்ம கிருதம்பாபம் வியாதி ரூபேனபீடயேத'' என்றால் ஜன்மாந்திரத்தில் செய்தபாவம் இந்த ஜன்மத்தில் வியாதி உருவங்கொண்டு நம்மை பீடிக்கிறது, எனத்தெரிந்து சிகிச்சைகள் செய்யாமல்இருந்துவிட்டால் வியாதிகள் நீங்குமா, ஒருகாலமும் நீங்காது தேகத்தை வியாதிகளணுகாமல் காப்பாற்றி வருவது அவயவங்கள் உறுப்புகள்) அவயவங்களின் தொழில் கிரமமாய்நடத்தலே சௌக்கியம், அக்கிரமமாய் நடத்தல் வியாதி வியாதிகளைப் போக்க அனுபவத்தால் கண்டுக்கொண்ட பதார்த்தமே ஔஷதம் ஔஷதங்களைத் தெரிவிப்பது ஆயுர்வேதம்.

# ஆயுர்வேத
## உற்பத்தி சரித்திம்.

---

வேதங்கள்-௪, ருக்குவேதம், எஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், இவைகளைச்செய்தவர்பிரம்மதேவர், சீர்திருத்தினவர் வேதவியாசர்.

சாஸ்திரங்கள்-௬, வேதாந்தம், வைசேஷிகம், பார்ட்டம், பிரபாசம், பூர்வீகமீமாம்ஸம், உத்திரமீமாம்ஸம். (சிக்ஷா வியாகரணம், சந்தஸ்ஸு, நிருத்தம், ஜோதிஷம், கல்பம்) என மதாந்திரம்.

---

புராணங்கள்-௰௮, மச்சபுராணம், கூர்மபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், பிரம்மபுராணம், வைஷ்ணவபுராணம், பாகவதபுராணம், சைவபுராணம், லிங்கபுராணம், பௌஷியாத் புராணம், நாரசீய புராணம், கருடபுராணம், பிரம்ம கைவர்த்தபுராணம், ஸ்காந்தபுராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேயபுராணம், பிரம்மாண்ட புராணம், பத்மபுராணம்.

---

கலைக்கியானங்கள்-௬௪, அக்ஷரலக்ஷணம், லிகிதம், கணிதம், வியாகரணம், நீதிசாஸ்திரம், ஜோதிஷம், தர்மசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுணசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், சாமுத்திரிகசாஸ்திரம், ரூபசாஸ்திரம், இதிஹாஸம், காவ்வியம், அலங்காரம், சாதுரியம், நாடகம், நிருத்தம்சப்தப்பிரமம், கானசாஸ்திரம், வேணுசாஸ்திரம், மிருதங்கசாஸ்திரம், தாளவாத்தியம், தனுர்வித்தை, சுவர்ணபரீக்ஷை, இதரபரீக்ஷை கஜபரீக்ஷை, அஸ்வபரீக்ஷை, இரத்தின பரீக்ஷை, பூபரீக்ஷை, யுத்தக்ஷலணம், மல்லுயுத்தம், ஆகர்ஷணம், உச்சாடணம், வித்துவேஷணம், மதுனசாஸ்திரம் மோகனம், வசீகரணம், ரசவாதம், காந்தருவாதம், பீபிலவாதம், கௌதுவவாதம், தாது

வாதம், ஆருடம், நஷ்டப்பிரசனம், முஷ்டிப்பிரசனம், ஆகாசப்பிரவேசம், ப்ரகாயப்பிரவேசம், ஆகாசகமனம், அதுர்சியம், இந்திரஜாலம், மஹேந்திரஜாலம், அக்கினி ஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், வாயுஸ்தம்பனம், திருஷ்டி ஸ்தம்பனம், வாக்குஸ்தம்பனம், சுக்கில ஸ்தம்பனம்,ஜனன ஸ்தம்பனம், கட்கஸ்தம்பனம், அவஸ்தைப்பிரயோகம்.

யுகங்கள்-௪, (க வது) கிருதயுகம், இக்காலத்தில் மனிதர்கள் சத்தியவந்தராயும், நோயற்றவாழ்வையுடையவர்களாயும், நித்தியானந்த ஸ்திதியில் இருந்தார்கள்.

(உ-வது) திரேதாயுகம், இந்தயுகத்தில், மனிதர்கள் இரண்டிலொரு பங்கு துஷ்டர்களாயும், வியாதிகளுக்குட்பட்டு வயது குறைந்து, ஞானசக்தியில் க்ஷீணதிசை அடைந்து, ஔஷதியின் சகாயம் வேண்டுவோருய் இருந்தார்கள் இந்த யுகம் தொடங்கி மனிதர்களுக்கு ஔஷதப்பிரயோகங்கள் வேண்டியிருந்தன.

(ந-வது) துவாபரயுகம், மனிதர்களில்பேர்பாதிபாவிகளாகிய பரஸ்திரீலோலராய் இருந்தார்கள்.

(௪-வது) கலியுகம், இந்தயுகத்தில் பாவம் அதிகரித்து வயது வரவா குறைந்துக்கொண்டு வியாதிகள் அதிகரித்து உலகமுழுதும் வியாபித்து ஜனங்களை அதிகசேதப்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரேதாயுகம்தொடக்கத்தில் சிலர்கொடுமைசெய்யமுயன்றதை சிருஷ்டிகர்த்தாவான பிரம்மதேவர் அறிந்து இனிமேல் தடையில்லாமல் பிராணிகளுக்கு வியாதிகள் வந்தணுகும் அவைகளால் மனிதர்களுக்கு இடையூர்களும் உயிர் சேதங்களும் சம்பவிக்கும் யென்ற யோசனையுடன், முன்புதன்னுல் சிருஷ்டிக்கப்பட்டநான்குவேதங்களுக்கு நான்கு உபவேதங்கள்உண்டுபண்ணினர், எவைகளென்றால், அர்த்த வேதம்,ஆயுர்வேதம், காந்தருவவேதம், தனுர்வேதம், என்ற நான்கு வேதங்களாம், இந்த உபவேதங்கள் நான்கில் ஏது லிங்கம், சிகிச்சை என்னும் முப்பொருளை விவரிக்கிற ஆயுர் வேதத்தில் நோய் அணுகாமலும், அணுசரித்த நோயை நீக்கிக்கொண்டு இவ்வுலகத்தில் சுகமாய் வாழும்படியான விதிகளையும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆயுர்வேதத்தைசர்வதயாபர மூர்த்தியாய் பஞ்ச கிருத்தியங்களுக்கு ஆதார பூதராய், சச்சிதானந்த ரூபமாய் விளங்கும் தேவர்களுக்கெல்லாம் தேவரான மகாதேவர் தமதுதேவியாராகிய பார்வதி தேவியாருக்கு அருளிச் செய்தாரென்றும், அந்தசர்வலோக மாதாநந்தி தேவருக்கு கடாக்ஷித்தாளென்றும் அந்நந்திதேவர் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், சித்துபுருஷர்களுக்கும் கற்பித்து கொடுத்தாரென்றும் சில நூலாசிரியர் எழுதி இருக்கிறார்கள். யுகங்களின் தொடக்கத்தில் பிரம்மதேவரால் உண்டான ஆயுர்வேதமே நமக்கு முக்கியமானது. இதில ஒருலக்ஷஞ் சுலோகங்கள் உண்டென சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயுர்வேதம்மனிதர்களின் அறிவுக்குமுற்றிலுமெட்டாதப்பொருளென்று பிரஜாபதி அறிந்து எட்டு பாகங்களாக பிரித்தார் காலகதியால நேர்ந்த அழிவினால்அந்தகிரந்தம் நாசமடைந்து சிலபாகங்கள் மாத்திரம் அபுரூபமாய் அகப்படுகின்றன தற்கால வைத்திய சாஸ்திரங்களெல்லாம் இந்த ஆயுர்வேதத்திலிருந்து உற்பத்தியானவைகள்.

(௧-வது) சல்லியம், ஸஸ்திரீகம்,இதுஸஸ்திர சிகிச்சை, காயசிகிச்சை, விரணசிகிச்சை, ஆயுதங்களின் பிரயோசனம் இவை முதலியவைகளை தெரிவிக்கின்றது.

(௨-வது) ஊர்த்துவாங்க ஸாலக்கியம் இதில்கண்டத்திற்குமேல் யிருக்கிறஉறுப்புகளின் விவரணத்தையும்அவைகளுக்கு காணுகிற வியாதிகளையும் தெரிந்துக்கொள்ளலாம்.

(௩-வது) காயசிகிச்சை இது சுரம், அதிசாரம் உன்மாதம் குஷ்டம் முதலிய தேகத்தில்உண்டான வியாதிகளையும் அவைகளின் சிகிச்சைகளும் தெரிவிக்கின்றது.

(௪-வது) பூதவைத்தியம், இதில் பேய் முதலிய வைகளால் சம்பவிக்கிறதென்னும் பம்ணுரோகங்களை தெரிவித்திருக்கின்றது. தேவதைகள், பிதுர்தேவதைகள், பிசாசுகள் முதலியவைகள் கோபமடைந்துதேகத்துக்குள் பிரவேசித்து மனதைக் கெடுத்து பூதசுரம்முதலியவைகளை உண்டுபண்ணுகின்றனவாம். இவ்விதரோகங்களைமணி மந்திரஸ்நானபூசை பிரார்த்தனைகளால் நீக்கவேண்டியதாம்.

(ரு-வது) கௌமாரபிரத்தியம், இதில் குழந்தைகளுக்கு காணுகிற வியாதிகளையும், சிகிச்சைகளையும் அறியலாம்

(சூ-வது) அகதந்திரம், இது விஷபங்களைக் குறித்து சொல்லுகின்றது.

(எ-வது) ராசயனதந்திரம் இதில்வாதம்செய்கிறமுறைகளை அறியலாம், ஜீவிக்கும் நாட்களை விர்த்திசெய்கிற கற்ப முறைகளையுந் தெரிந்துக்கொள்ளலாம். வியாதிகள் அணுகாமலிருக்க நாம்அனுசரிக்கவேண்டிய வியாதிகளையுந் தெரிந்துக்கொள்ளலாம்.

(அ வது) வஜீகாணதந்திரம் இதில் ஜனனேந்திரியங்களுக்கு காணுகிற வியாதிகளையும் வீர்யவிர்த்தி செய்துக்கொள்ளுகிறவழிகளையும் அறிந்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய எட்டுவித பிரிவுகள் உளதென்று பழயநூல்களாகிய சரசம் ஸுஸ்ருதம்,முதலிய கிரந்தங்களில்சொல்லியிருக்கிறது ஆராய்ச்சியாலும், பழக்கத்தினாலும் வைத்திய கிரந்தங்கள் உண்டாயினவென்று சொல்ல அத்தாக்ஷிகளனேகங்களுண்டு. சவத்தை அறுத்து உறுப்பு உறுப்புகளாய் சோதித்து சரீர ஏற்பாடுகளை செவ்வையாய் அறிந்து நூலாசிரியர்கள் லோகோபகாரமாய் தங்கள் நூற்களில் எழுதினார்களென்றும் கண்டிருக்கின்றது நிகழ்காலத்து வைத்தியர்கள் தேக சோதனைகளை பாராட்டாமல் அசுசி கொண்டிருக்கிறபடியால் வைத்திய விஷயங்கள் யாவும் அவர்களுக்குச் சந்தேகமாகயிருக்கிறது.

இந்த (ஆயுர்வேதம் ஆயுசை தெரியப்படுத்தும் நூல்) பிரம்மாவினால் தக்ஷபிரஜாபதிக்கு உபதேசிக்கப்பட்டது; அவர் அதையுணர்ந்து (சிகிச்சாதர்சனம்) யென்னும் சாஸ்திரத்தை உண்டாக்கி பானுவின் புதல்வர்களாகிய அஸ்வனி தேவர்களுக்கு கற்பித்தார். அஸ்வனிதேவர்கள் வைத்தியமுணர்ந்து தேவ வைத்தியர்களானார்கள். அவர்கள் சிகிச்சாரத்தின் தந்திரம் பிரம்மஹிக்கியம் என்னும் கிரந்தங்களைச் செய்தார்கள், வைரவமூர்த்தியால்கிள்ளி விடப்பட்ட சதுர்முகனது சிரசை இவர்கள் வைத்திய யுக்தியால் ஒழுங்காக சேர்த்து விட்டார்கள். தேவர்களுக்கும் அசுரர்களுக்

சும் நடந்த யுத்தங்களில் உண்டான காயங்களை தட்சணமே சொஸ்தப்படுத்தினார்கள். முதலில் சல்லியம் என்னும் சாஸ்திரத்தை பழக்கத்திற்கு கொண்டு வந்ததாய் தெரிய வருகிறது நிகழ்காலத்துவைத்தியர்கள் அதைகையாடாமல் அசுசிகொண்டு நாவிதர்களுக்கும், சக்கிலிகளுக்கும் கொடுத்துவிட்டார்கள் தேவஅரசனுக்கு உண்டான பாரிசவாதத்தை குணப்படுத்தினார்கள் இன்னும் அநேக அற்புதசிகிச்சைகளை செய்து இவ்விருவர் கீர்த்தியையும் புகழையும் பெற்றார்கள் தேவர் கோன் அவர்களது வைத்திய திறமையை அறிந்து தானும் இவர்களிடத்தில் ஆயுர்வேதத்தை கற்றுக்கொண்டு அனேகருக்கு உபகாரியானான்.

சிலகாலஞ் சென்றபிறகு வைத்தியருக்கள் வர்ணாசிரம பேதங்கள் ஏற்படவே சிகிச்சைகளும் வெவ்வேறாகபிரிந்தது பூலோகத்தில் மனிதர்கள் நோய்களால் படுந்துபரத்தை ரிஷிகள் அறிந்து அவைகளை நீக்க மார்க்கத்தைதேட ஆங்கிரசர், பரத்வாஜர், கர்கேயர்முதலான ரிஷிகள் இமயமலையில்சபை கூடினார்கள். தங்களது ஞான திருஷ்டியில் மனிதர்களது பிணிகளை நீக்க தேவராஜனது சகாயம் வேண்டியதென்று தெரிந்துக் கொண்டார்கள். பிறகு அச்சபையோர் பரத்துவாஜரை தேவலோகத்திற்குப்போய் இந்திரனிடத்தில்வைத்தியம் கற்றுவரும்படி வேண்டிக்கொண்டார்கள். பரத்வாஜரும் சம்மதித்து மேல் லோகத்திற்குப்போய் இந்திரனைக் கண்டு பலவித ஆசிகள்கூறி தன்கருத்தை வெளியிட்டார். தேவர்கோனும் சந்தோஷத்தோடு ஆயுர்வேத சூத்திர முழுவதையும் பரத்துவாஜருக்கு கற்பித்தார். ஆயுர்வேத முழுவதுங் கற்ற பரத்வாஜர் மறுபடியும் இமயமலைக்குவந்து ஆயுர்வேத முழுதையும் ரிஷிகளுக்குகற்பித்தார். ரிஷிகள் ஆயுர்வேதசூத்திரங்களை முழுதுங் கற்றுணர்ந்து தேசங்கள் தோறும்போய் மனிதர்களின் பிணிகளை சொஸ்தப்படுத்தி ஆங்காங்கு தங்கள் ஆசிரமங்கள்தோறும் வைத்திய கல்விச்சாலைகளை ஏற்படுத்தி வருந்தினவர்களுக்கு கற்பித்துவந்தார்கள்.

அத்திரேயர் தனது ஆசிரமத்தில்வைத்திய கல்விச்சாலையை ஏற்படுத்தி அனேகஜனங்களுக்கு நூலைகற்பித்துவந்தார் தமது மாணாக்கர்களில் சிறந்தவர்களாகிய அக்கினி வேஸ், பிலர் ஜடுகர்ணர், பராசர், ஹரீதர், க்ஷீரபாணி ஆகிய இவர்களுக்கு ஆயுர்வேத சூத்திர முழுதுங் கற்பித்துக் கொடுத்

தார், இவர்களோ ரோகநிதானம், குணபாடம் முதலிய அத்தியாயங்களைச் செவ்வையாக அறிந்து, பிரபல வைத்தியர்களாகி அனேக ஆண்டுகள் மரணாவஸ்தை யன்றி வாழ்ந்தார்களென்று சரகம்முதலிய நூற்களில் சொல்லியிருக்கிறது. இவர்கள் தங்கள் தங்கள் பேர்வழியாகச் செய்த நூல்களாவன, அக்கினிவேஸதந்திரம், பிலதந்திரம், ஜடுக்கர்ண சம்ஹிதை, பராசரசம்ஹிதம், ஹரீதசம்ஹிதம், க்ஷீரபாணி தந்திரம் ஆகிய இவைகளாம் இக் கிரந்தங்களை ரிஷிகளுக்கு முன் அரங்கேற்றப்பட்டன அவைகளுக்குள் அக்கினிவேச தந்திரம் முக்கியமானதென்று பிரகடனஞ் செய்தார்கள். சிலகாலம்சென்றபிறகு சரகமுனிவர் இந்நூலைத் திருத்தி சரகம் என்னும் ஒரு நூல் செய்தார் இந்தச் சரகமே பூர்வசிறந்தகிரந்தம்.

வேறுகிரந்தங்களில் செப்பியிருப்பது யென்னவெனில், ஜலபிரளயத்தில் சாஸ்திரங்களெல்லாம் அடித்துக்கொண்டு போனதாகவும், அவைகளை ஆதிசேடன் கண்டெடுத்ததாகவும், அமிர்தத்துக்காக, தேவர்களும், அசுரரும் மந்திரகிரியைக் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தகலசத்தோடு தன்வந்திரிபகவான் பிறந்து இந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுக் கொண்டு சுவர்க்கலோகத்தில் வைத்தியஞ் செய்து மஹாவைத்தியரென்று புகழ்பெற்றுப் பூலோகத்து மனிதர்கள் வியாதியால் படுந்துயரத்தை ஞான திருஷ்டியால் அறிந்து இவர்களதுபிணிகளை நாசப்படுத்த காசிராஜாவாக திருவவதாரஞ் செய்தனரும்.

தன்வந்திரி பகவான் பூலோகத்து ஜனங்களை நோய்களிலிருந்து மீட்க இராஜனாக அவதரித்திருப்பதை ரிஷிகள் ஞானதிருஷ்டியால் அறிந்து, இவரிடத்தில் உபதனுபர் போதாரண்யர், ஷுஸ்தர், கோபிரஜர், ஆரப்பிரஹ, ருகிதர் ஆகிய இவர்களை வைத்தியங் கற்றுக்கொள்ளும்படியாய் அனுப்பினார்கள். ரிஷிகளும், தன்வந்திரியான அரசரை வனத்தில் கண்டு நமஸ்கரித்து வைத்தியத்தைக் கற்பிக்கும்படிக்கு பிரார்த்தித்தார்கள். அவர் அதற்கிசைந்து வைத்திய சாஸ்திரமுழுதும் கற்றுக்கொடுத்தார் இச்சங்கதி ஸ்ரீராமர் அரசாண்ட நாட்களில் நடந்ததாக குறித்திருக்கிறது. பிறகு தன்வந்திரிபகவான், ஸுஸ்ருதரை அழைத்து ஆயுர்வேதம் பெரிய கிரந்தமாகையால் இக்கால

ஜனங்களதை அறிந்துகொள்வது கஷ்டம் ஆகவே சகலரும் சுலபமாய் தெரிந்துகொள்ளும்படி சங்கிரகித்து ஒருகிரந்தம் எழுதுமென்றூர் அவரும் ஆசானதுகட்டளையின்படி ஒரு நூல் செய்தார் அதற்கு ஸுஸ்ருதம்யென்றுபெயர் அக்காலத்தில் ஜனங்கள் வியாதிகளற்றவர்களாய் யெங்கும் யுத்தங்கள் அதிகரித்திருந்தமையால் காயசிகிச்சையை அதிகமாய் பாராட்டாமல் ஸஸ்திரசிகிச்சை முக்கியமாய் எழுதியிருக்கிறது.

பூர்வீக ஆயுர்வேத சூத்திரங்களை அனுசரித்து, சரகம் ஸுஸ்ருதம் என்கிற இரண்டுகிரந்தங்கள் யெழுதப்பட்டன இக்கிரந்தங்கள் இந்து வைத்தியத்திற்கு மூலகிரந்தங்கள், ரிஷிகள், தேவர்கள், சித்துபுருஷர்கள் முதலானவர்கள் இவ்விரண்டு கிரந்தங்களைக் கற்று தங்கள் தங்கள் இஷ்டப்படி அனேக நூல்களை செய்தார்கள் சரகத்தை யனுசரித்தவர்கள் காயவைத்தியர்களானூர்கள். ஸுஸ்ருதத்தை யனுசரித்தவர்கள் ஸஸ்திர வைத்தியர்களானூர்கள். ஆயுர்வேதத்திலுள்ள (அ) பிரிவுகள் ஸுஸ்ருதத்தில் (சூ) பிரிவுகளாய்க் காணலாம் (க வது) சூத்திரஸ்தானம், (உ-வது) நிதானஸ்தானம், (ங-வது) சரீரஸ்தானம் (ச-வது) சிகிச்சாஸ்தானம், (ரு-வது) கல்பஸ்தானம், (சூ-வது) லோகவிஸ்வுத்திரஸ்தானம் ஆகிய இவைகளாம்.

சரகம், ஸுஸ்ருதம், இவ்விரண்டையும் அனுசரித்து (பாஹட்டாசாரியார், பாஹாட்டம், அஷ்டாங்ஹிருதயம்) என்னும் ஒருநூலை இயற்றினர். இதில் நூதன விஷயங்களையுங் காணலாம்.

ஆயுர்வேதத்தை சங்கிரகித்து பூர்வாசாரியர்கள் பிரேதங்களை தொடக்கூடாதென்று யாருஞ்சொல்லவில்லை, சரீரஸ்தானத்தை யெழுதுவதற்கு பிரேதத்தை அறுத்துப் பார்க்காமல் யூகையின் மீதில் யெழுதுவது மிகவும் அசாத்தியம் ஆயுர்வேத ஆரம்பத்திலிருந்து ஸஸ்திரசிகிச்சை வுண்டென தெரிய வருகிறது அது யெந்தகாரணத்தினல் அற்றுப்போயிற்றோ தெரியவில்லை ஸஸ்திரசிகிச்சை யில்லாததினூலும் நூதனமாய்க் கற்றுக்கொள்பவன் சரீர அவயவங்களின் பரிசோதனை செய்யாததாலும், இந்துவைத்தியம் இந்த ஹீனஸ்திதிக்கு வந்துவிட்டது சமஸ்கிருதத்திலும் மற்ற பாஷைகளிலும் கணக்கிடமுடியாத வைத்தியகிரந்தங்கள் ரிஷிகளாலும், சித்து புருஷர்களாலும், பண்டிதர்களாலும்

இயற்றப்பட்டிருக்கின்றன. இவைகளை யெடுத்து கூறின் கிரந்தம் விஸ்தாரமாய் முடியும் சகல வைத்திய கிரந்தங்கள் சரகம் ஸு்ஸ்ருதம் என்னும் இரண்டு கிரந்தங்களிலிருந்து யெடுத்து கூறப்பட்டதல்லது வேறல்ல, ஆகையால், அக்கிரந்தங்களுடைய பெயர்களும், நூலாசிரியர்களையும் இவ்விட மெடுத்து யெழுதுவதால் பிரயோசனமில்லை.

## ரோகங்களைப்பற்றிய விதங்கள்.

பூர்வாசாரியர்கள் குறித்திருக்கிற (கூசசஅ) ரோகங்கள் எளிதில் அறியும்பொருட்டு வகுப்புவகுப்புகளாக பிரித்திருக்கிறார்கள். அப்பிரிவுகள், ஒருவர் பிரித்தவிதமாய் மற்றொருவர் பிரிக்கவில்லை.

## ஆயுர்வேதத்தில் கண்டிருக்கிற வகுப்புகள்.

1-வது, காதரோகங்கள், கிரந்திரோகங்கள்

2 ,, இந்திரியரோகங்கள், சிராரோகங்கள்

3 ,, சர்வரோகங்கள்

4 ,, பூதகணரோகங்கள்

5 ,, பாலரோகங்கள், பாலிந்தரோகங்கள்

6 ,, விஷப்பிரதிவிஷம்

7 ,, ரசாயனம்

8 ,, மனுஷிய அபிவிர்த்தி

## வேறொரு சாஸ்திரத்தின் வகுப்புகள்.

1-வது, சாத்தியரோகங்கள்

2 ,, கஷ்டசாத்தியரோகங்கள்

3 ,, அசாத்தியரோகங்கள்

## மற்றொரு சாஸ்திரம்.

1-வது, பாரம்பரியரோகங்கள்

2 ,, ஆகந்துகரோகங்கள்

## சரகசாஸ்திரம்.

1-வது, ஆகந்துகரோகங்கள்
2 ,, நிஜரோகங்கள் அல்லது சரீரரோகங்கள்
3 ,, மானசரோகங்கள்
4 ,, ஸ்வாபாவிகரோகங்கள்

## மற்ருெரு சாஸ்திரம்.

1-வது, ஸஸ்திரசாத்தியரோகங்கள்
2 ,, சினேயாதிகிரியா சாத்தியரோகங்கள்

## மற்ருெரு சாஸ்திரம்.

1-வது, அதிபாலபிரவர்த்திதரோகங்கள்
2 ,, ஜன்மபலபிரவர்த்திதரோகங்கள்
3 ,, தோஷபலபிரவர்த்திதரோகங்கள்
4 ,, சங்காதபலபிரவர்த்திதரோகங்கள்
5 ,, காலபலபிரவர்த்திதரோகங்கள்
6 ,, தெய்வபலபிரவர்த்திதரோகங்கள்
7 ,, ஸ்வபாவபலபிரவர்த்திதரோகங்கள்

கோஷாயிசுவாமிகள் ⟶ அனுபோக வயித்தியபிரம்ம ரகசியம் என்ற நூலே மொழிபெயர்த்து முதலிலிருந்து அச்சிடக்கருதி இந்நூலின் பிரயோஜனத்தை சகலருக்குங் காட்டும்படிக்கு சில கைமுறைகளே மாத்திரம் எட்டு பாகங்களாக ம-ா-ா-ஸ்ரீ, ஜெகந்நாதபுரம் கோஷாயிசுவாமிகள் அனுக்கிரகத்தின்படி யெனது சினேகிதரான சிறுமணவூர் முனுசாமி முதலியாரவர்களால் எழுதபட்டிருக்கிறது. அம்முறைகளது பிரயோசனத்தைக் கண்டு களிகூர்ந்து, இந்தியா, சிலோன், சிங்கப்பூர் முதலியஇடங்களிலிருந்துஅனேகவைத்தியர்கள் இன்னூலே சாங்கோ பாங்கமாய் மொழி பெயர்த்து வசன ரூபமாய் அச்சிடும்படி கேட்டுக்கொண்டமையால் ஷ கிரந்தத்தை மொழிபெயர்த்து அத்துடன் சரகம், ஸுஸ்ருதம், பாஹாட்டம், சித்தஸார்ணவம், அஸ்வனிசம்ஹிதம், கார்க்கேயம், மாதவநிதானம் முதலிய கிரந்தங்களின் அபிப்பிராயங்களேயும், சிகிச்சைகளேயும் கூடச்சேர்த்து கிரந்தபூர்த்தி செய்து வசனமாக வெளியிடலாகினேம்.

மூன்றுவது பாகத்தில், வைத்தியபரிபாஷையும், வைத்தியர்கள் கவனிக்கவேண்டிய சிலமுக்கியவிஷயங்கள், கஷாய விதி, சுரவிதி, சூரணவிதி, மருந்து அருந்தும் காலம், மாத்திரைவிதி, ஔஷதங்கூட்டுமுறை, பஸ்பவிதி, பத்தியபிரசம்சை, சிகிச்சைகள்பேதம், அரோக்கிய பிரசம்சை, தைலாஞ்சனகுணம், கிரந்த ஆரம்பம், வைத்தியன் லக்ஷணம், தூத பரீக்ஷை முதலியவைகள், சரீரலக்ஷணம், இரத்தவிஷயவிவரணம், ஜடராக்கினி விசாரம், வாதாதிபிரகுருதிபேத விவரணம், நாடிகள் விவரணம், நாடிபரீக்ஷை, அஷ்டவித பரிக்ஷைகள், சுரங்களும் அவைகளுக்கு சிகிச்சைகளும்அடங்கியிருக்கின்றன.

சில ஒஷதிகளின் பெயர்களை தமிழில் காண்பது மிக கஷ்டமாய் இருந்தபடியால் அவைகளைவடமொழிகளாகவே அச்சிட்டிருக்கின்றது.

இலக்கணஇலக்கிய விதியின்படிஇந்நூல் அச்சிட்டால் கல்விமான்களுக் கல்லது மற்றவர்களுக்கு பயன் படாது. ஆகையால் சிறியகுழந்தையும் இதிலுள்ள விஷயங்கள் தெரிந்துக் கொள்ளும்படியான சுலபநடையுடன் எழுதலாயிற்று. வட மொழியிலிருந்து இக்கிரந்தம் மொழி பெயர்த்ததால் சொற்குற்றங்கள், பொருட் குற்றங்கள், அடங்கியிருக்கின்றன ஆகையால் இதைகண்ணேக்கும் கனவான்கள் சலத்தினின்றும் பாலைவுண்ணும் அன்னத்தைப் போல் பிழைகளை பாராட்டாமல் குணங்களை நாடுவீர்களென்று நம்புகிறேன்.

தங்கள் அன்பன்

ஜெ. சீதாராம் பிரசாத்

---

தங்கள் மேல் விலாசம் தெரியப்படுத்தினல் அனேக வைத்திய புஸ்தகங்கள், மருந்துகள் அடங்கிய பெரிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :—பி. கே. கோவிந்தராஜ் மெடிகல் ஹால்,
நே. 31, வல்லம்பங்காரு செட்டி தெரு,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

## வைத்திய பரிபாஷை.

---

திரிகடுகு. சுக்கு, மிளகு, திப்பிலி
திரிபலை. கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல்
திரிகந்தம். சந்தனம், அகில்கட்டை, தேவதாரி
திரிசுகந்தம். சாதிக்காய், சாபத்திரி, லவுங்கம்
திரிபழுகம். பால், நெய், தேன்
திரிமஞ்சள். மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள்
திரிமூலம், திப்பிலிமூலம், சித்திரமூலம், கண்டுமூலம்
திரிபத்திரி. லவங்கப்பத்திரி, ஜாபத்திரி, தாளிசப்பத்திரி
திரிநிம்பம், வேம்பு, நிலவேம்பு, கரிவேம்பு
திரிசாதம். லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, நாககேசரம்
முக் கூட்டுவெண்ணெய். நெய், யெள்ளெண்ணை, ஆமணக்
[குயெண்ணெய்
முக்காலம், காலை, உச்சி, மாலை
திரிதோஷம். வாதம், பித்தம், சிலேத்துமம்
முப்பழம். வாழைப்பழம், மாம்பழம், பெலாப்பழம்
சதுர்சாதம். லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, நாககேசரம்
ஏலம்மஹாபஞ்சமூலம். வில்வவேர், மின்னவேர், ஈச்சுரமூலி
[பாதிரிவேர், பெருமரவேர்பட்டை
லகுபஞ்சமூலம். கண்டங்கத்திரி, இருவிதம், ஈரிலைத்தாமரை
[மூன்றிலைத்தாமரை, நெருஞ்சி
ஷை (ய) சரக்குகள் கூட்டுச்கு தசமூலமென்பது பெயர்
திருபணபஞ்சமூலம். நாணல்வேர், தர்பைவேர், கரும்பு
[வேர், நெல்பயிர்வேர், வெள்ளை, அருகம்வேர்
பஞ்சகோலம். சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம்,
[சித்திரமூலம்
பஞ்சவாசம். லவங்கம், ஏலப், கருப்பூரம், ஜாதிக்காய், தக்
[கோலம்

பஞ்ச அமிர்தம். பால், சருக்கரை, நெய், தேன், வாழைப்பழம்.

அஷ்டமூலம். முத்தக்காசு, விஷ்ணுகிரந்தி, பேய்ப்புடல் வேர், சீந்தில்கிழங்கு, கஞ்சாங்கோரை, ஆடாதோடைவேர், கருந்துளசி, பற்பாடகம்.

அஷ்டவர்க்கம். சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம்.

பரிமளதிரவியம். ஜாதிக்காய், ஏலம், லவங்கம், லவங்கப்பட்டை, ஜாபத்திரி.

உப்புபேதங்கள். அமரிஉப்பு, கறிஉப்பு, கந்தஉப்பு, கல்லுப்பு, கம்பி உப்பு, அல்லது வெடியுப்பு, அல்லது பொடிஉப்பு, சவுட்டுப்பு, அட்டுப்பு, சருப்புப்பு, வளையலுப்பு, இந்துப்பு, மாஉப்பு, வழலையுப்பு.

காரங்களாவன. வெங்காரம், சீனக்காரம், சவுக்காரம், அப்ளாகாரம்.

க்ஷாரங்களாவன. நவாக்ஷாரம், யவாக்ஷாரம், சத்திக்ஷாரம், தும்பக்ஷாரம்.

நவஇரத்தினங்களாவன. மாணிக்கம், வயிரம், வைடூரியம், கோமேதகம், புட்பராகம், பவளம், முத்து, மரகதம், நீலம்.

உலோகங்கள். பொன், வெள்ளி, தாம்பிரம், பித்தளை, வெண்கலம், தரா, வெள்ளீயம், காரீயம், துத்தநாகம், இரும்பு, எழுகு, காந்தம், மண்டூரம்.

பாஷாணவகையாவன. பாதரசம், பூரம், லிங்கம், வீரம், கந்தம், தாளகம், அரிதாரம், மனோசிலை, மிருதார்சிங்கி, வெள்ளைப்பாஷாணம், கௌரி பாஷாணம், நீலாஞ்சன பாஷாணம், தொட்டிபாஷாணம், மடல்துத்தம், மயில்துத்தம், துரிசி, அன்னபேதி முதலியவைகளாம்.

லேக்கியம். நாக்கால்நக்கிச் சாப்பிடும்படியான மருந்து.
சோஷியம். உருஞ்சி விழுங்குப்படியான மருந்து.
பேயம். குடிக்கும்படியான மருந்து.
காதியம். மென்று தின்னும்படியான மருந்து.

எரிப்பு திட்டம் (உ) விரல்கனமுள்ள, ஒரு விரகால் எரிப்பது, தீபாக்கினிஎன்பது, மேற்படி கனமுள்ள (உ) விரகால்எரிப்பது, கமலாக்கினி, மேற்படி கனமுள்ள (சரு) விரகால் எரிப்பது, கடாக்கினி.

புடதிட்டம் (உ) முழம் அகலம், (உ) முழம்உயரம், வரட்டியை அடுக்கிப்போடுகிற புடத்திற்குப் பெயர் கஜபுடம்என்பது ஒருமுழபுடம், லகுபுடம்என்பது ஒருஜாண்உயரத்திற்குட்பட்ட புடத்திற்குப் பெயர் குக்குடபுடம் என்பது.

லங்கணம், ஆகாரம் இல்லாமல்வைப்பதற்குலங்கணம் என்றுபெயர், இதில் மூன்றுவிதம் சுத்தலங்கணம், தாரலங்கணம், லகுலங்கணம் ஆம்.

---

## வைத்தியர்கள்
## கவனிக்கவேண்டிய
## சில முக்கியவிஷயங்கள்

செம்பு, பித்தளை, வெங்கலம், இவைகளில்மருந்துகள்செய்யவும் வைக்கவுங் கூடாது, பிரயோகத்தில் அநேகசரக்குகளைச்சேர்ப்பது நல்லதல்ல, பிரயோகத்திலிருக்கிற முக்கியச்சரக்கின்குணத்தை யதிகப்படுத்த இரண்டொன்றும்அந்த முக்கிய சரக்குக்கேதாகிலும் துற்குணமிருந்தால் அதைச் சமனப்படுத்த ஒன்றிரண்டும் இருந்தால் போதும் நிகழ் காலத்து ஜனங்களது தேகஸ்திதியையும், பூசாரத்தையும், காலங்களின் பேதாபேதங்களையும் அறிந்து நூலையே ஸ்திரமென நம்பி மாற்றுமலிருக்கப்படாதென்பது அவிவேகம்.

மற்றொரு முக்கியவிஷயம் வைத்தியன் அறிந்திருக்கவேண்டியதென்னவெனில் ஒவ்வொருஔஷதமும் சரீரத்தில் வியாபித்து செய்கிற குணங்களேயாம் அப்படி யறிந்துக் கொண்டவனே பதார்த்தங்கள் ரோகத்தின் மேல் உபயோகப்படுத்த பாத்திரனுகிருன், குணமும் பிரமாணமும் அறி

யாமல், பதார்த்தங்களை உபயோகப்படுத்துவதால், நமது தேசத்து திவ்விய ஔஷதங்கள்மேல் இங்கிலீஷ் ஜனங்கள் தூஷணை நேரிட்டிருக்கின்றன சில விடங்களில் அகால மிருத்தியு சம்பவிக்கின்றது, இது சகலரும் அறிந்தவிஷயம்.

(ச) மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அபினி சேர்ந்த மருந்துகள் கொடுக்கலாகாது, ரசம்சேர்ந்த ஔஷதங்கள் குழந்தைகளுக்கு அதிகமாய்க் கொடுத்தபோதிலும் கெடுதி செய்யும்.

ரசம், கந்தகம், பாஷாணம் இவைகள் குரூர மருந்துகள் ரோகச் சிகிச்சைகளில் இவைகளைக் கையாடுவதைப் பார்க்கிலும் மூலிகைகளின்மேல் ஞாடகம்வைத்தால், ரோகிகள் வருத்தமடையார்கள்.

ஔஷதம் பிரயோகங்களோடு ரோகிக்கு நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டியது. சுத்தவஸ்திரம் கட்டிக் கொள்ளும்படி செய்யவேண்டியது துர்க்கந்த பதார்த்தங்களையும், சனக்கூட்டத்தையும் நீக்கிவைக்க வேண்டியது, ரோகியை நல்ல காற்றுள்ள விடத்தில் இருக்கச் செய்யவேண்டியது, ரோகிக்கு வேண்டியவைகளை நடப்பிக்க ஒரு ஆள் அருகாமையி லிருக்கும்படிச் செய்யவேண்டியது மேற்கூறிய விஷயங்களில் வைத்தியர்கள் ஞாபகம் வைத்து நடப்பிக்கவேண்டியதவசியம், தவசியம், தவசியம்.

ஔஷதங்கள் செய்வதில் புதியசரக்குகளையே உபயோகப்படுத்தவேண்டியது ஆனால் வாயுவிளங்கம், திப்பிலி, வெல்லம், கொத்தமல்லி, தேன் முதலிய பதார்த்தங்கள் ஒருவருஷத்திற்கு மேல்பட்டதாய் இருக்கவேண்டியது. ஆடாதோடை தண்ணீர்விட்டான்கிழங்கு, சீந்திற்கொடி, கொடிபூசினி வேர், கொடிசம்பாலைப் பட்டை, பெரியசோம்பு, அமுக்கிருக்கிழங்கு, நன்னாரிவேர், நிலவேம்பு இவை முதலிய மூலிகைகளில் யெப்பொழுதும் பச்சையாகத்தானே உபயோகப்படுத்தல்வேண்டும் ஆயின் அவைகள் பச்சையென்று இடைக்குமேல் இடவும் படாது குரைக்கவும் படாது மேலும் மூலிகையின் பிரிவுகள் சொல்லாத இடங்களில், அம் மூலிகையின் வேர்களையே சேர்த்துக் கொள்ளவும்.

கஷாயங்கள், சூரணங்கள் முதலியவைகளில் சேர்க்கப் படும் மூலிகைகளில் ஏதாவது அகப்படாமல் போனால், அவைகளுக்குபதில் சமானகுணமுடையவேறுமூலிகையை, தன்வந்திரி நிகண்டின்படி சேர்த்துக்கொள்ள வேண்டியது ஔஷதங்களில் சேர்க்கப்படும் திரவியங்களது பிரமாணம் சொல்லப்படாத இடங்களில் சமயிடையாய்ச் சேர்த்துக் கொள்ளவும்.

---

## கியாழவிதி.

கியாழங்கள் காய்சுவதில் உபயோகப்படுஞ் சரக்குகளை வகைஒன்றுக்கு (ச) துலாம்யெடையாய் சேகரித்து, அவைகளை இடித்து ஒருபாண்டத்தில்போட்டு அதில்ஒருபடி சுத்த ஜலம்விட்டு மந்தாக்கினியால் எட்டில் ஒருபங்காய்ச்சுண்டக் காச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டியது, சிறியவர்களுக்கு (வ)துலாம் எடைமுதல் ஒருதுலாம் எடைவரைக்குங்கொடுக்கலாம், பெரியவர்கள் (ச) துலாம் வரையிலும் குடிக்கலாம் மேலும் கியாழத்தில் சற்கரை சேர்க்கவேண்டியிருந்தால், வாததோஷத்தில் கியாழத்திற்கு நாலிலொருபாகமும். பித்த தோஷத்தில் எட்டிலொருபாகமும், சிலேத்தும தோஷத்தில் பதினாறில் ஒருபாகமும், சேர்த்துக்கொள்ளவேண்டியது தேனைச்சேர்ப்பதில் சிலேத்தும தோஷத்தில் கியாழத்திற்கு நாலிலொருபாகமும், பித்தரோகத்தில எட்டிலொரு பாகமும், வாதரோகத்தில் பதினாறிலொரு பாகமும் சேர்த்துக் கொள்ளவேண்டியது. ஆகிலும் சீரகம், குக்கிலம், க்ஷாரங்கள், சிலாசத்து பெருங்காயம் முதலியவைகள், (வ) துலாமிறகு அதிகமாய்ச் சேர்க்கப்படாது பால், வெல்லம், நெய், எண்ணெய், சுரசம், சூரணம் முதலியவைகள் ஒரு துலாத்திற்கு அதிகமாய் கியாழத்தில் சேர்க்கப்படாது.

(கல்கம்) அல்லது சரசவிதி இலை பச்சவேர், பச்சைப் பட்டை, இவைகளில் ஒன்றை இடித்துப் பிழிந்ததனிரசத்துக்கு, சுரம் அல்லது சுவரசகஷாயம் என்றுபெயர். அதிமதுரம் அரத்தை, இவ்வித உலர்ந்த சரக்குகளைத் தண்ணீர் விட்டிடித்து அல்லது அரைத்து ரசம்பிழிந்துக்கொள்ள வேண்டியது இதற்க் கல்கஷாயம் என்றுபெயர்.

(சூரணவிதி) சில பதார்த்தங்களை வெண்கலம், அல்லது இரும்புஉரலிலும், மிருதவான பதார்த்தங்களை கல்லுரல் அல்லது கல்வத்திலுமிட்டு தூள்செய்துக் கொள்ளவேண்டியது. மாசிக்காய், கடுக்காய், இவ்வித துவர்ப்பு பதார்த்தங்களை இரும்பு உரலிலிட்டு தூள்செய்யலாகாது கறுத்துக் கெட்டுப்போகும் தூள்செய்வதற்கு வேண்டிய கருவிகளாகிய உரல், உலக்கை, கலுவம், கத்தி, இவை முதலியவைகள் சுத்தியாய் இருக்கவேண்டியது. யோகங்களில் சேருகிறசரக்குகளை முதல் சூரணித்து பிறகு நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டியது முதல்நிறுத்துக்கொண்டு பிறகு சூரணிப்பதில் சேதமாகிற சரக்கு நிறை குறையும் அப்படிசூரணித்து வஸ்திர காயஞ்செய்த சூரணத்தை ஸ்திரீ புருஷாள் அரை துலாம் முதல் ஒருதுலாம் நிறைவரையிலும், சிறியவர்கள் ஏழுகுண்டுமணி எடைமுதல் இருபத்தொன்று குண்டுமணி எடைவரையிலும், தேகதத்துவங்கள்வியாதியின்பலன், தேசகாலங்களை அறிந்து அருந்தல்வேண்டியது. இச்சூரணத்துடன் வெல்லம் சேர்க்கவேண்டுமானால் சம எடையாயும், சர்க்கரையானால் இரட்டிப்பாயும், பெருங்காயம் நெய்யில் வருத்துக்கொண்டும் நெய்யை பெருங்காயத்திற்கு இரட்டிபாயும், ஜலம் சூரணத்திற்கு நாலுபங்கு அதிகமாயும் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

சூரணங்களாகிலும், லேகியங்களாகிலும், மாத்திரைகளாகிலும், அருந்தினபிறகு பாலைக் குடிக்கவேண்டுமானால், வாதரோகத்திற்கு (யஉ) துலாப், பித்தரோகத்திற்கு (அ) துலாம்சிலேத்துமரோகத்திற்கு (ச) துலாம் குடிக்கவேண்டியது, சூரணத்தை முழுகிறவரையிலும் பால்வார்த்து அது சுண்டுகிறவரையில் உலர்த்திவைக்கிறது சுத்தியெனப்படும்.

---

## ஔஷதசேவனகாலம், மருந்து அருந்துங்காலம்

கியாழங்கள் சூரணங்கள் உபயோகிக்கும் காலங்கள் கூறுதயிடங்களில், காலைமாலை அருந்தவேண்டும் ஆனல்வமனவிரேசனங்களுக்கு, வாந்திக்கும் பேதிக்கும் காலையில் மருந்து பிரயோகப்படுத்த வேண்டியது. வாந்தியாவது பேதி

யாவது, செவ்வையாய் ஆனபிறகு லேசாய் புசிக்கவேண்டியது. அபானவாயுவு கீழ்நோக்குகிற வரையிலும் ஔஷதங்களை பிரயோகப் படுத்தவேண்டியிருந்தால் போஜனத்திற்கு முன்பாகவே ஔஷதத்தை பிரயோகிக்கவேண்டியது. அசிரணத்தை ஹரிக்கப்பண்ணும் சகல ஔஷதங்களையும் புசிக்கும் காலத்தில்தானே பிரயோகிக்கவேண்டியது. அக்கினிதீபனத்தையுண்டாக்கும் சகல ஔஷதங்களை போஜனமத்தியில் பிரயோகிக்க வேண்டியது வியானனை சமனிக்கப் பண்ணும் ஔஷதங்களை புசித்த பிறகு பிரயோகிக்கவேண்யடிது. விக்கல் கம்பவாய்வு என்னும் இவைகளுக்கும், சகல ஔஷதங்களையும் புசிக்கும் காலத்தில்தானே பிரயோகிக்க வேண்டியது. அக்கினி தீபனத்தை யுண்டாக்கும் சகல ஔஷதங்களை போஜனமத்தியில் பிரயோகிக்கவேண்டியது. விக்கல் கம்பவாயு என்னும் இவைகளுக்கு போஜனத்திற்கு முந்திபாகிலும், போஜனகாலத்திலாகிலும், ஔஷதங்களை பிரயோகிக்க வேண்டியது. பிறாணவாதம் பித்தம் இவைகளில் மாலைபோஜனமானபிறகு ஔஷதங்களை பிரயோகிக்க வேண்டியது. கொமட்டல், விக்கல், இரைப்பு, விஷம், தோஷம், தாகம் இவைகளில் புசிப்புக்கு முன்பாகிலும், அல்லது புசித்த பிறகாகிலும், ஔஷதங்களை பிரயோகிக்க வேண்டும். கர்ணரோகம், நேத்திரரோகம், நாசிரோகம், சிரோரோகம், இவைகளது வாதாதி தோஷங்கள் ஹரிக்கிறதற்கு பிரயோகிக்கும் ஔஷதங்களை போஜன மத்திய காலங்களிலும், இரவிலும் பிரயோகிக்கவேண்டும்.

---

## மாத்திரைவிதி

மாத்திரைகள் செய்யும்பொழுது அதில்சேரும் சரக்குகள் யெல்லாவற்றையும் சூரணித்து கல்வத்திலிட்டு சொல்லியிருக்கிற அனுபானங்களால் கையில் ஒட்டாமலிருக்கும்படி அரைத்து மாத்திரைகள்செய்து அதிலுள்ள நீர் உலறுகிற வரையிலும் நிழலிலுலர்த்தவேண்டியது. மாத்திரைகளில் ரசம் கெந்தகம் முதலியவைகள் சேர்க்கவேண்டியிருந்தால், அவைகளை வெவ்வேறாக கல்வத்தில் இடித்து பிறகு மற்ற சரக்குகளை கூட்டிக்கொண்டு சகலமும் கலக்கும்படி செவ்வையாய் அறைக்கவேண்டியது.

## சினேஹபாகவிதி ஔஷதக்கூட்டு முறை.

நெய்யி, எண்ணெய், ஜலம், த்ரவபதார்த்தங்கள் இவைகளை சரக்குகளின் கூட்டைவிட நான்கு பங்கு அதிகமாய் சேர்க்கவேண்டியது. சரக்குகள் மிருதுவானவைகளா யிருந்தால் அவைகளுக்கு நான்கு பங்கு அதிகமாய் ஜலத்தையாகிலும் சாற்றையாகிலும் சேர்க்கவேண்டியது. சரக்குகள்கடினமாயிருந்தால் எட்டு பங்கு அதிகமாய் சேர்க்கவேண்டியது. மிகவும் கடினமான சரக்குகளாயிருந்தால் பதினாறுபங்கு அதிகமாய் சேர்த்துக்கொள்ள வேண்டியது. தைலங்களில் சுரசங்களை கால் பலமாகிலும், காலே அரிக்கால் பாகமாகிலும், அரைபாகமாகிலும் சேர்க்கவேண்டியது. பால் தயிர் சுரசம்மோர் முதலியவைகளை தைலங்களில் கலக்கவேண்டியிருந்தால அவைகளுக்குச் சமயிடையாய் சேர்க்கவேண்டியது. மேலும் சுரசங்களை தைலங்களில் கலக்கும்பொழுது அவைகள் அரைக்கால் பாகத்திற்கு அதிகமாய் யிருக்கக் கூடாது. இவ்விதமாய் இடைகளை சமமாய்க்கூட்டி மந்தாக்னியில் தைலங்களை காச்சவேண்டியது தைலங்கள் மிளகு பதமானவுடனே அல்லது அதை அக்கினியில் போட்டால் சப்தமொன்றும் இல்லாமலிருந்தால் பக்குவம் திரண்டதென்று அறிந்து பாண்டத்தையிரக்கி அனல் ஆறினவுடன் வடிக்கட்டி வைத்துக் கொள்ளவேண்டியது.

---

## பஸ்பவிதி.

தாம்பிரம் முதலிய லோகங்களை சாஸ்திரங்களில் பெரியவர்களின் அநுபவத்தால்சொல்லியபிரகாரம் சுத்திசெய்யவேண்டியது சுத்தியானபிறகு அவைகளை ரேக்குகளாயும், பொடிகளாயும் தட்டிக்கொண்டு மூலிகைகளை அறைத்து அதற்கு லேபனஞ்செய்து சிப்பியில்வைத்து அதின்வாயை சீலைமண் செய்து வெய்யலில் உலர்த்தி கஜபுடம்போட அவைகள் பஸ்பமாகும். அந்தபஸ்பத்தை யெடுத்து அநுபான விசேஷங்களால் அரைத்து பில்லைதட்டி சூரியபுடம் வைத்து மறுபடியும் மூசையில்வைத்து சீலைமண்செய்து புடம்வைக்க பஸ்பமாகும் இதேமாதிரியாய் பிரதிபுடத்திலும் செய்யவேண்டியது

இக் கலியுகத்து ஜனங்கள் மிகவும் துர்பலராயும், மந்தாக்கினியுடையவர்கள். ஆனதால் தேசம், காலம் வயது, பிரகிருதி தேகதத்துவங்களை செவ்வைபாய் அறிந்து வைத்தியன் ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது.

---

## கல்வங்கள் லட்சணம்.

கருங்கல்வத்தில் ஔஷதங்களரைத்து உட்கொண்டால்வலிவும் ஆரோக்கியமும் உண்டாம. வெள்ளை கலுவத்தில் பலஹீனிக்கும். பச்சை கலுவத்தில் திரிதோஷ சமனமாகும். சிவப்பு கலுவத்தில் திரிதோஷங்கள் உண்டாகும்.

---

## பத்திய பிரசம்சை.

ரோகிக்கு பத்தியத்தைவிட வேறுமருந்து கிடையாது. பத்தியமில்லாதவனுக்கு ஔஷதப் பிரயோகங்களால் பிரயோசனமில்லை. ஆகையால் பத்தியத்துடன் ஔஷதங்களை அருந்த வேண்டியது.

---

## சிகிச்சை பேதங்கள்.

தெய்வசிகிச்சை, ரசம், கந்தம், பாஷாணம் முதலிய தாதுவர்க்க ஔஷதங்களைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மானிஷசிகிச்சை. ஒஷதி மூலிகைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

ராக்ஷசசிகிச்சை, காரம், க்ஷாரம், அக்கினி, சஸ்திரம், இவைமுதலியவைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மாந்திரீகசிகிச்சை, சித்தசிகிச்சை, மந்திரம், பூசை, ஜபம் முதலியவைகளைக் கொண்டு செய்யும் சிகிச்சை.

---

ஆரோக்கிய பிரசம்சை.

## நோய் அன்றி யிருக்க.

சஹஜமாய் வருஷத்திற்கிரண்டு விசை வாந்திக்கும், மூன்றுவிசைபேதிக்கும், நான்குவிசை நசியமும், ஆறுவிசை அஞ்சனமும், செய்துக்கொள்ளவேண்டியது. தேகத்தினிட தத்துவங்களை அறிந்து யுக்தானுசாரமாய் வமனவிரோசனங்களை அருந்தவேண்டியது.

---

## தைலாப் யஞ்சன குணம்.

தைலாப்யஞ்சனத்தால்,சர்மகதரோகமும், பாதப்யஞ்சனத்தால் நேத்திரரோகமும், நேத்திராப் யஞ்சனத்தால் தந்த தோஷங்களும், ஸ்ரோத்ராப் யஞ்சனத்தால் தந்த ரோகங்களும், சிரோப்யஞ்சனத்தால் சகல ரோகங்களும், தேஹாப் யஞ்சனத்தால் சர்மகத சகலரோகங்களும், நசிக்கும்.

---


கலவியின் ரகசிய மென்னும்

## தாதுரத்நபூஷணி

இப்புத்தகம் அவசியம் ஒவ்வொருவரிடமும் முக்கியமாக இருக்கவேண்டியது இதை வாசிப்பதினால் அநேக நன்மைகள் உண்டு. இதைபால்யர், யௌவனர், வயோதிகர் யாவரும் அவசியம் படிக்கத்தக்கது. இதில் தாதுக்களின் உற்பத்தியும் அதை நல்வழியில் உபயோகப்படுத்துவதினால் உண்டாகும் நன்மையும், தீயவழியிலுண்டாகும் கெடுதிகளும் அதற்கு சிகிச்சைகளும் ஸ்ரீ புருஷர்கள் அனுபவிக்க வேண்டிய வயதும் காலமும் (கலவியின் ரகசியமும்) ஆண்பெண் கருதரிக்கும் நாளும் கிரமகாலந்தப்பிய சம்போகத்தினாலுண்டாகும் கெடுதிகள், துர்நடக்கைகள், சித்தசாபல்யம், வீரியநஷ்டம், சம்போகசக்தி, சிற்றின்ப நோய்கள் அஸ்தப் பிரயோகத்தினால் உண்டாகும் கெடுதிகள், சம்போக விஷயத்தில் கவனிக்க வேண்டிய விதிகள், ஆசன புணர்ச்சி இன்னும் அனேக விஷயங்களும் அடங்கியிருக்கின்றது. விலை அணா-4.

---

விலாசம் :—பி. கே. கோவிந்தராஜ் மெடிகல் ஹால்,
நெ. 31, வல்லம்பங்காரு செட்டி தெரு,
வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

உ

தேவிசகாயம்.

# திரிமூர்த்திகளின் துதி.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

பத்தொடரு பான்மூன்றிற் பெருசுர மாதியநோய்ப்
பரப்பை யெல்லாம்
கொத்தொடுத் துரைக்குமிந்த நூற்புகலத்தத்தைநடை
கூடிக்கையில்
ஒத்தொருநாடியிற்சுழலும் வாதபித்த வையம்போ
லொன்றிற் றோன்றி
முத்தொழிலைப் புரியுமொரு மூவரிரு பதமலரை
முடிமேற் கொள்வாம்.

## வைத்தியன் லட்சணம்.

கிறமமாய் ஆசாரியனிடத்தில் வைத்திய சாஸ்திரத்தை அப்பியசித்தவனும், அமிருதஹஸ்தனும், சிகிச்சை செய்வதில் நுட்பமான புத்தியுடையவனும், பேராசை யற்றவனும் தைரியசாலியும், பிராணிகளிடத்தில் தயைபுடையுவனும், தேஹதத்துவசாஸ்திரம், பதார்த்தகுணசாஸ்திரம், யோகசாஸ்திரம் செவ்வையாய் அப்பியசித்து தன் தேகத்தைப் போல் இதர தேகத்தை பாவித்து ப்ரணய பிரவேசத்தால் இதர சரீர தத்துவங்களை அறிகிறது போல், ரோகியினது சரீர தத்துவங்களை அறிந்து சிகிச்சை பண்ணுகின்றவன் தான் மஹாவைத்தியன் அவன்தான் ஈஸ்வரனுக்கு சமானன்.

## துஷ்டவைத்திய லட்சணம்.

எந்த வைத்தியன் சாஸ்திரானுபவமில்லாது சகலமும் தெரிந்தவன்போல் நடித்துக்கொண்டு சிகிச்சைசெய்யமுயல் கின்றானோ அவனை விஷத்தைப்போல் பார்க்கவேண்டியது

## தூதபரீக்ஷை கூப்பிடவருபவன் பரீக்ஷை.

குருடு-கூன்-செவிடு முதலிய அங்கவைகலயம் உடையவன். பயமுள்ளவன், தீனன், கெட்டியாயும் அமங்களமாயும் பேசுவோன், ரூபஹீனன், மலினவஸ்திரத்தைத்தரித்தோன், சஸ்திரங்களை தரித்தோன், கோலைகையேந்தினவன், ரோகபீடிதன், எப்பொழுதும்கெட்டசெய்கைகளைசெய்வோன், சிகப்புவர்ண புஷ்பமாலிகாலங்கிருதன், சிகப்பு சந்தனத்தைப் பூசிக் கொண்டவன், சர்வாங்கமும் தைலத்தைப் பூசிக் கொண்டவன், சேற்பூசிக் கொண்டவன், அசுசியாயிருப்போன், கருப்புசாவரத்தைதரித்தவன், தான்வரும்பொழுது மற்றொருவனை துணையாய் இட்டுக்கொண்டுவருபவன், ஜடைதரித்தவன், பெண்கள், கிழவன், நானாவிதவர்ணமுள்ள ஈரத்துணியை யாவது, அல்லது ஒரேவஸ்திரத்தை தரித்தவன், கழுதை. ஒட்டகம் எருமை இவைகளின்மீதுசவாரிசெய்து வருபவன், சுரஹீனன், தூரத்திலிருந்து கூப்பிடுவோன்முதலிய லக்ஷணங்களுடையவன், ரோகியிடத்திலிருந்துவைத்தியனைக் கூப்பிடவந்தால் அந்த பிணியாளியிடத்திற்கு வைத்தியன் போகவேண்டியதில்லை.

---

## அசுபசகுனங்கள்.

வைத்தியன் ரோகியிடத்திற்குப் போகும் பொழுது துர்க்கந்தபதார்த்தங்கள், கதாவர்ப்புள்ள பதார்த்தங்கள், உப்பு, பச்சைப்பயிர், எள்ளு முதலான கருப்பு தானியங்கள் வெல்லம், விரகு, விரட்டி, வைக்கல், அமேத்தியம், மிகவும் துர்க்கந்தமாய் நாள் சென்ற கெட்ட பதார்த்தங்கள், சேறு, தைலம், நெய், வெற்றி பாத்திரங்கள், வலை, உரிகள் முதலியவைகள் தென்பட்டாலும், துர்பாஷைகளை பேசுவோன், துப்புகிறவன், கூக்குரலிட் டழுகிறவன், வாந்தி செய்வோன், சண்டாளன், குரூரமான ஆயுதங்களை தரித்தவன் முதலியவர்கள் எதிர்நோக்கினாலும், குரூரமான பக்ஷிகள், நாலுகால் ஜந்துக்கள் இவைகள் ஒன்றக்கொன்று சண்டையிட்டு ஊளையிடுகிற சத்தத்தைக்கேட்டாலும், யுத்தம், கலகம், அபாயம், இவைகளைப் பார்த்தாலும் மேடைகள், வீடு மண்டலங்கள், பூர்ண கும்பங்கள், தற்செயலாய்

பூமியின்மீது விழுந்தாலும், குதிரை - ஆசனம் - படுக்கை - முகம்-குப்புறக்கிடக்கிறதைப்பார்த்தாலும்,உடும்பு-ஒணான்-பூனை - குரங்கு முதலியவைகள் மார்க்கத்தில் குருக்கிட்டாலும், ரோகியின் வீட்டிற்குப் புகும்பொழுது அவ்வீட்டிலிருந்து மங்களகரமான வஸ்துக்கள் வெளியில் வந்தாலும், இவைகளெல்லாம் அசுப சகுனங்கள். ஆகையால் வைத்தியன் அப்பிணியாளியிடத்திற்குப் போகப்படாது.

---

## சுபசகுனங்கள்.

வைத்தியன் ரோகிவீட்டிற்குப் போகும்பொழுது,புருஷனிடதுபக்கத்திலிருந்துவலதுபக்கத்திற்கும், பெண்வலது பக்கத்திலிருந்து இடதுபக்கத்திற்கும்போனல் சுபமுண்டாகும் வினைதீரும் ஆனல் ஆண்யானை-ஆண்கோவேறுகழுதை-பெண் கறுப்பு நாய்-இவைகள் எதிரிட்டால் அசுபமுண்டாகும். குடை டசு-பிராம்மணர்கள்-கன்னிகை - மாமிசம்-கள்-வாரவனிதை - கோரோஜனம் செவிக்கின்பங் கொடுக்கும் சிருங்காரரச பிரதானமான பாட்டு-வாலிபன்-உத்தமனை போகி எதிரிட்டால் சுபமுண்டாகும் அதிசீக்கிரத்தில் நோய்கள் தீரும்

---

## சரீரலட்சணம்.

இந்தச் சரீரம் (எ௨) ஆயிரநாரம்புகளும், ($3\frac{1}{4}$) கோடி ரோமங்களும், சர்மதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கிலதாது என்கிற (எ) தாதுக்களும், பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற (ரு) பூதங்களும், அவைகளாலான (உரு) தத்துவங்களும், (ரு)கோசங்களும்,(கூ)துவாரங்களும், என்கிற இவைகளுடன்கூடி (கூசு) அங்கலமுயாமாயும் இருக்கின்றது.

---

## தேகதத்துவ சாஸ்திர சங்கிரகம்.

அன்னபானுதிகளின் இரசத்தால் உண்டான இந்த மனித தேகத்தின் மேல்பாகத்தில் (ரு) கோசங்கள் இருக்கின்றன. அவைகளில், வயிற்றில் அன்னமயக்கோசம், மார்பில் பிராண மயக்கோசம், சிரசில் மனோமயக் கோசங்கள் இருக்கின்றன. இந்த மனோமயக் கோசத்தில் விக்கியான மயம், ஆனந்தமயம், என்கிற இரண்டுகோசங்கள் கலந்திருக்கின்றன.

இத்தேகம்(கூா) நரம்புகள், (ருாய) அஸ்திகள், (ாஎ) மர்மஸ்தானங்கள், (எா) போலுநரம்புகள், (உச) இரத்த வியாபகமான போலுநரம்புகள், (ருா) மாமிசப் பைகள், (யகூ) கண்டநரம்புகள் யென்கிறவைகளுடன் சேர்ந்திருக்கிறது, யௌவனகாலத்தில் (ருருகூ) பலம் இரத்தம் தேகத்திலிருக்கிறது. ஆண் தேகத்தில் (ய) துவாரங்களும், பெண் தேகத்தில் (யங) துவாரங்களும் இருக்கின்றன. இச்சரீரத்தில் (எ)கலைகள், (எ) ஆசயங்கள், (எ) தாதுக்கள், (எ) உபதாதுக்கள், (எ) பொரைகள் இருக்கின்றன.

மேலும் மார்பில் சிலேத்துமதாது, ஜீவரக்தாயம் யென்கிறவைகள் இருக்கின்றன. இவைகளுக்கீழ் வஸ்தியென்கிற மூத்திரசாயம் யிருக்கிறது. ஆனுல் பெண்களுக்கு(ரு)ரக்தாசயங்கள் அதிகமாய் யிருக்கின்றன.

வாதமானது வீரிய வந்தமாயும், ரஜோகுண சுரூபமாயும், சீதளமாயும் இருக்கிறது. பித்தமானது உஷ்ணமாயும், சத்துவகுண சுரூபமாயும் இருக்கிறது. சிலேஷ்மமானது தாமதகுண சுரூபமாயும், குருவாயும், சீதளமாயும் இருக்கிறது. சிராதமனீ என்கிற நாடிகள் நாபிஸ்தானத்தில் இருக்கின்றன.

---

## இரத்தவிஷய விவரணம்

இப்பூமியின்கண் மனிதனுல் புசிக்கப்பட்ட அன்னபானுதிகளால் ஜனித்த ரசதாது முதலில் கஞ்சிபோலும், பிறகு அதிசூட்சமமான சலரூபமாயும் மாறுகின்றது. பிறகு அந்த

ரசம் பிராணவாயுவால் அடிக்கப்பட்டு சுத்தமாகி தேஜசுடன் கலந்து ரத்தமாகிறது. அந்த ரத்தத்தையே பிராணரசமென்றும், பிராணுதாரத்திற்குக் காரணமாகையால் ஜீவரசமென்றும் சொல்லுகிறார்கள். இது இடைவிடாமல் தேகமுழுதும் வியாபித்துச் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது, இந்த ஜீவரசமானது விஷத்தால் பிறந்த நுரையுடனும் அதிகரித்த சீதள விஷத்தாலும் சேருமாகில் அப்பொழுது அந்தந்த சிலேஷ்ம பித்தத்தால் கலந்து மார்பில் கட்டிகட்டும் இப்படி ரத்தம் ஸ்தம்பித் திருக்கும்பொழுது தேகியானவன் அசைவற்ற மரம்போல் கிடப்பான். ஹிருதயத்திலுள்ள ரத்தகோசம் ஸ்தம்பித்தால் அப்பொழுதே பிராணன் போய்விடும். ஆகையால்மார்பில் இரத்தங்கட்டியாய் கட்டியிருக்கும்பொழுதே, ஊஷ்ணமான ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது. அப்படி பிரயோகிப்பதால் ரத்தமானது கரைந்து தேகமுழுதும் வியாபித்து, தேகியை அசைபச்செய்யும் சாதாரணமாய் ரத்தமானது தேகத்தில் இருக்கவேண்டிய அளவிற்கு அதிகரித்தாலும், குறைந்தாலும் நோயல்லது மரணமாவது சம்பவிக்கச் செய்யாமற் போகாது ஆகையால் பிராணுதாரத்திற்கு ரத்தவியாபகமின்றி வேறுதாரங்கிடையாது இதை வயித்தியர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

---

## ஜடராக்கினி விசாரம்.

தேகபோஷணைக்காக புசிக்கப்பட்ட அன்ன பானுதிகள் போய் சேருகிற இடத்துக்கு (ஆமாசயம்-அன்னுசயம்) என்று பேர். ஆமாசயத்தில் ஜனித்து அன்னபானுதிகளைத் தஹிக்கிற திரவத்துக்கு (ஜடாக்கினி-உதராக்கினி) என்று பேர் அந்த உதராக்கினிகிரமமாய் இருத்தல் சமாக்கினி யென்றும் இடந்தப்பிநின்ருல் விஷமாக்கினி யென்றும் விசேஷ பதார்த்தங்களை தஹிக்கும்படி அவ்வளவு சக்தி யுண்டாயிருந்தால் தீக்ஷணுக்கினியென்றுஞ் சாதாரணமாய் உண்ணுகிற உண்டிபை தஹிக்க வல்லமையில்லாம லிருந்தால் மந்தாக்கினி யென்றும் பெயராம்.

---

## வாதாதி பிரகிருதிபேத விவரணம்.

வாதமானது வெப்பம், இலேசத்துவம், குளிர்ச்சி, சுறசுறப்பு, அணுத்துவமாகியவைகளை ரூபமாகப் பெற்றிருக்கிறது. காது, நாபின்கீழ், இடுப்பு, தொடை, எலும்பு, சருமம் முதலிய இடங்களில் சஞ்சரித்துக்கொண்டு நாபின்கீழ் ஸ்தானத்திலேயே குடிக்கொண்டிருக்கிறது. மேலும் சகலமும் பெற்றிருக்கிற தேகத்தை மனோவுச்சாகம் உசுவாசநிசுவாசங்கள், அபானவாயு, தும்மல், மலம், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு, சப்ததாதுக்களின் சுபாவங்கள், நேத்திராதி இந்திரியங்களின் சுபாவங்கள் ஆகிய இவைகளைக்கொண்டு போஷித்து தான் விகாரமில்லாமலிருப்பதாம்.

வாயுவானது பிராணன், உதானன், வியானன், சமானன், அபானன், என (ரு) பிரிவாயும், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற (ரு) உபவாயுக்களாயும் விவரிக்கப்பட்டு இருக்கிறது.

பிராணவாயுவானது. தலையைவீடாகக் குடிகொண்டு மார்பிலும், கழுத்திலும், சஞ்சரித்துக்கொண்டு, ஹிருதயம், பஞ்சேந்திரியங்கள், சித்தம், புத்தி, பென்பவைகளை தன் வசப்படுத்திக்கொண்டு, உமிழ்தல், இருமல், ஏப்பம், நிசுவாசம், அன்னத்தையுட்செலுத்தல். என்னும் இச்செய்கைகளையுண்டாக்கும இது உசுவாச நிசுவாச ரூபமாகவிருக்கும் காரணத்தால் பிராணவாயுவெனப் பெயர் பெற்றது, (பிராணன்-யென்பது, சுவாச ரூபம்.)

உதானவாயுவானது. மார்பே இடமாகவிருந்து மூக்கு கண்டம், தொப்புள், யென்கிற மூன்றிடங்களில் சஞ்சரித்து, பேச்சுண்டாவதற்குக் காரணமாகி சரீரத்திற்கு வன்னம், ஒளி, நினைப்பு யென்னும் குணங்களை உண்டாக்கிறது (உது-என்பது, மேல்)

வியானவாயுவானது. இருதயத்தையே இடமாக்கிக்கொண்டு தலைமுதல் பாதம்வரைக்குஞ் சஞ்சரித்துக்கொண்டு நடத்தல், குனிதல், நிமிர்தல், இமைத்தல், விழித்தல் என்

னுஞ் செய்கைகளே உண்டாக்குகிறது (விபானன் என்பது, பரவுதல்)

சமானவாயுவானது நாபிஸ்தானமே இடமாக்கிக் கொண்டு வயிறுமுற்றிலுஞ் சஞ்சரித்துக் கொண்டு புசிக்கும் அன்னபாஞதிகளே உள்ளிழுத்துக் கொண்டு அவைகளைச் சீரணிப்பித்து, சாரம்வேறு, திப்பிலி வேருகப் பிரித்து, மலமுத்திரமாகச் செய்கின்றது (சமம்-என்பது, நடு)

அபானவாயுவானது, குதஸ்தானமே இடமாக்கிக் கொண்டு இடுப்பின் பூட்டிலும், ஆண்குறி, பெண் குறிகளிலும், அடிவயிற்றிலும், அடிதொடையிலுஞ் சஞ்சரித்துக் கொண்டு, சுக்கிலம், சோணிதம், மலம், மூத்திரம், கருப்பம் என்னுமிவை முதலியவைகளே வெளிப்படுத்துகின்றது. (அபானம்-என்பது, கீழ்)

இந்த பஞ்சவாயுக்களு மல்லாமல் வாயிலிருந்து வாந்தி பண்ணச்செய்வது நாகனென்றும்நேத்திரத்திலிருந்து விழிக்கச்செய்து (கூர்மனென்றும்) மூக்கில்ருந்து குருகுருக்துத் தும்மச்செய்வது(கிருதரனென்றும்) கொட்டாவிகொள்ளச் செய்வது (தேவதத்தனென்றும்) வீங்கச்செய்வது (தனஞ் சயனென்றும்) ஐந்து உபவாயுக்கள் இருக்கின்றன.

பித்தமானது அதிஉஷ்ணம்,இலேசத்துவம்,பளபளப்பு விரோசனம், சலத்தைதருதல், ஆகிய இவைகளே ரூபமாகப் பெற்றிருக்கின்றது. உந்தி, கண், ஆமம், ரசதாது, உதிரம், வியர்வை சருமப, ருசியை யுணர்த்த நாவிலூறுகின்ற ஜலம் ஆகிய இவ்விடங்களில் சஞ்சரித்துக் கொண்டு விசேஷமாக உந்திஸ்தானத்திலேயே இருக்கும் மேலும், சீரணம், உஷ்ணம், பார்வை, பசி தாகம், சுவை, காந்தி, புத்தி, ஞாபகம், சவுரியம், மிருது முதலிய குணங்களேக் கொண்டு தேகத்தைப் போஷித்துத் தான் விகாரமில்லாம லிருக்கின்றது. அது அனலம், இரஞ்சகம், சாதகம் ஆலோசகம் பிராசகம் என ஐந்து பிரிவாய் இருக்கின்றது.

அனிலபித்தமானது (ஆமாசய ஸ்தானத்துக்கும் சீதகட்டு ஸ்தானத்துக்கும் நாபிஸ்தானத்துக்கும்) மத்தியில் இருந்து பஞ்ச பூதங்களுக்குப் பிரதானமாகித் தனது அக்கினியால் சகல பதார்த்தங்களே வளரப்பண்ணி, சீரணிக்கச்

செய்து மலம் சலம் வெவ்வேறாகப்பிரித்து மற்றநான்கு வகைப் பித்தங்களுக்கு பலத்தைக்கொடுத்து காப்பாற்றி வருகிறது அப்படிக் காப்பாற்றி வருவதால் இதற்கு பாசக பித்தமென்றும் சொல்லுவார்கள். (அனலம் - என்பது, அக்கினி) பாசம்-என்பது, அன்பு

ரஞ்சகபித்தமானது சீதக்கட்டு ஸ்தானத்திலிருந்து ரசதாதுவைப் போஷித்து வருகிறது, (ரஞ்சகம், என்பது, போஷித்தல்.)

சாதகபித்தமானது. இருதய ஸ்தானத்தில் வாசம் பண்ணிக்கொண்டு, அறிவு, புத்தி, அபிமானம் முதலானவைகளைக்கொண்டு இஷ்டமான பிரயோஜனங்களைச் சாதித்து வருகிறது (சாதம்-என்பது, துணைக்காரணம்.)

ஆலோசக பித்தமானது. கண்களில் வாசம் பண்ணிக்கொண்டு எல்லாப் பொருள்களையும் நன்றாய்த் தெரியப் படுத்துகின்றது. (ஆலோசகம்-என்பது, அறிவிப்பு)

பிராசக பித்தமானது. சருமத்தில் வாசம்பண்ணிக் கொண்டு சருமத்தில் ஒளிகெடாமல் காந்தியை யுண்டு பண்ணுகின்றது (பிரகாசம்-என்பது, காந்தி.)

சிலேஷ்மமானது. வழுவழுப்பு, சீதளம்கனத்தல், மந்தத்துவம், நாறுதல், மினுமினுப்பு, ஸ்திரம்ஆகிய இவைகளை ரூபமாகப் பெற்றிருக்கின்றது. மார்பு,சிரசுநாசி, நா, கண்டம், புத்தி, கணுக்கள், உரோமம், ஆமம், ரசதாது,மேதேரதாது ஆகிய இவ்விடங்களில் சஞ்சரித்துக்கொண்டு விஷேசமாக மார்பு ஸ்தானத்திலேயே இருக்கின்றது, மேலும் மழமழப்பு, அசையாமை, கீல்களுக்குறுதி முதலிய குணங்களைகொண்டு தேகத்தைப் போஷித்துத் தான் விகாரமில்லாம லிருக்கின்றது இது அவலம் பகம், கிலேதகம், போதகம், தருப்பகம், சந்திகம்எனஐந்து பிரிவாகி இதயஸ்தானத்திலிருக்கின்றது.

அவலம்பக சிலேஷ்மமானது இதய ஸ்தானத்திலேயே வாசம் பண்ணிக்கொண்டு, தனது சுபாவ பராக்கிரமத்தைக் கொண்டு திரிகஸ்தானத்திற்கு அதாவது (முதுகின் கீழ்நடுத் தண்டெலும்பின் மூட்டும் இரண்டுதொடைகளினெலும்பின்

மூட்டுஞ் சேர்ந்திருக்கும் இடமாம், அன்னசாரத்தைக் கொண்டு இதயஸ்தானத்துக்கும் சலத்தொழிலைக் கொண்டு மற்ற நான்கு சிலேஷ்மங்களுக்கும், ஆதாரமாய் இருக்கின்றது இது ஒவ்வொரு வேளை யிளகியும், கீல்களைவிட்டு நீங்கியும், பின்பு கூடியும் இருக்கும் இப்படியிருந்தாலும் நிகழ்ச்சி ரூபமாகவே இருக்கும் இந்தத் தொழிலைக்கொண்டு மற்ற நான்கு சிலேஷ்மங்களுக்கும் ஆதாரமாய் யிருக்கின்றது (அவலம்பகம் யென்பது, பற்றுதல்)

கிலேதக சிலேஷ்மமானது, ஆமாசயஸ்தானத்திலேயே வாசம் பண்ணிக்கொண்டு உண்ணப்பட்ட அன்னபானுதிகளை மிருதுவாக்குகிறது (கிலேதகம்-என்பது, சரம்)

போதக சிலேஷ்மமானது. நாவில் வாசம் பண்ணிக் கொண்டு உண்ணுகிற அறுசுவைகளையும் தெரிவிக்கின்றது. (போதகம்- என்பது, உணர்தல்)

தருப்பகசிலேத்மமானது. சிரசில் வாசம் பண்ணிக் கொண்டு இரண்டு கண்களுக்குங் குளிர்ச்சியைத்தருகின்றது (தருப்பகம்-என்பது, சுகம்.)

சந்திகசிலேஷ்மமானது. கீல்களில் வாசம் பண்ணிக் கொண்டு சுபாவமாக சகலகில்களையுந் தளரச்செய்கின்றது, (சந்திகம்-என்பது, கீல்.)

வாதத்துக்கு பாதம் முதல் நாபிவரைக்கும் இடமென்றும் பித்தத்துக்கு நாபிமுதல் கண்டம் வரைக்கும் இடமென்றும் சிலேஷ்மத்துக்கு கண்டமுதல் சிரசுவரைக்கும் இடமென்றும் சிலநூலாசிறியர்கள் எழுதியிருக்கிறார்கள் அன்றியும் மலத்தைப்பற்றியது வாதமென்றும், மூத்திரத்தைப்பற்றியது பித்தமென்றும், விந்துவைப்பற்றியது சிலேஷ்ம மென்றும், சில சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

---

## வாதத்தின் தொழில்.

சரீரத்தில் கருநிறம், செந்நிறம், சஞ்சரிப்பு, பிகுத்தல், முடக்குதல், நோவு, நித்திரையின்மை, இளைப்பு, ரோகம்,

குத்தல், குடைச்சல், துவைத்தல்போலும், பிடித்தல் போலு மிருக்குதல், திமிர், முறுக்குதல், குன்றல், புரளல் சந்தோஷம், தாகம், நடுக்கல், நடித்தல், குழிவிழுதல், களைத்தல், அவயவபின்னம், திருகிக்கொள்ளல், அசைதல், மரம்போற் கிடத்தல், துவர்ப்பாக வாய்நீரூறல் என்னும் இக்குணங்களை உண்டாக்குதலாம்.

---

## பித்தத்தின் தொழில்.

சரீரத்தில் மஞ்சள்நிறம், வெப்பம், தாகம், ரோகமில்லாது போலிருத்தல், ஜீரணவேளையிற் காங்கைசெய்தல், வியர்வை, எப்போதும் வியர்வைகசிதல், ஞாபகம், கோபம் அசைவின்மை, மூர்ச்சை, அவமதிப்பு, புளிப்பாகவும், கசப்பாகவும், காரமாகவும், வாய் நீரூரல், என்னுமிக்குணங்களை யுண்டாக்குதலாம்.

---

## சிலேஷ்மத்தின் தொழில்.

சரீரத்தில் சுவேதநிறம், வழுவழுப்பு, பாரிப்பு, தினவு சீதளம், மரியாதை, கில்களசையாமை, கர்வம், மந்தகுணம், மினுமினுப்பு, விரைவில் சிரணித்தல், அநித்திரை, உப்பாகவும், தித்திப்பாகவும், வாய் நீரூறல் யென்னும் இக்குணங்களை யுண்டாக்குதலாம். இதுவெகு நாள் நீடித்து உபத்திரவம் பண்ணத்தக்கதென்றறிக.

நாடி, ஸ்பர்சம் ரூபம், சப்தம், நேத்திரம், மலம், மூத்திரம், நாக்கு என்கிற எட்டுவிதப் பரிசைகளால் தேகத்தின் தோஷங்களை யறியலாம்.

---

## நாடிபார்க்கும் விதி.

வைத்தியன் ரோகியின் வலதுகையை முழங்கை முதல் தனது இடதுகையால் செவ்வையாய்பிடித்து அந்தக்கையின் அங்குஷ்ட மூலத்தில் உட்புர மத்தியில் தனது இடது கைவிரல்களால் வாயுவின் கதியை பரிட்சித்து ரோகநிதானம் அறியவேண்டியது.

தைல அப்பியங்கன ஸ்நானம் பண்ணினவனுக்கும், தூங்கி யெழுந்தவனுக்கும், புசித்தவனுக்கும், ஆற்றின் வெள்ளத்தைப் போல்நாடி அதிவேகமாய் நடக்குமாகையால் அக்காலங்களில் நாடி பரீக்ஷிக்கக்கூடாது.

---

## ஸ்திரீபுருஷ நாடிபேதம்.

பெண்களுக்கு இடதுகையிலும், ஆண்களுக்கு வலதுகையிலும், நாடிபரீட்சிக்க வேண்டியதென்று பரமேஸ்வரர் பார்வதிக்கு அருளினர். ஏன் புருஷாளுக்கு வலதுகாமும் அபலைகளுக்கு இடதுகரமும் பரீட்சிக்க வேண்டியதென்று உமாதேவியார் கேட்கச் சொல்லுகிறூர்.

ஓ பெண்கள் நாயகமே! நாபிகூர்மமானது பெண்களுக்கு மேல்நோக்கியும் புருஷர்களுக்கு கீழ்நோக்கியுமிருக்கிறபடியால் ஆண் பெண்களுக்கு நாடிகள் வித்தியாசமாயிருக்கும் ஆகையால் புருஷாளுக்கு வலதுகையும், பெண்களுக்கு இடதுகையும், பேடியாயிருந்தால் அவனது குறிப்பை அனுசரித்து வலது அல்லது இடதுகைநாடிகளை பரீட்சிக்க வேண்டியது.

---

## ஜீவசாட்சி நாடிகதனம்.

ஓ பெண்ணே! அங்குஷ்டமூலத்தின் நாடி ஜீவசாட்சி யென்று சொல்லப்படுகின்றது. அதின் சலனவிசேஷத்தால் ரோகியின் சுகதுக்கங்களை அறியவேண்டியது. மேலும் அதற்கு ஸ்னாயுவென்றும், வசயென்றும், ஹிம்ஸ்ர வென்றும், தமனியென்றும், தாமனியென்றும், தந்துகியென்றும், ஜீவி தஞ்ஞவென்றும், சிரவென்றும் பெயர்களுண்டு.

---

## நாடி சின்னம்.

ரோகியின் பணிபந்தத்தில் வைத்தியன் பரீக்ஷிக்கும் பொழுது (தனது தர்ஜனிவிரல் பெருவிரலின்பக்கத்துவிரல்) ஸ்பரீக்ஷிக்கும்நாடி வாதமென்றும், (மத்யமவிரல் நடுவிரல்)

ஸ்பரீக்ஷிக்கும் நாடிபித்தமென்றும், (அனுமிகை அதின் பக்கத்துவிரல்) ஸ்பரீக்ஷிக்கும்நாடி சிலேத்துமமென்று அறிய வேண்டியது ஓ கௌரி முன்பு உனக்கு யோகதத்துவார்த்தங்களை போதிக்கும்பொழுது துயில்கொண்டதுபோல் இப்பொழுதுமிராமல் கவனமாய்க் கேட்டிருவென்று சொல்லுகிறார் நடுவிரலில்நாடி அதிவேகமாய் நடந்தால் வாதமென்றும், தர்ஜனியில் நடந்தால் பித்தமென்றும், அனுமிகையில் நடந்தால் சிலேத்துமமென்றும், மத்யமதர்ஜனிகளில்கலந்து அதிவேகமாய் நடந்தால் பித்தவாதமென்றும், மத்யம அனுமிகைகளில்கலந்து அதிதீவிரமாய் நடந்தால் வாதசீதளமென்றும், மத்யமாங்குளி நாடிநடக்காமல் அனுமிகை தர்ஜனிநாடிகள் கலந்து அதிவேகமாய்நடந்தால் பித்தசீதளமென்றும், வாதபித்த சிலேத்துமங்கள் மூன்றும் நடந்தால் திரிதோஷம் அல்லது சன்னிபாதமென்றுஞ் சொல்லவேண்டியது. வாயு வீசும்பொழுது அதின் எதிருள்ள பதார்த்தத்தை அதிகமாயும், பின்னுள்ள பதார்த்தத்தை மந்தமாயும், அசையச்செய்வதுபோல் மத்தியிலுள்ள வாதநாடி முதலில் இருக்கும் பித்தநாடியை அதிகமாயும், பின்னாகயிருக்கும் சிலேத்துமநாடியை மந்தமாயும் அசையச் செய்கிறது.

---

## அஷ்டதாதுஸ்தானங்கள்.

ஹஸ்தத்வயகத நாடிகள் இரண்டு, பாதத்வயகத நாடிகள் இரண்டு, கழுத்தின் இருபாரிசத்திலுள்ள நாடிகள் இரண்டு, நாசிகையின் இருபாரிசத்திலுள்ள நாடிகள் இரண்டு, என நாடிகள் எட்டு. பெருவிரலின் மணிக்கட்டுக்குக்கீழ் மூன்று அங்குல ஸ்தானங்களிலும், பாதத்தை அனுசரித்த நாடிகள் குல்பபிரதேசம் அதாவது காலின் மணிக்கட்டுக்குக்கீழ் மூன்று அங்குல ஸ்தானங்களிலும், கழுத்தில் அனுசரித்த நாடிகள் இருபக்கத்தில் இரண்டு அங்குல ஸ்தானங்களிலும் ஆக இவ்வெட்டு ஸ்தானங்களிலும், பிராணவாயுவு அனுசரித்திருக்கின்றது.

அஜீரணம், மந்தம், சுரம், பசி, வாதபித்த சிலேத்துமங்கள் என்னுமிவைகளை கைநாடிகளால் அறியவேண்டியது

அகந்துகசுரம், தாகம், ஆயாசம், புணர்ச்சி, பலஹீனம், பயம், சோகம், கோபம் என்னுமிவைகளைக் கழுத்துநாடிகளால் அறியவேண்டியது.

மரணம், ஜீவிதம், காமம், நேத்திரரோகம், தலைநோவு காதுநோவு, முகரோகம் என்னுமிவைகளை நாசிகையின் நாடிகளால் அறியவேண்டியது.

---

## ஸ்வஸ்தநாடி லட்சணம்.

சாதாரணமாய் நோயில்லாத மனிதனது நாடிக்கு (பூலதா) என்று சொல்லப்படும் அந்தநாடி சர்ப்பத்தின் அசைதல்போலும், ஸ்திரமாயும், பலிஷ்டமாயும் நடக்கும். காலையில் சீதளமாயும், மத்தியானத்தில் உஷ்ணமாயும், மாலையில் தீவிரமாயும் நடக்கும்.

---

## தோஷநாடி.

நாடிவாதரோகத்தில் குருக்காயும், பித்தரோகத்தில் சஞ்சலமாயும், சிலேத்துமத்தில் ஸ்திரமாயும், துவந்தத்தில் கலப்பாயும் நடக்கும்.

வாதத்தில் நாடி பாம்பு அட்டைப்போலும், பித்தத்தில் காக்கை ஊக்குருவி தவளைபோலும், சிலேத்துமத்தில் அன்னம், மயில், புறா, கோழி இவைகளைப்போல் நடக்கும்.

வாதபித்தத்தில் நாடிசர்ப்பத்தைப்போலும், தவக்களைப்போலும் நடக்கும்.

வாத சிலேத்துமத்தில் பாம்பு, அன்னம், இவைகளைப் போல் நடக்கும்.

பித்த சிலேத்துமத்தில் மண்டூரம், மயில், இவைகளின் நடையாயும், சூட்சுமமாயும், சீதளமாயும் இருக்கும்.

திரிதோஷத்தால் உண்டான சன்னிபாதத்தில் நாடி மந்தமாயும், நின்றுநின்று சூட்சுமமாயும் புஜத்தின் மீதிலும் கையிலும் அநேகவிதமாய் நடக்கிறதுபோலும் இல்லாதது போலும் தோன்றும்.

எவனுடைய நாடிதோஷங்கள் அதிகரித்துமிகவும்ஸ்திரமாயும், மந்தமாயும், சூட்சுமமாயும், குறுக்காயும், நடக்குமோ அந்தநாடியை அசாத்தியநாடி என்று அறியவேண்டியது.

எந்தநாடி வியாகூலமாயும், சீதளமாயும், மந்தமாயும்மந்தமாய் நின்றுநின்றும் இருப்பிடத்தை விட்டுவிட்டும் நடக்குமோ அந்த நாடியை மரணகுறிநாடி என்று எண்ணவேண்டியது.

நாசிகை சீதளமாயும், கண்ணிமியில்லாமலும், நாடி தன் இடத்தைவிட்டும் இருக்குமோ அவன் அந்தக்ஷணத்தில் மரணமாவான்.

எவனுடைய, நாடி, தன் இடத்தைவிட்டு கடுகு அளவு அப்புரம் சலித்திருக்குமோ அவன் மூன்று நாளையில் மரணமடைவான்.

## ஸ்பர்ச லட்சணம்.

வாதரோகத்தில் சரீரம் உஷ்ணமாயும், பித்தத்தில் அதிக உஷ்ணமாயாகிலும், அல்லது அதில் சீதளமாயாகிலும், சிலேத்துமத்தில் சீதளமாயும், துவந்தத்தில் பலவிதமாயும் இருக்கும்.

## ரூபலட்சணம்.

சரீரமானது வாதரோகத்தில் கறுப்பாயும், பித்தத்தில் மஞ்சளாயும், அல்லது சிவப்பாயும், சிலேத்துமத்தில் வெண்மையாயும், துவந்தத்தில் கலப்பாயும், சந்நிபாதத்தில் அநேக வர்ணங்களாயும் இருக்கின்றது.

## சத்தலட்சணம்.

வாதத்தில் சமமான வார்த்தைகள், பித்தத்தில் சிறிப்பு பிதற்றல், சிலேத்துமத்தில் ஹீனசுரம், துவந்தத்தில் கலந்த வார்த்தை.

## ரோகோற்பத்தி.

சாதாரணமாய் மனிதனுக்கு ரோகங்கள் உண்டாவதற்கு ஆறுவிதகாரணங்கள் கூறப்பட்டிருக்கின்றது அவை

யெவை எனில் அதிகமாய் நீர் அருந்தல், அதிகமாய் மாதரின் புணர்ச்சி பகலில் நித்திரை, இரவில்ஜாகரணம், மலமூத்திரத்தை அடக்குதல் என்பவைகளாம்.

## சுரகோஸ்வ ரூபம்.

உருத்திரமானது கோபாக்கினியில் ஜனித்தவனும், சகல பூதங்களை தபிக்கச் செய்கிறவனும், மூன்றுகால்கள், மூன்று சிரங்கள் பெரியவயிறு என்னுமிவைகளை யுடையவனும், புலியின் சர்மத்தை போர்வை யுடையவனும், தேகச்சாயை கபிலவர்ணமுடையவனும், மஞ்சள் நிறமுள்ள கண்களையுடையவனும்,குட்டையானதொடையெலும்பையுடையவனும், பயங்கரமானஉருவமுடையவனும், அதிகவலுவையுடையவனும், லோக நாசனத்திற்காக பிறந்தவனுமாகிய புருஷனை சுரமென்று சொல்லுவார்கள் இந்த சுரமென்னும் புருஷன் தாவர சங்கமங்களான சகல வஸ்துக்களில் வெவ்வேறான பெயர்களால் விளங்குகின்றான். இவன் பிராணிகளில் உற்பத்திக் காலத்திலும் முடிவுகாலத்திலும் தோன்றுகிறான். இவனது தாபத்தை தேவர்கள், மனிதர்கள், தவிர மற்றப் பிராணிகள் சகிக்கமாட்டார்கள்.

சுரமானது சகலரோகங்களில் பிரதானமாய்ப் பாவத்தால் சனித்தால் பாபசொரூப முடைய தன் மரணத்தை யுண்டுபண்ணுவதாயும், சரீரத்தை விருத்திசெய்யும் இந்திரியத்தை நாசப்படுத்தி மரண சொரூபத்தை யுடையதாயுமிருக்கிறது. இதுதக்கனது யாகத்தை நாசப்படுத்திய மகாதேவரது கபாலநேத்திரத்திலிருந்து ஜனித்த கோப சொரூபத்தையுடையது, உற்பத்தி நாசனம் இவைகளில் மோகத்தையுண்டாக்கும். மிகவும்சந்தாபசொரூபமுடையது, இது அஹித ஆகாரங்கள் அருந்துவதாலும், மாதிரின் புணர்ச்சி மலமூத்திர மடக்குதல் இந்திரியங்களுக்கு அதிசந்தோஷம் அதிபீடனம்முதலிய அஹிதாசாரங்களால் உற்பவிக்கின்றது. இதுபலபெயர்களால் பசுபட்சியாதி சகல ஜந்துகளில் வர்த்திக்கின்றது. ரோகபதி, பாப்மா, மிருத்யு, ஓஜோசிந, அந்தக என்னும் நாமங்களால் விவரிக்கப்படுகின்றது.

## ஜீவரஜாதி பேதங்கள்.

ஆனைகளுக்கு உண்டாகுஞ் சுரத்திற்கு பாகலமென்றும், மலைகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு சிலாசித்து வென்

றும், பாம்புகளுக் குண்டாகுஞ் சுரம் நிர்மோக மென்றார், தண்ணீருக்குண்டாகுஞ் சுரத்திற்கு நீலிகாவென்றும், பசுக்களுக்குண்டாகுஞ் சுரத்திற்கு சீதிகாவென்றும், நிலத்திற்குண்டாகுஞ் சுரத்திற்கு ஊஷரமென்றும், நாய்களுக்குண்டாகுஞ் சுரத்திற்கு அளர்க்கமென்றும், புலிகளுக்குண்டாகுஞ் சுரத்திற்கு திருஷ்டி ப்ரத்யவரோதனமென்றும், குதிரைகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு அபஸ்முருதியென்றும், மயில்களுக் குண்டாகுஞ் சுரத்திற்கு சிகோத்பேதமென்றும், காக்கைகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு பிரவாஹதமென்றும், பூனைகளுக்குண்டாகுஞ்சுரம் பிருஷ்டபேதமென்றும், அல்லது ரோமநாசனமென்றும், பெருச்சாளிக் குண்டாகுஞ்சுரம் தத்துரமென்றார், கிளிகளுக்குண்டாகும்சுரம் பித்தகாய மென்றும், சிருத்தை முதலிய ஜந்துக்களுக் குண்டாகும்சுரம் ஸ்ரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு மித்தியா ஆஹாராதிகளில் சுரமுண்டாகும் யானை முதலிய காட்டு மிருகங்களுக்கு மரண காலத்தில் தற்கடையாய் சுரமுண்டாகும், இந்தப் பிரகாரம் அநேக விதங்களாய் சுரங்கள் சிவனது கோபசொரூபத்தையுடையதாயிருக்கின்றன.

நிகழ்காலத்துக்குச் ஜனங்களுக்குச் சம்பவிக்கிற சுரங்களின் நிதானங்களையுஞ் சிகிச்சைகளையுந் தெரியக் காட்டி பிறகு மற்ற சுரங்களைக் கிரமமாய் சொல்லுகிறேன்.

## ஆயிக சுரலட்சண மென்பது
## முறைக்காய்ச்சலின் லட்சணம்.

(மாதவநிதானம்) சரீரத்தில் குளிர், சரீரஞ் சிலுசிலுத்தல் அதிகதாகம், சந்தாபம், மார்நோய், தலைவலி, தேகத்தில் குடைச்சல், வயிற்றுப்பக்கங்களில் சூலை, ஆகாதவஸ்துக்கள் மீது இஷ்டம், சோம்பல், பாதங்கள் மார்புமுகம் என்னும் இடங்களில் வீக்கம், சரீரத்தில் பாண்டுவர்ணம், கண்களில் மஞ்சள் நிறம், நேத்திரங்களில் ரத்தம் இல்லாமல் வெளுத்திருத்தல், அதிசாரம், சரீரத்தில்ஜாட்டியம், கைகால் எரிச்சல் என்னும் லக்ஷணங்களுடையது ஆஹிகசுரம்.

## சீதசுரலட்சணம்.

(சித்திரசாரவணம்) தேகத்திற் குளிர்ச்சி, நடுக்கல், தினவு, சோம்பல், பிரலாபித்தல், மூர்ச்சை பிரமை என்னும் குறியுடையது சீதசுரம்.

(மதாந்திரம்) சிலேத்துமவாதங்கள் இரண்டும் முதலில் ரசதாதுவை அனுசரித்து நடுக்கலையும், குளிரையும் உண்டாக்கிப் பிறகுசுரத்தை உண்டுபண்ணும் அந்த சிலேத்தும வாதங்கள் சாந்தமானபிறகு பித்தம் பிரகோபித்து தாகத்தையுண்டாக்கும், இந்தகுறிகள் சாதாரணமாய் சீதபூர்வ சுரங்களுக்குள்ளதென்று அறியவேண்டியது.

---

## சீதசுரங்களுக்கு

## பாசுபதாஸ்திரரசம்.

(ஆயுர்வேதம்.)

| | |
|---|---|
| ரசபஸ்பம் | சுத்திசெய்தமனோசிலை |
| தாம்பிரபஸ்பம் | சுத்திசெய்தசங்குபாஷாணம் |
| சுத்திசெய்தகெந்தகம் | சுத்திசெய்தகௌரீபாஷாணம் |

இவைகளைச் சமயிடையாய்க் கொண்டு கல்வத்திலிட்டு கரசனுங்கணியிலை ரசத்தால் இரண்டுநாள் விடாமல் அறைத்துமாத்திரைகள் செய்து சிப்பியில்வைத்து சீலைசெய்து வாலுகாயந்திரத்தில் இரண்டுஜாமங்கள் அதாவது கந்தகம் ஜீரணம் ஆகிறவரைக்கும் காடாக்கினியாய் எரித்துச்சாங்கசீதளத்தில்யெடுத்து இரண்டு குண்டுமணி எடை இஞ்சிரசத்தில் ஒருநாளுக்கு இரண்டுமுறை கொடுத்தால் சகல ஆயுகசுரங்களுஞ் சூரியனைக்கண்ட பனிபோல் விட்டுநீங்கும்.

---

## மஹாபாசுபதாஸ்திரரசம்.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | சங்குபாஷாணம் | பாகம் | உ |
| ,, | கபரி | ,, | க |
| ,, | நேர்வாளம் | ,, | க |
| ,, | லிங்கம் | ,, | க |

இந்த தினுசுகளை கல்வத்திலிட்டு கருவூமத்தை இரசத்தால் ஒருஜாமமரைத்து உளுந்தளவு மாத்திரைகள் செய்து அதில்ஒன்றை குளிர்ந்தவுடனே இஞ்சி ரசத்தில் கொடுக்கவும் இந்தப்பிரகாரம் மூன்றுவேளை கொடுத்தால் ஒருநாள் இரண்டுநாள் மூன்றுநாள் முறைக்காய்ச்சல்களும் சீதசுரங்கள், மன்மததாபத்தினால் தபிக்கிற பூங்கொடியாள் தன்நாயகனைக் கண்டமாத்திரத்தில் யெப்படி மன்மதாக்கினி விட்டு ஓடுமோ அவ்வண்ணம் இந்த ஔஷதப்பிரயோகத்தினால் சகல முறை சீதசுரங்களும் விலகிவிடும் இதற்குப்பத்தியம் உப்பில்லாதகஞ்சி கொடுக்கவும். இதைதிரிராத்திரி சுரங்களுக்குங் கொடுக்கலாம் இந்த மகாபாசுபதாஸ்திரரசம் சீதசுரங்களை நாசப்படுத்த சிவபெருமானால் உமாதேவியாருக்கு உபதேசிக்கப் பட்டதென்று சித்யவித்யாபூ என்றும் ரிஷி சொல்லியிருக்கிறார்.

---

இரண்டுநாட் கொருவிசைவருந்

## துவாஹிகசுரலட்சணம்.

(பாஹாட்டம்) கைகாலெரிச்சல் முகம் பாண்டுவர்ணமாய்ச் சோகையுடன் கூடியிருத்தல், வயிற்றில் எரிச்சல், வெளியில் சீதளமாய் இருத்தல், இந்தலட்சணங்களுடையது துவாஹிகசுரம் மேற்கண்ட பாசுபதாஸ்திர மாத்திரையைக் கொடுக்க நீங்கும்.

---

## திரிராத்திரிசுரம்.

### மூன்றுநாளுக் கொருமுறை வருஞ்சுரம்.

(பூஜ்யபாதீயம்) தேகத்தில் கருப்புநிறம், கண்டத்தில் கோழை, தாபம், தேகங்குளிர்ந்திருத்தல் என்னும் குணங்களுடையது திரிராத்திரிசுரம்.

---

## பிரதாபமார்த்தாண்டரசம்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த ரசம் | பாகம் | க |
| ,, லிங்கம் | ,, | உ |
| ,, நேர்வாளம் | ,, | ச |

இவைகளைக் கல்வத்திலிட்டு நாகதந்திப்பட்டை இரசத்தால் இரண்டுஜாமம் அரைத்து (அ) குன்றிமணியெடைமாத்திரைகளுருட்டி வெல்லத் தண்ணீரிலாவது அல்லது சர்க்கரைத்தண்ணீரிலாவது கொடுத்தால் பேதியாகும். இதைக் கொடுத்த மறுநாளிலிருந்து அடியிற்கண்டச் சுராங்குச மாத்திரையை (எ) நாளைக்குக் கொடுக்கச் சொஸ்தமாகும்.

---

## சுராங்குசம்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த இரசம் | பலம் | க |
| ,, கந்தகம் | ,, | க |
| ,, நாபி | ,, | க |
| ,, ஊமத்தன்விரை | ,, | ந |
| ,, மாச்சுக்கு | ,, | ரு |
| ,, திப்பிலி | ,, | ரு |
| ,, மிளகு | ,, | ரு |

இவைகளைச் சூரணித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒருநாளரைத்து இரண்டு குன்றிமணிஇடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஒரு மாத்திரையை இஞ்சிசுரசத்தில் கொடுத்தால் வாதசுரம் பறந்தோடும். இது வாதசுரங்களுக்குகைகண்டமுறை. இந்தமாத்திரைகளை (எ) நாள் காலை மாலை பிரயோகித்தால் சகல முறைக்காய்ச்சல்களும் விஷசுரங்களுந் திரிதோஷ சுரங்களும் வெளிச்சத்தைக்கண்ட இருளைப்போல் விட்டுநீங்கும் என்று ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கின்றது.

---

## விஸ்வாமித்திரர் முறை சுராங்குசம்.

| | | |
|---|---|---|
| தாம்பிரபஸ்பம் | பாகம் | க |
| சுத்திசெய்த தாளகம் | ,, | உ |

இத்தினுசுகளைக் கல்வத்திலிட்டு பாகயிலைச் சாற்றால் ஒரு ஜாமமறைத்தும் பில்லைசெய்து சூரியபுடமிட்டு பூதரயந்திரத்தில்புடம்வைத்தெடுத்துச்சதுரக்கள்ளிப்பாலால்மறுபடியும் அரைத்து முன்பு சொன்னதுபோல் புடம்வைத்தெடுத்துக் கொண்டு (ரு) குன்றிமணியெடை இஞ்சிச்சுரத்தில் கொடுத்

தால் முறைக்காய்ச்சல்கள் யாவும் யெனது தபாக்கினியைக் கண்டு தேவர்களெல்லோரும் எப்படி தம்பியையவிட்டு அய னிடத்திற்கு ஓடினார்களோ அப்படி ஓடிவிடும். இரசவர்க்க ங்களென்று பயப்படவேண்டாம் வாய்பிடிக்காது உபயோ கித்துப் பார்க்கலாமென்று விஸ்வாமித்திர மகாரிஷியால் சொல்லப்பட்டிருக்கிறது.

---

நந்திதேவரால் சகல சுரங்களுக்கும் அருளிச்செய்த

## மஹா சுராங்குச ரசம்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த | ரசம் | சுத்திசெய்தகபரி |
| ,, | கந்தி | அப்பிரக பஸ்பம் |
| ,, | தாம்பிரபஸ்பம் | காவிக்கல் |
| ,, | மனோசிலை | நாகதந்திரவிரை |
| ,, | லிங்கம் | லோகபஸ்மம் |
| ,, | தாளகம் | வெங்காரம் |
| ,, | ஹேமாட்சிகம் | வங்கபஸ்மம் |

இவைகளை வகைக்கு ஒருபலம்வீதம் வாங்கிக்கல்வத்தில் இட்டு பழச்சாற்றால்(ரு)நாள் துளசியிலைச்சாற்றால்(ரு)நாள் சித்திரமூலரசத்தால்(ரு)நாள்புளியிலைச் சாற்றால்(ரு)நாளா க அரைத்துப்பிறகு மேற்கூறிய நாலுவகைச்சாறுகளை சம மாய்க் கலுவத்தில் மருந்துடன் நிறைப்பி நிழலிலுலர்த்திக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒருமாத்திரையை இஞ்சிசுரசத்திற் கொடுத்தால் பசி தீவினையுண்டாகி சகலமான சுரங்களுஞ் சூரியன் இருளை ஓட் டுவதுபோல் ஓட்டிவிடுமென்று உமாதேவியார் தமது உமா கலைக்கியானத்தில் சொன்னார்களென்று நந்திதேவர் சொல் லியிருக்கிறார். இம்முறையை ஸ்ரீராமபிரான் தனதுபத்தினி யாகிய சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு தென்திசைக் குவந்தபொழுது தன்பாரியாளை யிழந்த வியாகூலத்தால் தாபசுரமுண்டாகி அகஸ்தியமுனிவர் இம்முறையைச் செய் துக்கொடுத்து அவரது தாபசுரத்தை சந்திரனைக்கண்ட தாம ரைப்பூவைப்போல் மறைத்துக்கொள்ளும்படி செய்தாராம். இந்த முறையைப்போல சுரங்களை நாசப்படுத்தும் வேறு முறை கிடையாதென்று முனீஸ்வரர்களெல்லோரும் கொண்டாடினார்களாம் இதைச் செய்து அனுபவித்து அதன் நன்மை தீமையை யறிந்துக்கொள்ளலாம்.

## நாலுநாளைக் கொருமுறைவருஞ் சுரம்

(மாதவநிதானம்) குளிர், தேகத்தில் சிலுசிலுப்பு, தலைச்சுற்றல், நடுக்கல், கண்கள் பச்சை நிறம் என்னுங் குணங்களுடையது நாலுநாளைக் கொருமுறைவருஞ் சுரம்.

(பாஹாட்டம்) மேதோதாது மச்சாதாது இவைகளில் எதிலாவதுதோஷம் கலக்குமாகுல் இக்காய்ச்சலுண்டாம்.

---

### இக்காய்ச்சலுக்குத்

### தன்வந்திரி பகவானுற் சொல்லப்பட்ட மஹாதக்கினிகுமாரரசம்.

| | |
|---|---|
| சுத்திசெய்த இரசம் | சுத்திசெய்தலிங்கம் |
| ,, வசநாபி | சுத்திசெய்ததாளகம் |
| ,, வெள்ளைப்பாஷாணம் | அப்பிரரேகபஸ்மம் |
| ,, கந்தகம் | தாம்பிரபஸ்மம் |

இவைகளைச் சமயெடையாக கல்வத்திலிட்டு கரசனுங் கண்ணிரசத்தால் ஒருநாள் அரைத்து அம்மருந்தை காசிக் குப்பியில்வைத்து சீலைமண்செய்து ஒருநாள் வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியால் யெரித்து சீதளமான பிறகு யெடுத்துக்கொண்டு மறுபடியுங் கரசனுங்கண்ணி இரசத்தாலரைத்துக்கடலையளவு, மாத்திரைகள் செய்து பத்துநாள் இஞ்சிசுரசத்தில் காலைமாலை உட்கொண்டால் சகலசுரங்களும் பறந்தோடும். இம்மருந்தை மேற்கண்ட சுரத்திற்கு பஞ்சமூல கஷாயத்தில் சாப்பிடவேண்டியது.

### இதுவுமது.

(மாதவநிதானம்) முறைக் காய்ச்சல்களுக்கு திப்பிலி கடுக்காய் அல்லது திப்பிலி, சீரகம், அல்லதுசர்க்கரை, சீரகம் அநுபானமாய்க்கொண்டு வெந்நீர்ச்சாப்பிடவும் ஆனல் மருந்தை இஞ்சிசுரசத்தில்தானே கொடுக்கவும். இப்படிச் செய்வதால குளிர், நடுக்கம், அதிதாபம் முதலியவைகளுடன் கலந்த முறைக் காய்ச்சல்கள் சீக்கிரமாய் விலகிவிடும்.

## முறைக்காய்ச்சல்களுக்கு நசியங்கள்.

வெள்ளைக் காக்கட்டான், கருங்காக்கட்டான், மிளகு, வெள்ளுள்ளி இவைகள் சமயெடையாய் அரைத்து நசியம் செய்தால் முறைக்காய்ச்சல்கள் பறந்தோடும்.

## இதுவுமது.

குராசாணிஓமம், இந்துப்பு, மிளகு, வெள்ளுள்ளி இவைசமயெடையாய் எருக்கன்பாலில் நசியம்செய்வித்தால் முறைக்காய்ச்சல்கள் கூச்சல்போட்டுவிழுகிற மூர்ச்சை நோயும் விட்டு அகலும்.

---

## மசூசிகா என்னும் அம்மைசுரலக்ஷணம்.

(மாதவநிதானம்) இந்த அம்மைசுரம் வாதபித்தசிலேத்துமத்தால் மனிதர்களுக்கும் கற்களுக்கும் உண்டாகின்றது அதற்குச்சிகிச்சைசெய்வது மிகவும் அசாத்தியமாம். இந்தச்சுரம் உண்டான மூன்றுநாள்வரையிலும்மிகவும்மும்முரமாயிருக்கும். திரிதோஷமுறைக்காய்ச்சல்களுக்குநாடி நடக்கிறது போல் இதற்கும் நடக்கும் மேலும் இது மிகவும் உக்கிராகாரமாய் (அ-கூ-ம) நாட்கள் வரையிலும் தேகத்திற்குள்ளிருந்துபிறகு கொப்பளங்கள் உண்டாகிச் சீழ்கசைந்து பக்குகட்டும் இதுசக்திசொரூபமுடையது மேலும் இதுவாதபித்த சிலேத்துமங்களை ரசாதிசப்த தாதுக்களுடன் அநுசரிக்கிறதினால் யெட்டு அல்லது ஒன்பதாவது நாளில்சுரம் குறைகிறதுஇது முதலில் அதிகுரூரமாய் இருக்கிறதினால் அதன்நுட்பத்தையறிய வைத்தியர்களுக்கு அசாத்தியமாய் இருக்கிறது கொப்பளங்கள் வட்டமாய்க் கண்களுக்கு இன்பமாய்த்தோன்றினால் பித்தத்தால் உண்டானதென்றும், கருங்குரங்குமயிர்களைப்போல் எங்குந் தடித்து விஷத்தைப்போலிருந்தால் சிலேத்துமத்தால்உண்டானதென்றும், தோஷத்துடன் கலந்து நாக்கைப்போலிருந்தால் வாதத்தால் உண்டானதென்றும், திரிதோஷத்தாலுண்டானால் அவன் யெமனைப்போல் பார்ப்பானென்றும் அறியவேண்டியது.

(ஆயுர்வேதம்) உக்கிரரு, அதிககலே, திரிசூலம், டமரகம், கோவம், நேத்திரங்களில் புகையெழும்புதல், பெரியகோரை

கள் என்னுங்குணங்களுடைய சுரத்தை மஹாசக்திகரச் சொரூபமென்று அறியவேண்டியது.

(கலைக்கியானம்)தாகத்துடன் கலந்தகரம், எப்பொழுதும் பசி, தாகம், மூர்ச்சை, முகத்தில் துர்நாற்றம், வாந்தி, நமைச்சல், வயிற்றுநோய் யென்னும் லக்ஷணங்களுடையது மசூரிகாசுரம் அல்லது அம்மைசுரமென்று அறியவேண்டியது இது எட்டுவிதமாய் உண்டாகிறது.

---

## அசாத்திய அம்மைசுர லக்ஷணம்.

(அஸ்வனிசம்ஹிதை) கொப்பளங்கள் பவளக்குண்டுகளைப்போலும், வட்டமாயும், நீண்டும், கறுப்பாயும், சிவப்பாயும், நானாவிதவர்னமாயும், தோன்றியுஞ் சீக்கிரத்தில் மறைந்தும், தாகம், பேதி, தேகநடுக்கல், சுவாசகாசங்கள், பிதற்றல், விக்கல், மூர்ச்சை, தாபம், கால்கைகளில் வீக்கம் என்னும் லக்ஷணங்களிருந்தால் அசாத்திய ரோகமென்றே யறியவேண்டியது.

---

## சிகிச்சைகள்.

(சித்தசார்ணவம்) மசூரிகாசுரங்கள் மிகவுங் குரூரமானவைகளாம். மூர்ச்சை திரிதோஷ சன்னிபாதங்களால் அனேக விதங்களாயிருக்கின்றன. மனிதர்களுக்குண்டாகும் சத்தி சொரூபமான அம்மை சுரங்களுக்குத் தூபங்கள், இயந்திரங்கள், திலகங்கள் பூஜைகள் முதலிய சிகிச்சைகளால சாந்திப்படுத்தவேண்டியது, அவைகளைச் சாந்திப்படுத்தும் விதங்களை ஹரீதகர் ஆத்திரேயர் முதலான ரிஷிகள் சொல்லியிருக்கிறதை நான் சங்கிரத்து சொல்லுகிறேன் அவைகளை மனிதர்கள் ஆசரிக்கவேண்டியது.

---

## வாதபித்த சிலேத்துமத்தால் உண்டான அம்மை சுரங்களுக்கு.

| | |
|---|---|
| மஞ்சள் | சீரகம் |
| சுக்கு | கொத்துமல்லி |

| | |
|---|---|
| வேப்பிலை | பற்பாடகம் |
| ஏலக்காய் | வெரிகாஞ்சொறி |
| ஆடா தோடைசார்க்கு | நொச்சிலை |
| சீந்திற்கொடி | வாயுவிளங்கம் |
| துளசியிலை | தக்கோலம் |
| லவுக்கப்பத்திரி | லவங்கப்பட்டை |
| முக்காவேளை | நிலவேம்பு |
| வில்வம் | |

மேற்கூறிய தினுசுகளைச் சமயெடையா யெடுத்துத் தண்ணீர்விட்டரைத்து சாற்றை பிழிந்து உட்கொண்டால் அம்மை சுரங்கள் சாந்தப்படும்.

---

## இதுவுமது
## மாதவ நிதானம்.

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | வேப்பிலை |
| மஞ்சிஷ்டி | கோரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | நெல்லிப்பருப்பு |
| கொத்துமல்லி | சீந்திற்கொடி |
| அதிவிடையம் | |

இவைகளைச் சமயெடையா யெடுத்துச் சூரணித்து இவ்வெடைகளுக்கு எட்டுபங்கு அதிகமாய்த் தண்ணீர் வார்த்து எட்டில் ஒருபாகம் இருக்கும்படி சுண்டக்காய்ச்சிய கஷாயத்தை கொடுக்கவும்.

---

## இதுவுமது
## ஸித்தவித்தியாபூ.

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | குருவேர் |
| ஜாதிக்காய் | முசுமுசுக்கை |
| தேவதாரி | வில்வவேர் |
| பாகல் | கோரைக்கிழங்கு |
| சீந்திற்கொடி | |

ஷை தினுசுகளை சமயெடையா யிடித்து ஒருபடி ஜலம் விட்டு ஆழாக்கு ஜலம் இருக்கும்படி சுண்டக்காய்ச்சிய

கஷாயத்தைக்கொடுத்தால் அம்மைசுரங்கள் விட்டகலும். குரூரஞ் செய்யாது மேலும் மஹேஸ்பர தாபங்கள் போட வேண்டியது சண்டபானுதிலகம் வைக்கவேண்டியது. இப்படிப்பட்ட அற்புத சிகிச்சைகள் செய்தால் அம்மைசுரங்கள் உடனே விட்டகலும்.

---

## கிருமிச்சுரம் என்பது புழுக்களாலுண்டாகும் சுரம்.

(ஆயுர்வேதம்) சுரம் தேகத்தில் பலவிதவர்ணங்கள் வயிற்றுவலி, மார்பெரிவு, எப்பொழுதும் பிதற்றல், அன்னதுவேஷம் அதிசாரம் என்னும் குணங்களுடையது கிருமிச்சுரம்.

### சிகிச்சை

(மாதவநிதானம்) வாய்விளங்கத்தை புளித்த நீரிலரைத்து காலையில் உட்கொண்டால் புழுக்கள் நாசமாகும். புழுக்களை நாசப்படுத்த இதைப்போன்ற ஔஷதம் வேறு யாதொன்றுங் கிடைப்பதரிது.

### இதுவுமது.

கருங்காலி வேர்ப்பட்டை குடசப்பாலை வேப்பன் பட்டை வசம்பு சுக்கு திப்பிலி மிளகு கடுக்காய் தான்றிக்காய் இவைகளைச் சமயெடையாய்ச் சூரணித்து இவைகளுக்குச் சமமாகச் சுத்திசெய்த வெள்ளைச்சிவதை சூரணங்கலந்து பிரதிதினம் மூன்று விராகனிடை சூரணத்தை பசுவின் மூத்திரத்தில் (எ) நாள் உட்கொண்டால் சகலமான கிருமிகள் நாசமாகும்.

### இதுவுமது

முருக்கன் விதைகள், வெல்லம், எள்ளு, வாய்விளங்கம், இவைகளை சமயெடையாய்த் தேங்காய் நீரிலரைத்து உட்கொண்டால் கிருமிகள் நாசமாகும்.

### இதுவுமது.

(ஆயுர்வேதம்) வாய்விளங்கம், நொச்சிலி, கடுக்காய், எலிக்காது இலைவிரை, வெள்ளுள்ளி, முருக்கன் விரை, சித்திரமூலம் இவைகளைச்சமயெடையாயிடித்து ஒருபடி ஜலம்

விட்டு ஒரு ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சித் தேவர்கள் அமிர்தத்தை அன்புடன் உட்கொண்டதுபோல் கிருமிரோகம் உடையவர்கள் இதை உட்கொண்டால் கிருமிகள் நாசமாகிறது மல்லாமல் திவ்விய தேகமுடையவர்களாவார்கள்.

## இதுவுமது

## பூஜ்யபாதீயம்.

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | முருங்கைவிதை |
| எலிக்காது இலைவிரை | தண்ணீர் விட்டான் கிழங்கு |
| தேவதாரி | வாய்விளங்கம் |
| | திப்பிலி |

இவைகளைச் சமயிடையா எடுத்துச் சூரணித்து ஒருபடி ஜலம்விட்டு ஒரு ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சின கஷாயங் குடித்தாலும் அல்லது பெருங்காயம், வாய்விளங்கம், திப்பிலி, இம்மூன்று தினுசுகளை சுத்தஜலத்திலரைத்து உட்கொண்டாலுங் கிருமிரோகங்கள் நாசமாகும்.

---

## கிருமிரோக பத்தியங்கள்

புடலங்காய், வேப்பம்பூ, சக்கிரவர்த்திக்கீரை, முள்ளாங்கி, பச்சைபயறு, வாய்விளங்கம் (கூம)நாள் பயிராண பழயநெல்லு இவைகளை சகலவிதமான உணவுகளில் கிருமிரோக பீடிதர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

---

## கிருமி ரோகங்களுக்கு ஆகாது.

பால்-இரைச்சிகள்-வெல்லம்-நெய்-தயிர் - கீரைவகைகள் மொச்சைக்கொட்டை - புளி-தேன் - தித்திப்புப் பண்டங்கள் ஆகாது.

---

## ஜந்து சுரலக்ஷணம் என்றுல்

## பூச்சிக்கடியால் உண்டாண சுரலக்ஷணம்

(ஆயுர்வேதம்) உருசி, கண்கள்கறுநிறம், தேகம்பாண்டுவர்னம், வாந்தி, பிதற்றல், அதிசாரம், மார்புநோய், சுரம் முதலியலக்ஷணமுடையது ஜந்து சுரமென்றுசொல்லப்படும்

ஐந்துசுரங்களுக்குக்

## கிடமார்த்தனரசம்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த ரசம் | பாகம் | க |
| சுத்திசெய்த கந்தி | ,, | உ |
| ஓமம் | ,, | ந |
| வாய்விளங்கம் | ,, | ச |
| விஷமுஷ்டிப் பட்டை | ,, | ரு |
| முருக்கன்விரைகள் | ,, | சா |

இவைகளைச் சூரணித்துத் தேனைவிட்டரைத்து (கூ) குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து அதில் ஒரு மாத்திரையைக் கோவைக்கிழங்கு கஷாயத்தில் உட்கொண்டால் ஐந்துரோகங்கள் நிவர்த்தியாகும்.

---

## சுராதிசாரலக்ஷணம்.

(மாதவநிதானம்) சுரம், அதிதாபம், மார்புநோய், அருசிபேதி, சீதம், அல்லது ரத்தம்விழுதல் என்னுங் குணங்களுடையது அதிசாரசுரமென்று சொல்லப்படும்.

---

## கனகசுந்தரரசம்.

(ஆயுர்வேதம்)

சுத்திசெய்தலிங்கம்
மிளகு
வெங்காரம்
சுத்திசெய்தகெந்தகம்
திப்பிலி
சுத்திசெய்தநாபி
சுத்தி செய்த ஊமத்தன் விரை

ஷ டினுசுகள் சமனிடையாய் யெடுத்துக்கொண்டு காஞ்சாயிலைச்சாற்றால் ஒருஜாமம் அரைத்துக் கடலைஅளவு மாத்திரைசெய்து அநுபான விசேஷங்களால் பிரயோகித்தால் அக்கினிமாந்தம், தீவரசுரம் சகல அதிசாரங்கள், கிராணிகள் குமாரனது வேலாயுதம் தாரகாசூரனது தேகத்தையும், புகழையும், நாசப்படுத்தியதுபோல் ஓடிவிடும். இந்தப் பிரயோகத்தை தேவவாசனுக்கு செய்துகொடுத்து அதிசார சுரங்கள் சுவஸ்தமானதாக தன்வந்திரிபகவான் சொல்லியிருக்கிறார்.

| | |
|---|---|
| கொத்துமல்லி | சுக்கு |
| முத்தக்காசு | வில்வப்பிஞ்சு |

இவைகளைச் சமனிடையாய் இடித்து ஒருபடி ஜலம் விட்டு ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சிய கஷாயத்தை உட்கொண்டால் அதிசாரசுரங்கள், விஷச்சுராதிசாரங்கள், மூர்ச்சை, தாகம், வாந்தி முதலியவைகளை பறந்தோடச் செய்யும்.

---

### ரக்தாதிசாரசுரலக்ஷணம்.

(பூஜ்யபாதீயம்) இரத்தகழிச்சல் அல்லது மலம் நீராய்ப் போகுதல், தாகம், தீவரமானசுரம், விலோம வாதம், தேகமாத்யந்தம் நோவு முதலிய குணங்களுடையது ரக்தாதிசாரமென்னப்படும். இதற்கு மேற்கூறிய கனகசுந்தர ரசத்தையே பிரயோகிக்கலாம்.

---

### இதுவுமது

### மாதவநிதானம்.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| தொட்டாற்சிணுங்கி | குடசம்பாலை |
| அதிவிடையம் | ஓமம் |
| வில்வம் | |

இவைகளைச் சமனிடையா யிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சீதம், சூலை, கபம், ரத்தம், இவைகளுடனிருக்கும் சுராதிசாரங்களெல்லாம் சுவஸ்தமாகும்.

---

### தோஷாதிசாரம்.

தேகத்துக்குள் அதிதாபம், வெளியில்சீதளம், கால் கைகள் குளிர்ந்திருத்தல், பிதற்றல், வாந்தி, விக்கல், இருமல், அருசி நடுக்கல், பிரமை, ஆயாசம். தேகம்பாரமாய் இருத்தல், தூக்கம்பிடியாமை, மதம், சீதத்துடன் கலந்த ரத்தக்கழிச்சல், மார்புவலியென்னும் லட்சணங்களுடையது

தோஷாதி சாரமென்று பெயர். இது அசாத்தியம், அதி சீக்கிரத்தில் எமபுரத்தில் போய்க் குடியிருப்பான்.

சுரத்தால் பீடிக்கப்படுகிறவனும், சுரம் நீங்கினவனும், தேகத்தில் வலுவுவருமளவுஞ் சீக்கிரஞ் சீரணமாகாத ஆகாரங்கள் இரைச்சிகள் முதலியவைகள் சாப்பிடப்படாது. குளிர்ந்தஜலம் அருந்தப்படாது. பகல் நித்திரை செய்யப்படாது. கஷ்டமான வேலைவெட்டிகள் செய்யப்படாது. என்று பூர்வீக நூலாசிரியர்களின் உத்தேசம். அப்படியே நடக்குதல் நலமென்று என்னுடைய அநுபோகம்.

மேற்கூறிய விதிகளைத்தவிர்ந்து நடந்தால் சுரம் மறுபடியும் வந்தணுகும் அப்படி போன சுரத்தை விலக்கு வாங்கின வனை லங்கணம் முதலியவைகள் வைத்து சுரங்களின் தன்மைகள் அறிந்து ஔஷதங்கள் பிரயோகிக்கவேண்டியது.

---

## சுரம்விட்டதற்கு லக்ஷணம்.

அன்னத்தின்மீது இஷ்டம், தலைநமைச்சல், தும்மல், சரீரத்திலே சத்துவம், வியர்வை, முகபாகமென்னும் குறிகள் சுரம் விட்டதென்று அறியவும்.

---

## சுரம்வருங்காரணம்.

வாதாதிதோஷபிரகோபத்தால் ஆமாசயத்தைச் சேர்ந்து அஜீரணம் உண்டுபண்ணும் சீரணிக்காத ஆகாரரசங்கள் ரோமகூபங்கள் முதலிய ஸ்ரோர்த்ர மார்க்கங்களைத்தடுத்து பக்குவாசயத்திலிருக்குஞ் சடாராக்கினியை வெளிப்படுத்தி அத்துடன் கலந்து தேகமெல்லாம் வியாபித்து அதிசூடான சுரத்தை உண்டுபண்ணும் சுரத்தில் ரோமகூபாதி ஸ்ரோத்ர மார்க்கங்களைத் தடுக்கிறதால் வியர்வை வெகு துர்பலமாய்த் தட்டுகிறது வியர்வை தோன்றுமை உடல் இந்திரியங்கள் மனது இவைகளில் அதிதாபஞ் சர்வாங்கமும் வேதனையென்னும் லட்சணங்கள் ஏககாலத்தில் யெந்தரோகத்தில் தோன்றுமோ அதற்குச் சுரமென்றுபேர்.

---

## சுரத்தின் முன்ரூபம்.

ஆயாசம், எந்தபதார்த்தங்களின் மீதில் இச்சையில்லாமை, தேகம் நிறம் நானாவிதவர்ணமாய் தோன்றல், வாயில் ருசி வேற்றுமையாய்த் தோணல், கண்களில் நீர்க்கோர்வை, குளிர், வெய்யல், காற்று, படுக்கை இவைகள் மீதிச்சை, துவேஷம், கொட்டாவி, தலைவலி, சரீரம் பாரமாய்த்தோன்றல், கோழை, கோபம், சந்தோஷமில்லாமை என்னும் லட்சணங்களிருந்தால் சுரம் வருமென்று அறியவேண்டியது. மேற்கூறிய வாதபித்தசிலேத்தும சுரங்களின் சாமானிய குறிகள் வாதசுரத்தில் கொட்டாவியும், பித்தசுரத்தில் கண்களெரியும், சிலேத்துமசுரத்தில் அன்னத்துவேஷமும் உண்டாம்.

---

### மாதவ நிதானம்

## வாத சுரம்.

உறுப்புகளில்குத்தல், அதிகமாய் தலைநோவுதல், சரீரம் கொஞ்சம்ஊஷ்ணமாயும் அல்லது அதிகசூடாயாவது மிருக்கும், சரீரமுழுதும்எரிச்சல், மலமூத்திரபந்தித்தல், மலமூத்திரம் சுஷ்கித்து வெளிப்படாமை, அப்படி வெளிப்பட்டால் ஆட்டின் புழுகைப்போல் இருக்குதல், பற்கள் உதடுசருமம் கறுப்பு நிறமாய்த்தோன்றல், கொட்டாவி அல்லது திமிர்விடுதல் யென்றால் தேகம் ஒடித்தல், குளிர், அரோசகம், சரீரம் பந்தித்தல், ஒரு பக்கம் பந்தித்தல், நமைச்சல், கண்டத்தில் குத்தல், வாந்தி, வயிறுப்பல், பிரலாபித்தல், மூர்ச்சை, தாபம், அதிக சீதளம், அதிகமாய் மூத்திரகாதமென்றால் நீர் பந்தித்து கொஞ்சமாய் வருதல், கால்கள் நகங்கள் இவைகளில் குத்தல், சூலை இந்தலட்சணங்களுடையது வாதசுரம்.

(பாஹாட்டம்) ஒருவேளை சுரம் தோன்றல், ஒருவேளை இல்லாமற்போலிருத்தல, மறுவேளை அதிதீவிரமாயும்கொஞ்சமாயும்இருத்தல, ஒருவேளையில் அதிதாபம், சிலவேளையில சீதளமாயிருத்தல், ஒருவேளை கைகால்களில் மிகவுஞ் சூடாயும், மறுவேளையில் குளிர்ந்து மிருத்தல், காலில் திமிர் பிடித்தாற்போலும் இல்லாமலும், உறுப்புகளில் அதிகநோயும்,

ஒருவேளையில்லாமையும், மார்பில்நோவும், புஜங்கள் கழுத்துப்பக்கங்கள் சிரம் இவைகளில் நோவு, புசித்த ஆகாரம் சீரணியாமை, தூக்கம்பிடியாமை, தொண்டையும் உதடுவறளல், முகம், நேத்திரம், நகங்கள், சருமம், மலமூத்திரங்கள், கருப்புடன்கலந்த சிவப்பாயிருந்தல், காதுகளில் ஓசை, ஒருவேளை பக்களனும்புமுதல் சகல எலும்புகளும் நெருங்கிப் போவதுபோல் இருத்தல், வாய்த்து வர்த்தல், பற்களெல்லாம் புளிப்புத்தின்கிறது போல் கூசல், ஏப்பம், கோழை, இருமல், வியாகூலம், நடுக்கல், பிதற்றல், வெய்யிலில் இருக்க இஷ்டம் முதலிய லட்சணங்கள் வாதசுரத்திற்கு உளதென்று அறியவும்.

---

## பித்தசுரம்.

(ஆயுர்வேதம்) தேகமுழுமையும் எரிச்சல், கைகால்களில் அதிக எரிச்சல், அதிதாகம், தேகம்சுற்றல், தலைநோவு, வாயில் தித்திப்பாயிருத்தல், முகம் சுஷ்கித்தல், மூர்ச்சை, அக்கினிமந்தம், அருசி, தேகமிளைத்தல், தேகம் மரத்தல், மனசாஞ்சலியம், எந்தவஸ்துக்களிலும் இச்சையில்லாமை, அதிசாரம், வாந்தி, நித்திரைபங்கம், மலம், மூத்திரம், நேத்திரம், முகம், சருமம், நகம் என்னுமிவைகள் மஞ்சளைப்போலும், பச்சிலை ரசத்தைப்போலும் தோற்றல், கேசாதிபாதம் வரையிலும் சுரம் குபீரென்றுண்டாகும் அப்போது பிதற்றலுடன் அபத்தவார்த்தை, வாயானது காரமாயிருத்தல், நாசியிலும்வெடித்துப் புண்காணல், சீதளவஸ்துவில் விருப்பம், கர்வம், கசப்பு, உமிழ்நீரில் கொஞ்சம் இரத்தம் வீழல், புளியேப்பம், தேகத்தில் சிவந்தபடை, சுவாசத்தில், துர்க்கந்தம் வீசுதல் என்னுமிக்குணங்களையுடையது பித்தசுரம்.

---

## சிலேஷ்ம சுரம்.

(சித்தவித்யாபூ) இருமல், சுவாசத்தோடிரைப்பு, நாசியடைப்பு, வாந்தி, நெஞ்சிற்கோழை, தாகம்பிரமை, கோழை, வெண்மைநிறம், நமைச்சல், சரீரம் மஞ்சள் வர்ணம், வாயா

னது தித்திப்பாய் இருத்தல், அதிக உமிழ்நீர், சிந்தை, பயம், மந்தக்கினி, தாபம், வியர்வை, திணரல், அதிகமாய் மூத்திரம் வெளிப்படுதல், தலைவலி, மரத்தல், கண்டத்தில் நோவு, அதிநித்திரை என்னுங் குணங்களுடையது சிலேஷ்ம சுரம்.

(பாஹாட்டம்) அருசி, ஜாட்டியம், காதில் பிரதிசத்தம், வாயில் இனித்தஜலமூறல், மலமூத்திரங் கொஞ்சமாய் வெளிப்படுதல், மார்பு விகுத்தலுடன் துடித்தல், சுவாசத் தோ டிரைப்பு, நாசியடைப்பு, சரீரமெல்லாம் விகுத்தல், வாந்தி, இருமல், சருமம், மலம்மூத்திரம் இவைகள் வெளுத்தல், சர்வாங்கத்திலும் நோவின்றிச் சிறிதும் பெரிது மாய்க் கண்டு கண்டாசத் தடிப்பெழும்பல், நமைச்சல் என்னும் குணங்களுடையது சிலேஷ்மசுரம்.

---

## வாதபித்த சுரம்.

(மாதவநிதானம்) தாகம், மூர்ச்சை, பிரமை, யெரிச்சல், சோர்ந்துவிழல், தலைபாரம், முகம், தொண்டை வறளல், வாந்தி, தொண்டையில் கிரிகிரிப்பு, யெந்தபதார்த்தத்திலும் இச்சையில்லாமை, கண்கள் இரண்டுப்போதல் கீல்களில் நோவு, கொட்டாவி இந்த குணங்களுடையது வாதபித்த சுரம்.

(பாஹாட்டம்) தலைபாரம், மூர்ச்சை, வாந்தி, சர்வாங் கத்தில் எரிவந்தம், மோகம், தொண்டைவாய்வறளல், எந்த பதார்த்தத்திலும் இச்சையில்லாமை, கீல்களில்நோவு, அதி தாகம், தாபம், பிரமை, ரோமசிலிசிலிப்பு, கொட்டாவி, பிதற்றல் யென்னும் இக்குணங்களுடையது வாதபித்தசுரம்.

---

## வாதசிலேஷ்ம சுரம்.

(ஆயுர்வேதம்) முகம் வற்றல், அரோசகம், கீல்களிலுந் தலையிலும் நோவு, நாசியில் பீநசம்போல் சலம்பெருகல், இருமல், இரைப்பு, மலபந்தம், சைத்தியம், கண்களிரண்டும் மூடல், பிரமை, உடம்பு திருப்புகிறதுபோ லசைதல் யென்னு மிக்குணங்களுடையது வாதசிலேஷ்மசுரம்.

(பாஹாட்டம்) அரோசகம், கீல்களிலும் தலையிலும் நோவு, சர்வாங்கவேதனை, நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு, நா வெளுப்பு, தாகம், மந்தாக்கினி, நெற்றி புருவம் கழுத்து யென்னு மிவைகளில் நோவு, பிதற்றல், அழுதல், பிரலாபம், நித்திரைப் பங்கம், வாயில் தித்திப்போடுவாந்தி, வியர்வை, சுவாசம் என்னுமிக்குணங்களுடையது வாதசிலேஷ்ம சுரம்.

---

## சிலேஷ்ம பித்தசுரம்.

(பூஜ்யபாதீயம்) (சைத்தியம்) தேகமானது ஸ்தம்பம் போல் மரத்தல், சரீர அவஸ்தை, ஆயாசம், வியர்வை, யெரிச்சல், தாகம், இருமல், சோர்ந்துவீழல், சோம்பல், வாயில் கசப்பைத் தேய்த்ததுபோலிருத்தல் என்னுமிக் குணங்களுடையது சிலேஷ்ம பித்தசுரம்.

(பாஹாட்டம்) ரோமச்சிலிர்ப்பு, மார்பிலும் பிடரியி லும் நோவு, நாவில்முட்போலிருத்தல், பிதற்றல், கண்ணிற் சலம் வடிதல், தலைநோவு, அதிநித்திரை அல்லது நித்திரை பங்கம், ஏப்பம், எரிச்சல், வாந்தி, மூர்ச்சை, இரைப்பு, சரீரம் சுருக்கித்து வைத்தது போலிருத்தல் என்னுமிக் குணங்களுடையது சிலேஷ்ம பித்தசுரம்.

---

### இரண்டு தோஷங்களாற் பிறந்த

## தொந்தச்சுர லக்ஷணம்.

(மாதவநிதானம்) தாகம், மூர்ச்சை, பிரமை, தாபம், நித்திரை பங்கம், தலைநோவு, ரோமச்சிலிர்ப்பு, அரோச கம், சுவாசகாசம், வியர்வையில்லாமை, பிதற்றல், நடுக்கல், சோஷை என்னுமிக் குணங்களுடையது தொந்தசுரமென்று ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது.

---

## சந்நிபாதசுரம்.

(மாதவநிதானம்) பகலில் நித்திரை, இரவில் நித்திரை யின்மை, மூர்ச்சை, சரீரத்தில் அதிதாபம், வாதம் அதிக மாய் பிரகோபித்தல், குளிர், வியர்வை, பிரலாபித்தல், மதம்

நகைப்பு, மார்புநோவு, சுவாசகாசங்கள், சைத்தியம், சுரம், தாகம், தலை நோவு, நாவுதுவளலின்றிச்சுட்டதுபோ லிருத்தல், ரோமச்சிலிர்ப்பு என்னு மிக்குணங்களுடையது சந்நிபாதசுரம்.

(பாஹாட்டம்) சந்நிபாத சுரங்களுக்கு சொல்லியிருக்கும் குணங்களெல்லாம் உண்டாயிருக்கும். இச்சுரத்தில் அடிக்கடிதேகமெரிச்சல், அதுபோலவேசைத்தியம், பகலில் நித்திரை, இரவில் நித்திரையின்மை, ஒருவேளை இரவிலும் பகலிலும்நித்திரை, அல்லது அடிக்கடிவியர்வை, ஒருவேளையின்பம். பாடல், ஆடல், ஆசியம், நகைப்பு முதலிய விகாரச்சேட்டை கண்கள் நீர்கம்மலோடு கலங்கிச் சிவந்து சொருகுதல், கண்களின் இமையொட்டிக்கொள்ளல்,விலாப்பக்கங்களிலும், சிரசிலும், அடித்தொடைகளிலும், கீல்களிலும், எலும்புகளிலும், நோவு, பிதற்றல், காதிலிரைச்சலுடன் நோவு, கண்டத்தில் முட்சொருகுதல்போலிருத்தல்,நாவுதுவளலின்றிச் சுட்டது போலிருத்தல், தேகங்கனத்தல், எல்லாக்கணுக்களிலும் துர்ப்பலம், உமிழ்நீரானது சிவந்து நுரைத்திருத்தலோடு கசப்பு தலைநடுக்கலுடன் அதிநோவு, மலபந்தம் அல்லது கொஞ்சக்கொஞ்சமாக மலம் வெளிப்படுதல், முகத்தில் பளபளப்பு, ஈனற்றேனி, பிரமித்தல், சோம்பல், தோஷமானது சிரசில் நாள் பொறுத்துச் சாத்தியப்படுதல், எப்பொழுதும் கண்டத்திற் குறுகுறுவென்னும் சப்தம்இக்குணங்களுடையது சந்நிபாதசுரம்.

---

## தாக சுரம்.

(சித்தாரஸார்வணம்) சர்வாங்க வேதனை, தாகம், வாய்வறளல், விகாரவார்த்தைகள், தாபம், அதிகதுக்கம், மூர்ச்சை, பிதற்றல், அக்கினிமாந்திய மென்னு மிக்குணங்களுடையது தாகசுரம்.

---

## அசீரணம்.

(சரகம்) சுரங்காணல், கொட்டாவி, விக்கல், அக்கினிமாந்தியம், முழங்கால்களில்நோவு, புளியேப்பமென்னு மிக்குணங்களுடையது அசீரணசுரம்.

## பூதசுரம்.

(மாதவநிதானம்) காரணமின்றி நகைப்பு, அழுதல், அதிக சுரம், குமாரகண்ட வலியைப்போல் இழுத்தல், கண்ணையுருட்டி விழித்தல், பிரலாபம், சரீரங்கருக்குதல், அதிகதிண்டி சகல வஸ்துக்களிலும் அபேக்ஷை, பாடல், ஆடல், உரோம சிலிர்ப்பு, சோம்பலென்னு மிக்குணங்களுடையது பூதசுரம் அல்லது பூதா வேதசுரம் என்பர் சிலர்.

---

## அபிகாதசுரம்.

(மாதவநிதானம்) அதிகநடையினாலும், பயிரிடுதல் முதலிய உழைப்பினாலும் இந்த சுரம் பிறக்கும். இதனால் மூல் முதல் உடலிபில் வாய்வானது நீக்கமறநிறைந்து அதிகரித்து இரத்தத்தை வேதனையுடன் கெடுத்து வாயுவால், தேகநிறங்கெடுதி, சர்வாங்க நோவு யென்னும் இக்குணங்களை யுண்டாக்கி சுரம்மேலிடும் இது அதிக உழைப்பினால் வருதலால் அபிகாதசுரம் எனப்பெயர் பெற்றது.

---

## விஷச்சுரம்.

(பாஹடம்) பசி, அதிதாகம் பிரமை, அடிக்கடி சுரம் வருதல், குளிர், மலமூத்திரம் வெளிப்படுதல், சரீரம், எரிச்சல், மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, மார்நோய், ஆயாசம், மோகம், முதல்நாள் அல்லது மூன்றுவது நான்காவது நாட்களிலாவது தாபத்துடன் சுரம்தோற்றல், முதல்நாளில் ஒரு முறை அல்லது பலமுறை குளிர் சுரம் வருதல் என்னுமிக் குணங்களுடையது விஷசுரம், இச்சுரத்தில் அசாத்தியக்குறிக ளிருந்தால் அசாத்தியம் என்றுஞ் சாத்தியக் குறிகளிருந்தால் சாத்திய மென்றும் அறிய வேண்டியது.

(நித்தியநாதீயம்) ஒருவேளை யெரிச்சல், அதுபோல வே சயித்தியம், ஒருவேளை சுரங்காணல், ஒருவேளை இன்மை ஒருவேளை மூன்று நான்கு தகுதிவிட்டுவிட்டுக் குளிர் காணல்யென்னும் லக்ஷணங்களுடையது விஷசுரம்.

சுரத்தால் விடப்பட்டவன் அபத்யயங்கள் செய்வதால் தோஷங்கள் பிறந்து நாளுக்குநாள் ராசாதிசப்த தாதுக்களில் ஒன்றுடன் கலந்து இந்த விஷசுரத்தை உண்டாக்குகின்றது. இதுதோஷத்தால் பிறந்ததான படியால் முதலில் அல்பமாய்த் தோன்றி நாளுக்கு நாளதிகரிக்கும் நீடித்தால் நித்திய சுரத்தை உண்டுபண்ணும்.

(ஆயுர்வேதம்) தோஷங்கள் எழு தாதுக்களுடன் கலந்து விஷசுரங்களை பிறப்பிக்கச் செய்கின்றது இந்தச் சுரம்சந்ததம், சத்தம், துவாயிகம், திருதீயகம், சதுர்த்தகம் யென்று ஐந்துவகைகளாம். தோஷம் ரசாதாதுவை அநுசரித்தால் சந்தத சுரமுண்டாகும். ரத்த தாதுவை அநுசரித்தால் சத்தச்சுரம் உண்டாகும். மாமிசதாதுவை அநுசரித்தால் துவாயிகசுரம், அதாவது இரண்டுநாளைக் கொருமுறைவருஞ்சுரம் உண்டாகும். மேதாதாதுவை அநுசரித்தால் திராயிகசுரம் அதாவது மூன்றுநாளைக் கொருமுறை வருஞ்சுரம் உண்டாகும். அஸ்திமச் சாதாதுக்களை அநுசரித்தால் மரணத்திற்குச் சமானமான சாதுர்த்திகசுரம் அதாவது நான்குநாளைக் கொருமுறை வருஞ் சுரமுண்டாகும்.

ரசதாதுவை அநுசரித்து (எ-ய-யஉ) நாட்கள் வரையிலும் இரவும் பகலும்விடாது காயும்சுரத்திற்கு சந்ததமென்றுபேர். பகலில் இரண்டுமுறை இராத்திரி இரண்டுமுறை அல்லது பகல் ஒருமுறை இராத்திரி ஒருமுறை அல்லது பகலிலாவது இராத்திரியிலாவது இரண்டுமுறை வருஞ் சுரத்திற்கு சத்தமென்றுபேர். மாமிசதாதுவை அநுசரித்து இரண்டு நாளைக் கொருமுறைவருஞ் சுரம் மாதங்கள்வரையிலும் நீடித்திருக்கும் அதற்கு அன்யேத் யுஷ்கம் என்றுபேர். மேதோ தாதுவை அநுசரித்து மூன்றுநாளைக் கொருமுறைவருஞ் சுரந் திரிதீயகம் என்றுபேர். இந்தச்சுரம் அயனங்கள் அதாவது (சு) மாதங்கள் அளவும்பாதிக்கும் அஸ்திதாது மச்ச தாதுக்களை அநுசரித்து வருஞ் சுரம் சாதுர்த்திகம் என்றுபேர் இதுநான்கு நாளைக் கொருமுறைகாய்ந்து வருஷங்கள் தோறும் நீடித்து சுக்கில தாதுவை அநுசரித்து தூர்ப்பல முண்டாகி மரணத்தை யுண்டுபண்ணும் ஆகையால் இந்த விஷசுரத்தின் சாத்தியாசாத்தியங்களை அறிந்து தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது. இந்த விஷசுரத்திற்கு ஆத்திரேயர் காலாக்கினி

ருத்திரபைரவரசத்தை பிரயோகித்தால் அதிசீக்கிரத்தில் நீங்குமென்று சொல்லியிருக்கிருர்.

---

## காலாக்கினி ருத்திர பைரவரசம்.

(அத்திரேயர்முறை.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த வசநாபி | பாகம் | க |
| ,, கந்தகம் | ,, | க |
| ,, பாதரசம் | ,, | க |
| ,, ஜாதிக்காய் | ,, | ½ |

ஷை தினுசுகளை கல்வத்திலிட்டு இடித்து இவைகளுக்கு பேர்பாதிபாகம் திப்பிலிச் சூரணத்தைக்கலந்து வெற்றிலைச் சாற்ருல் இரண்டுநாள் அரைத்து இரண்டு அல்லது மூன்று குன்றியெடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திவைரவ மூர்த்தியை பூசித்து ஒருமாத்திரையை வெற்றிலைச் சாற்றிலாவது இஞ்சிரசத்திலாவது, தும்பைப்பூரசத்திலாவது கொடுத்தால் சீதளசுரங்கள், சந்நிபாதங்கள் விஷசுரங்கள், பீநிசம், அஜீரணசுரங்கள், வாந்தி, தலைநோவு,அக்கினிமந்தம்,தருணசுரங்கள், பழபசுரங்கள் விட்டகலும். இதை வ்யித்தியர் செவ்வையாய் அறிந்து பிரயோகிக்கவேண்டியது. ரோகியின் பலாபலத்தை அறிந்து தயிர்சாதம் கொடுக்கவேண்டியது.

---

## சுக்கிலகதசுரம்.

(ஆயுர்வேதம்) கண்களி லிருள்கம்மல், மர்மஸ்தானமாகிய புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்பின்கீழ் உந்தி, உதடு, பீஜம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின்பெருவிரல், சுண்டுவிரல், தோள்பென்னு மிடங்களில்நோதல்ஆண்குறி சுரங்கள் இந்திரியச்சீரணம், அதிகநித்திரை, பிரலாபம் ஞாபகமரதி, அவயவங்கள் சுட்கித்தல், ஈனத்தொனி, தலை திருகுதல், பல்நோவு, ஏப்பம், விக்கல், அஜீரணம், அரோசகம், பேதி, இருமல், சுவாசம், பிரமை, சர்வாங்க வெளிர

ளுடன் வீக்கம், தடித்தல், வாந்தி, நடுக்கல், நித்திரைபங்கம், சோஷை, அன்னத்துவேஷம், அக்கினிமந்தம், வாய்தித்திப்பு, முகத்தில்வியர்வை, கைகால் குளிர்ச்சியென்னு மிக்குணங்களுடையது சுக்கிலதாதுகதசுரம்.

---

## சுரசிகிச்சை.

| | |
|---|---|
| வெள்ளைச்சாரணைவேர் | கத்திரிச்செடிவேர் |
| எருக்கன்வேர் | கொள்ளுச்செடிவேர் |
| சித்தாமுட்டிவேர் | கண்டங்கத்திரிவேர் |
| நாய்வேளைவேர் | திப்பிலிமூலம், சுக்கு |

இவைகளைச் சமயெடையா யெடுத்திடித்து ஒரு டி ஜெலம்விட்டு ஆழாக்காக சுண்டக்காய்ச்சி மூன்றுவிரற்கடை திப்பிலி சூரணம்போட்டு கலை மாலை காலமண்டலம் உட்கொண்டால் சுக்கிலதாதுகசுரம் இவைகள் நீங்கும்.

சுரங்களது குணங்களை அதிகமாய் விவரித்தால் இக்கிரந்தம் விஸ்தாரமாய் முடியும், ஆகையால் முக்கியமானவைகளை மாத்திரம் விவரித்துக்கொண்டு மற்றவைகளின் பேர்களை மாத்திரம் சொல்லிக்கொண்டு போகிறேன்.

ஆமசுரமென்பது, சீதத்தைப்பற்றியசுரம்
த்தவகாதிசுரமென்பது, சருமத்தைப்பற்றியசுரம்
அந்தர்கதசுரமென்பது, உட்சுரம்
ரத்ததாதுகதசுரமென்பது, ரத்தத்தைப்பற்றியசுரம்
மாமிசகதசுரமென்பது, மாமிசத்தைப்பற்றியசுரம்
அஸ்திகதசுரமென்பது, எலும்பைப்பற்றியசுரம்
காலசுரமென்பது, வயதைஅனுசரித்தசுரம்
ரசகதசுரமென்பது, இரசத்தைப்பற்றியசுரம்

ஆகந்துகசுரமென்பது, அருந்துகின்ற அறுசுவை வருக்கங்களின் காரணமில்லாமல் வருஞ்சுரம், இந்த ஆகந்துக சுரமானது அபிகாதசுரம், அவிஷங்கசுரம், சாபச்சுரம், அபிசாரசுரம், என நான்குபிரிவா யிருக்கின்றது.

அபிகாதசுரம்என்றால் குத்துகாயம் முதலிய விரணங்களினாலும், அக்கினியிடத்திருந்து நடத்துந்தொழிலினாலும்,

அதிகநடையினுலும், பயிரிடுதல் முதலிய உழைப்பினுலும் உண்டான சுரத்திற்குப் பெயர்.

பூதாவேசசுரம், அவுஷதகந்தசுரம், விஷசுரம், கோபச்சுரம், பயச்சுரம், துக்கசுரம், காமச்சுரம் ஆகிய இவ்வேழுக்கும் அபிஷங்க சுரமென்று பேராம் அபிஷங்கமென்பது சேர்க்கை

சாபச்சுரம்யென்பது பெரியோர்கள் சபித்ததினுல் உண்டாகுஞ்சுரம்.

அபிசாரசுரம்யென்ருல் அதர்வணவேத மாரணமந்திரங்களைக்கொண்டு ஒருவன் பெயரைச்சொல்லி ஓமஞ்செய்ததினுல் பிறந்து ஆச்சரியமான கொப்பளங்கள், மனது தபித்தல், தாகம் என்னும் இக்குணங் களை யுடையது அபிசாரசுரம்.

---

## சங்கமதோஷச் சுரம்.

கண்கள் நீர்க்கம்மலோடு கலங்கிச் சிவந்து சொருகுதல், தலையிலும் தொடையிலும் நோவு, வயிறெறிச்சல், கீல்களெல்லாம் நோவுதல், தாகம், ஆராட்டம், நடுக்கல், பொய்பேசல், உள்ளங்கை உள்ளங்கால் குளிர்ச்சி யென்னு மிக்குணங்களையுண்டாக்கும் இதுசையோகத்தினுல் பிறந்ததால் சங்கமதோஷச்சுரம என்றுபேர்.

---

## விஷூசி அல்லது வாந்திசுரம்.

புளித்த ரத்தவாந்தி, தபித்தல் மார்பில் நெருப்புப் பட்டதுபோல் எரிச்சல், கண்டத்திலும் நெற்றியிலும் வியர்வை, பேதியில் சீதம்வீழ்தல், சதாதாகம், துர்பலம், கை கால் குளிர்ச்சி, உடம்பெல்லாந் துவைத்ததுபோலிருத்தல், கிறக்குறைவு இந்திரிய நஷ்டம் யென்னும் இக்குணங்களை யுண்டாக்கும், இந்த விஷூசி சுரமுடையவன் நாலுநாளைக்குள் யெமபுரத்திற்கேகுவான்.

## மேற்படி சுரத்திற்கு சிகிச்சைகள்.

பெருமரப்பட்டை இரசமாவது, அல்லது புளியன் மரப்பட்டை இரசத்தையாவது, மாப்பட்டை இரசத்தை

யாவது, தயிர்காசக்கட்டி இவைகளுடன் கலந்து குடித்தால் வாந்திசுரம் சொஸ்தமாகும்.

(ஆயுர்வேதம்) புளியன்வேர்ப்பட்டை ரசத்தை எண்ணெயிற் கலந்தாவது அல்லது கலக்காமலும் தலை உள்ளங்கால்நாபி என்னுமிடங்களில் தடவி யுட்கொண்டால் வாந்தி சுரம் நிற்கும்.

(ஆயுர்வேதம்)

## வாந்திசுரத்திற்கு அக்கினி குமாரரசம்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த ரசம் | | பாகம்-க |
| ,, கந்தகம் | ,, | க |
| ,, வெங்காரம் | ,, | க |
| ,, நாபி | ,, | ௩ |
| பலகரைபஸ்பம் | ,, | ௩ |
| சங்குபஸ்பம் | ,, | ௩ |
| மிளகுசூரணம் | ,, | அ |

ஷை தினுசுகளை கல்வத்திலிட்டு பழச்சாற்றால் இரண்டு நாள் அறைத்து இரண்டு குன்றியிடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒவ்வொரு மாத்திரையை சரீரபலாபலத்தை அறிந்து காலைமாலை வெற்றிலைச் சாற்றால் பியோகித்து பிறகு சுத்தஜலத்தை குடித்தால் வாந்தி, சுரம், ஆரோக்கியம், சந்நிதாபம், அசீரணம், இவைகள் நீங்கும்.

## காமாலைசுரம்.

(மாதவநிதானம்) மலங்கருப்பாயும், மூத்திரம் மஞ்சளாயும் வெளிப்படுதல், சோம்பல், மேகம், வாந்தி, தாகம், அரோசிகம், வயிறுஉப்பிசம், கண்கள் சிவப்புநிறம், சுரம் யென்னுங் குணங்களுடையது காமாலைசுரம், இதில் சுவாசகாசங்களிருந்தால் அசாத்தியம்.

## தருணாதி சுரபிரமாணம்.

(பாஹாட்டம்) சுரங்களுக்குமுதல்(எ)நாள் பாலிய திசை பிறகுபத்துநாள் பௌவனதிசை, அதின் மேல்வார்த்தீக திசை.

## அசாத்திய சுரலட்சணம்.

(நித்தியநாதீயம்) இரும்பும்பொழுதும்உமியும்பொழுதும் ரசத்துடன் கலந்து கோழைவிழுதல், விக்கல், மார்புநோவு,

சுவாசம், மலமூத்திரம் பந்தித்தல், பிதற்றல் என்னுந்துற்குணங்களுண்டாகி சுரமும் விடாமலிருந்தாலும் அல்லது இரைப்பு மூர்ச்சை, அரோசியம், வாந்தி, தாகம், அதிசாரம், பிரமை, விக்கல், இருமல் தேகவேதனை என்னுமிப்பத்து உபத்திரவங்களிருந்தாலும் மனிதர்களைக் கொல்லும்.

(ஆயுர்வேதம்) இரைப்புடனிருமல், விக்கல், சிரோபாரம், நாவறளல், வாந்தி, மூர்ச்சை, அதிசாரம் என்னுந் துர்க்குணங்களுடன் கலந்து சுரம்விடாமலிருந்தால் மனிதர்களைக்கொல்லும்.

---

## சுரத்தின் தசாவஸ்தைகள்

(ஷித்தரஸாரணம்)(க)வது, கொஞ்சம் ஞாபகமிருக்குதல், (உ) வது, முன்னிறந்தவர்களைக் கண்ணிற்கண்டு பேசுதல்போலிருத்தல், (ங) வது, சித்தப்பிரமை யாகுதல், (ச) வது, மேல்மூச்சுவாங்குதல், (ரு) வது, விழித்தவிழி விழித்ததுபோலிருக்குதல். (சு)வது, வேற்றுக் குறலுண்டாகும், (எ)வது, சரீரமுழுவதும் மரண எரிச்சலெழுப்புதல், (அ) வது, தன்கையினால் முகத்தைத் தடவிக்கொள்ளுதல், (கூ) வது, சரீரமுழுவதுஞ்சிலேஷ்ம வியர்வைகாணுதல், (ய)வது, மரணம்.

---

## சுரத்தின் பிரமாணம்.

(நித்தியநாதீயம்) வாதசுரத்திற்கு (எ) நாட்கள், பித்தசுரத்திற்கு (ய) நாட்கள், சிலேஷ்மசுரத்திற்கு (யஉ) நாட்கள் காலபிரமானஞ் சொல்லியிருக்கிறது.

(அக்கினிமாந்தம்) வாதசுரம் (யச) நாட்கள், பித்தசுரம் (யஅ)நாட்கள், சிலேஷ்மசுரம் (உஉ) நாட்கள், வியாபித்து காலப்பிரமாணம் ஆனவுடன் சொஸ்தமானாலும்மாகும், அல்லது கொன்றாலும் கொல்லும், இந்தக்காலப்பிரமாணங்களுக்கு மேற்பட்டால் பழயசுரமாகிறது என்று அறியவும்.

(ஹரீதம்)வாதாதிசிலேஷ்மசுரங்கள் முதல் ஜாமத்தில் வெளியில் தோன்றினால் (எ) அல்லது ஒன்பது நாட்களில்

சொஸ்தப்படும். இரண்டாவது ஜாமத்தில் தோன்றினல் (௰க) அல்லது பதின்மூன்று நாட்களில் சொஸ்தப்படும், மூன்றும் அல்லது நான்காம் ஜாமத்தில்தோன்றினல் (௰ரு) அல்லது இருபத்தொரு நாட்களில் சொஸ்தப்படும்

பழயசுரங்களுக்கு

## மாலிநீ வசந்தரசம்.

(வித்தாஸாரணம்.)

| | | |
|---|---|---|
| * சுத்திசெய்த கபரீ | பாகம் | உ |
| ,, மிளகு | ,, | க |

ஷ தினுசுகளை கல்வத்திலிட்டுவேப்பன்பட்டைரசத்தால் மூன்றுநாள் அறைத்து ஆறுகுன்றியிடை மாத்திரைகள் செய்து சீரகம், திப்பிலி, அனுபானமாய்ப் பிரயோகித்தால், சிரணசுரம், அஸ்திகதசுரம், தாதுகதசுரம், சுராதிசாரம், மாமிசகதசுரம், புராணசுரங்கள் சொஸ்தமாகும்.

## ரசகல்பங்கள்.

சுத்திசெய்தகபரியை கல்வத்தில் இட்டு (௰க)நாள்இடைவிடாமல் அறைத்து ஏழுகுன்றியெடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஒருமாத்திரையை தேன், திப்பிலி சூரணம், அனுபானயுக்தமாய் உட்கொண்டால் பழைய சுரங்கள் நான்கு ஜாமங்களில் சொஸ்தப்படும்

சுத்தி செய்தகபரியை கல்வத்திலிட்டு பசுநெய்யால் எட்டு நாட்கள் இரவும் பகலும் அறைத்து நாலுகுன்றியெடை மாத்திரைகள் செய்து திப்பிலிசூரணம் அல்லது லவங்கச்சூரணம் அனுபானமாய் உட்கொண்டால் புராண சுரங்கள் ஒரு ஜாமத்தில் விட்டகலும்.

சுத்திசெய்த கபரி மிளகு இவைகள் சமஙிடையாய் கல்வத்தில் இட்டு எறுக்கன்வேர் ரசத்திலும் கோமூத்திரத்திலும் (அம்)

* கபரி என்றால்-துத்தம் என்று அறிக.

ஜாமங்கள் இடைவிடாமல் அரைத்து ஏழுகுன்றியெடை மாத்திரைகள்செய்து இலவங்கம், திப்பிலி, தேன், அனுபானமாய் கொடுத்தால் புராணசுரங்கள் நீங்கிவிடும்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கபரி | | பாகம்-க |
| ,, | நெல்லிக்கா கெந்தகம் | ,, க |

ஷை தினுசுகளை கல்வத்திலிட்டு (அஅ) ஜாமம்வரை ஆட்டுப்பாலாலும், (அஅ) ஜாமம்வரை பசுவின்பாலாலும் அரைத்து நாலுகுன்றிஎடை மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி சீரகம், திப்பிலி, தேன், அனுபானமாய் உட்கொண்டால்பழய சுரங்கள் அக்கினிமந்தம் முதலியவை அரைநாழிகையில் சொஸ்தமாகும்.

## கபரிசுத்தி.

ஒருபலம் கபரியை சூரணித்து கந்தையில் மூட்டை கட்டி (எ) ஜாமங்கள் நரமூத்திரத்தாலும், (உ) ஜாமங்கள் கோமூத்திரத்தாலும், டோலாயந்திரத்தில் யெறித்தாலும், அல்லது பசுவின் நெய்யில் ஏழுபொங்கு வருகிற வரையிலும், வருத்தாலும், சுத்தியாகும். சுத்திசெய்த கபரியை மேற்கூறிய பிரயோகங்களில் உபயோகிக்கலாம்.

# இச்வரமுராரி.

(ஆயுர்வேசம்) சுத்திசெய்த கபரியை (உக) தகுதி பழச்சாற்றுல் சுருக்குகொடுத்து பிறகு அதை ஆர்க்கபொடி செய்து அச்சூரணத்தில் ஆறுகுன்றியெடை சர்க்கரை அனுபானத்திலாகிலும், அல்லது தேன் திப்பிலி அனுபானத்திலாகிலும் உட்கொண்டால் சகல சுரங்களும் சூரியனைக்கண்ட பனிபோல் விட்டகலும்.

(பாஹாட்டம்)

# இச்வரஹரி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுத்திசெய்த | லிங்கம் | பாகம்-க | மிளகு | | பாகம்-க |
| ,, | நாபி | ,, க | திப்பிலி | | ,, க |
| ,, | வெங்காரம் | ,, க | சுக்கு | | ,, க |
| ,, | நேர்வாளசூரணம் | எ | கடுக்காய் | | ,, க |

ஷை தினுசுகளை கல்வத்திலிட்டு பழச்சாற்ருல் ஒரு ஜாம மறைத்து நாலுகுன்றிஎடை மாத்திரைகள் செய்து இஞ்சிசுரசத்தில் உட்கொண்டால் அந்தக்ஷணமே சுரங்கள் நீங்கும்.

(நித்தியா நாதீயம்)

## சகலசுராதிஹர குளிகைகள்.

| | |
|---|---|
| ஜாதிக்காய் | ஏலக்காய் |
| சுக்கு | பத்திரி |
| மிளகு | லவுங்கப்பட்டை |
| திப்பிலி | கர்ச்சூர்க்கா |
| கடுக்காய் | திராக்ஷை |
| தாணிக்காய் | அகர் |
| நெல்லிவற்றல் | முசுமுசுக்கை |
| சந்தனம் | தக்கோலம் |
| கொத்தமல்லி | அதிமதுரம் |
| சீரகம் | அஸ்வகந்தி |

ஷை தினுசுகளை சமமாய் சூரணித்து அதற்குசமமாய் சர்க்கரை பாகுபிடித்து ஷை சூரணத்தைக் கலக்கி இலந்தங்காய் அளவு மாத்திரைகள் செய்து உட்கொண்டால் சகல சுரங்கள், பித்தரோகங்கள், சுவாசங்கள், இருமல், க்ஷயம், பாண்டு, காமாலை, பிரமேஹம் முதலியவைகளை நாசப்படுத்துமென்று பூஜ்யபாதமகாரிஷி சொல்லியிருக்கிருர் கைகண்டமுறை.

---

(ஆயுர்வேதம்)

## இச்வரவைரி குளிகை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுத்தித்த ரசம் | பலம் | 3 | சுக்கு | பலம் | $1\frac{1}{2}$ |
| ,, கந்தகம் | ,, | 3 | திப்பிலி | ,, | $1\frac{1}{2}$ |
| ,, வசநாபி | ,, | 3 | மிளகு | ,, | 5 |
| ,, ஊமத்தன்விரை | | 3 | | | |

ஷை தினுசுகளை கல்வத்திலிட்டு வெல்லத்தண்ணீரில் ஒருஜாமம் அரைத்து குன்றிஎடை மாத்திரைகள் செய்து ஒருமாத்திரையை வெல்லத்தில் கொடுத்து பிறகு வெந்நீர் குடித்தால் எவ்விதமான சுரங்களும் ஏழுநாளைக்குள் சொஸ்தமாகும்.

(சரகம்)

## ஜ்வரகஜகேசரி.

| | |
|---|---|
| முத்தக்காசு | சுத்திசெய்தரசம் |
| சுத்திசெய்த லிங்கம் | சுத்திசெய்தகந்தம் |

இந்த தினுசுகளை சமஎடையாய் கல்வத்திலிட்டு தேனால் ஒரு ஜாமம் அரைத்து ஆறுகுன்றிஎடை மாத்திரைகள் செய்து ஒரு மாத்திரையை சுரம்வந்தவுடனே இஞ்சிசுரசத்தில் கொடுத்து பால்சாதம் சாப்பிட்டால் சகலசுரங்கள் நாசமாகும்.

(ஆயுர்வேதம்)

## நாரசிம்மரசம்.

| | |
|---|---|
| சுத்தித்த நேர்வாளம்பாகம் க | சுத்தித்த நாபி பாகம்-க |
| ,, கந்தகம் | ,, காசம் ,, க |

இந்த தினுசுகளை சூரணித்து இரண்டு குன்றியெடை சூரணத்தை சர்க்கரையில் கலந்துகொடுத்தால் சகலசுரங்களும் நிவர்த்தியாகும்.

---

(ரசரத்னகரம்)

சகலசுரங்களுக்கு

## சண்டேஸ்வர ரசம்.

| | |
|---|---|
| சுத்திசெய்த-ரசம் | சுத்தி நாபி |
| ,, கந்தகம் | ,, தாம்பிரபஸ்பம் |

இந்த தினுசுகளை சமயெடையாய் கல்வத்திலிட்டு இஞ்சிரசத்தால் நாளொன்றிற்கு வுருஜாமம் அரைத்து பிறகு நொச்சியிலைச்சாற்றால் நாளொன்றிற்கு ஒரு ஜாமமாக ஏழுநாளரைத்து குன்றியிடை குளிகைசெய்து நிழலிலுலர்த்தி ஒருமாத்திரையை இஞ்சிச்சுரசத்தில் கொடுத்தால் சகல வாதாதி தோஷங்களையும் அவைகளாலுண்டாகும் சுரங்களையும் அதிசீக்கிரமாய்ச் சொஸ்தப்படுத்தும். குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவும், தாகத்திற்கு பாலை கொள்ளவும் வேண்டுமானால் மா, பெலா, கதலி முதலிய பழங்களைச் சாப்பிடவும். சந்தனம், அத்தர், அகர் முதலிய

வாசனை திரவியங்களைப் பூசிக்கொள்ளச் செய்யவும் குளிகைகளில் இதற்குச் சமமானது கிடையாது இவை வயித்தியர்களை புகழ்பெறச்செய்யும்.

சிவபெருமானுல் சொல்லப்பட்ட

## ஸ்ரீஜயமங்கள ரசம்.

(சித்தாஸாரணவம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுத்தித்த வாலைரசம் | பாகம் | 1 | இந்துப்பு | பாகம் | 1 |
| ,, கந்தகம் | , | 1 | மிளகு | ,, | 1 |
| ,, வெங்காரம் | , | 1 | சுவர்ணபஸ்பம் | ,, | 2 |
| தாம்பிரபஸ்பம் | , | 1 | காந்தபஸ்பம் | ,, | 1 |
| வங்கபஸ்பம் | , | 1 | லோஹபஸ்பம் | ,, | 1 |
| ஹேமாமாஜிகபஸ்பம் | , | 1 | வெள்ளிபஸ்பம் | ,, | 2 |

இவைகளைக் கல்வத்திலிட்டு சூரணித்து ஊமத்த னிலைச்சாற்ருலும், கருநொச்சி யிலைச்சாற்ருலும், தசமூல கஷாயத்தாலும், நிலவேம்பு கஷாயத்தாலும், மும்மூன்று நாள் பிரத்தியேகமாய் ஒவ்வொருவிதச் சாற்ருலரைத்து இரண்டு குன்றியெடை மாத்திரைகளைச் செய்து நிழலி லுலர்த்தி அதில் ஒரு மாத்திரையை சீரகம் தேன் இவை களின் அனுபானமாய் கொடுத்தால் வெகுநாளாக பாதிக் கும் ஜீரணசுரம் எட்டுவிதங்களான சாத்தியா சாத்திய சுரங்கள் துவந்த சுரங்கள், சந்நிபாதசுரங்கள், விஷச்சுரங் கள், மேதோதக மாமிசகத அஸ்திகத மாச்சாகதசுரங்கள், பயங்கரமான அந்தர்கத சுரங்கள் நாலுவித தோஷங் களால் உண்டான சுரங்கள், சுக்கிலகதசுரங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும், இதுசிவபெருமானுல் கூறப் பட்ட ஜயமங்களரசம் இதுவலிவை யுண்டுபண்ணி சகல வியாதிகளை யோட்டிவிடும்.

### சகல சுரங்களை ஹரிக்குங் கஷாயம்.

கண்டுபாரங்கி, முத்தக்காசு, பற்பாடகம், பூனைகாஞ் சொறி, சுக்கு, நிலவேம்பு, கோஷ்டம், திப்பிலி, கண்டங் கத்திரி, சீந்தற்கொடி, ஆடாதோடைசர்க்கு இவைகளை சம யெடையாய் யிடித்து ஒருபடி சலம்விட்டு ஆழாக்காக சுண்டக்காய்ச்சி காலைமாலை குடித்துவந்தால் சகலசுரங் களும் நாசமாகும்.

## வாதசுரத்திற்கு சட்யாதிகஷாயம்.

| | |
|---|---|
| கிச்சிலிக்கிழங்கு | சீந்திற்கொடி |
| தாமரைக்கிழங்கு | சுக்கு |
| சிறுதேக்கு | வட்டத்திருப்பி |
| கடுக்காப்பூ | நிலவேம்பு |
| பூனைகாஞ்சொரிவேர் | கடுகுரோகணி |

இவைகள் சமயெடையாயிடித்து கஷாயம்வைத்து குடித்தால் சகலவாதசுரங்களும் பிருமலும்போம்.

## பித்தசுரத்திற்கு திராக்ஷாதி கஷாயம்

திராக்ஷை, கடுக்கா, பற்பாடகம், முத்தக்காசு, கடுகு ரோகணி, கொண்ணைப்புளி இவைகளைச் சமயெடையாய் இடித்து கஷாயம்வைத்து குடித்தால் பிதற்றல், மூர்ச்சை பிரமை, தாகம், சோஷை நாவரட்சிபோம்.

சிலேஷ்மசுரத்திற்கு

## பிப்பல்யாதி கஷாயம்.

திப்பிலி, மோடி, சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, மிளகு, ஏலக்காய், ஓமம், வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, தக்கோலம், கண்டுபாரங்கி, வேப்பன்விதை, பெருங்காயம், கடுகுரோகணி கடுகு, வாய்விளங்கம், அதிவிடையம், தர்ப்பைவேர், இவைகளைச் சமஎடையாயிடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் சிலேத்துமசுரங்கள் சொஸ்த மாகும்.

வாதசிலேஷ்ம சுரத்திற்கு

## முஸ்தாதி கஷாயம்.

கோரைக்கிழங்கு, பற்பாடகம், சுக்கு, சீந்திற்கொடி பூனைகாஞ்சொரிவேர் இவைகளை சமஎடையாய்யிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் வாதசிலேத்துமசுரம், அரோசிகம், வாந்தி, தாகம், சோஷை சொஸ்தமாகும்.

வாதபித்த சுரத்திற்கு

## பஞ்சபத்திர கஷாயம்.

சீந்திற்கொடி, பற்பாடகம், கோரைக்கிழங்கு, நில வேம்பு சுக்கு இவைகளை சமயெடையாகயிடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் வாதபித்தசுரஞ் சொஸ்தமாகும்.

பித்தசிலேஷ்மசுரத்திற்கு

## சண்டகாரியாதி கஷாயம்.

கண்டங்கத்திரிவேர்
சீந்திற்கொடி
கண்டுபாரங்கி
சுக்கு
வெட்பாலைஅரிசி
பூனைகாஞ்சொரிவேர்
நிலவேம்பு
சந்தனத்தூள்
கோரைக்கிழங்கு
பேய்ப்புடலை
கடுகுரோகணி

இவைகளை சமயெடையாய் இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் பித்தசிலேஷ்மசுரம், தாகம், நாவரட்சி, அரோசிகம், விக்கல், இருமல், கர்ப்பசூலை, குஷிசூலை, சொஸ்தமாகும்.

---

சன்னிபாத சுரத்திற்கு

## பூநிம்பாதி கஷாயம்.

நிலவேம்பு
தேவதாரி
தசமூலம்
சுக்கு
கோரைக்கிழங்கு
கடுகுரோகணி
வெட்பாலையரிசி
கொத்தமல்லி
ஆனைத்திப்பிலி

இவைகள் சமயெடையாய் வாங்கி இடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் சோம்பல், பிரலாபம், இருமல், அரோசிகம், தாகம் மோகம், சுவாசகாசங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

---

ஆகந்துக சுரத்திற்கு

## வியாக்கிரா கஷாயம்.

கண்டங்கத்திரிவேர் சுக்கு சீந்திற்கொடி இவைகள் சமயெடையாயிடித்து கஷாயம்போட்டு அதில் மூன்று விரற் கடைதிப்பிலி சூரணம்போட்டு உட்கொண்டால் சீரணசுரங்கள், அரோசிகம், சுவாசம், இருமல், சூலை, அக்கினிமந்தம், பீநிசம் இவைகள் சொஸ்தமாகும்.

## விஷசுரத்திற்கு முஸ்தாதி கஷாயம்.

கோரைக்கிழங்கு நெல்லிவற்றல் சீந்திற்கொடி சுக்கு கண்டங்கத்திரிவேர் இவைகள் சமயிடைபாய் இடித்து கஷாயம் போட்டு அதில் மூன்றுவிரற்கடை திப்பிலிசூரணமும் தேனுங்கலந்து உட்கொண்டால் விஷசுரம் நீங்கும்.

---

## ஆயிகசுரங்களுக்கு நாகராதிகஷாயம்.

சுக்கு, சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, சந்தணத்தூள், வெட்டிவேர், கொத்துமல்லி இவைகளை சமயெடையாயிடித்து கஷாயம்வைத்து அதில் தேனுஞ்சர்க்கரையும் கலந்து உட்கொண்டால் திரியாஹிக சுரங்கள் நீங்கும்.

---

## திரிதீயகசுர கஷாயம்.

ஆடாதோடை, நெல்லிவற்றல், சித்தாமல்லி, தேவதாரி, கொத்துமல்லி, சுக்கு, இவைகளை சமயெடை இடித்து கஷாயம் வைத்து அதில் தேனுஞ் சர்க்கரையுங்கலந்து உட்கொண்டால் திரிதீயகசுரம் நீங்கும்.

---

## சகலசுரத்திற்கு சுகபேதிகஷாயம்.

நெல்லிவற்றல், சித்திரமூலம், கடுக்காய், இந்துப்பு, திப்பிலி இவைகள் சமபெடை சூரணித்து வெந்நீரால் உட்கொண்டால் அலுப்பில்லாமல் சுகமாய் பேதியாகி சகல சுரங்கள் சிலேத்துமங்கள், அரோசிகங்கள், மந்தம் இவைகள் நீங்கி பசிதீவினையுண்டாகும்.

---

## சாதுர்த்திகசுர கஷாயம்.

கடுக்காய், சித்தாமல்லி, சுக்கு, தேவதாரி, நெல்லிவற்றல், ஆடாதோடை இவைகளைச்சமயெடையாய் எடுத்திடித்து கஷாயம் வைத்து அதில் கற்கண்டுந் தேனுங்கலந்து உட்கொண்டால் சாதுர்த்திகசுரம் அதிசீக்கிரமாய் விட்டகலும்.

## அதிசாரசுரத்திற்கு கஷாயங்கள்.

சுக்கு அதிவிடயம் கோரைக்கிழங்கு கிலவேம்பு சீந்திற் கொடி வெட்பாலைஅரிசி இவைகள் சமஎடையாயிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சகல அதிசாரங்கள் விட்டகலும்.

## ஆமாதிசாரத்திற்கு தான்யாதிகஷாயம்.

கொத்தமல்லி கோரைக்கிழங்கு குருவேர் வில்வப்ப ழம் சுக்கு இவைகள் சமயெடையாயிடித்து கஷாயம் வைத்துஉட்கொண்டால் சீதம்நசித்து ஆமாதிசாரசுரம் விட்டகலும்.

## சுராதிசாரங்களுக்கு நாகராதிகஷாயம்.

சுக்கு தேவதாரி கொத்துமல்லி கண்டங்கத்திரி இரண்டு விதம் இவைகள் சமயெடை இடித்து கஷாயம்வைத்து உட் கொண்டால் சுராதிசாரங்கள் விட்டகலும்.

## இரக்தாதிசார சுரத்திற்கு கஷாயம்.

வெட்பாலையரிசி அதிவிடயம் வில்வப்பழம் குருவேர் முத் தக்காசு இவைகளை சமயெடை இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சீதம், சூலை, இரத்தம் என்னும் இவைகளு டன் கலந்து வெகுகாலமாய் அவஸ்தைப்படுதல், அதிசார சுரங்கள், சூரியனைக்கண்ட பனிபோல் விட்டகலும் (அனு பானம்)

## இதுவுமது.

யானைவணங்கிப் பட்டை இலந்தப் பட்டை நாவல் பட்டை மாம்பட்டை இவைகளி லேதாகிலும் பசுவின் பாலில் இடித்து ரசம்பிழிந்து தேன்கலந்து உட்கொண்டால் ரக்தா திசாரம் விட்டகலும்.

## சோமாதி சாரத்திற்கு கஷாயம்.

தேவதாரி அதிவிடயம் மாவுசுக்கு வாய்விளங்கம் முத் தக்காசு மிளகு வெட்பாலையரிசி இவைகள்சமஎடை இடித்து கஷாயம்வைத்துஉட்கொண்டால்கூடியசிக்கிரத்தில்சோமாதி சாரங்கள் நீங்கும்.

(பூச்யபாதீயம்)

## பழயசுரங்களுக்கு

## மகாலவங்காதிசூரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலவங்கப்பட்டை | பாகம்- | ௧ | திப்பிலி | பாகம் | ௧௬ |
| நாககேசரம் | ,, | ௨ | சுக்கு | ,, | ௩௨ |
| ஏலக்காய் | ,, | ௪ | அமுக்கிறாகிழங்கு | ,, | ௬௪ |
| மிளகு | ,, | ௮ | | | |

ஷை தினுசுகளைச் சூரணித்து அச்சூரணத்திற்கு சமஎடையாய் சற்கரையைக்கலந்து மூன்றுவிரற்கடை பிரமாணம் வெந்நீரால் உட்கொண்டால் கபம்-பித்தம்-பாண்டு-குன்மம்-பழயசுரங்கள்-மூலவியாதி-அரோசிகம்-அசீரணம்-பெருமூச்சு - சுவாசகாசம் - விக்கல் - குசுமரோகம்-மார்புநோவு-பாரிசவாதம்-முதலிய வியாதிகள் சிங்கத்தைக்கண்ட யானையைப்போல் பறந்தோடும்.

### பழயசுரங்களுக்கும், க்ஷயகாசங்களுக்கும்,

## ஏலாதிச்சூரணம்.

| | |
|---|---|
| ஏலக்காய் | ஜாதிக்காய் |
| இலவங்கப்பட்டை | சீந்திற்சர்க்கரை |
| இலவங்கப்பத்திரி | கொத்துமல்லி |
| நாககேசரம் | வசம்பு |
| மிளகு | கடுகுரோகணி |
| நிலவேம்பு | ஆடாதோடையிர்க்கு |
| குருவேர் | அதிமதுரம் |
| சாமந்தி | திராக்ஷை |
| கோரைக்கிழங்கு | கிச்சிலிக்கிழங்கு |
| திப்பிலி | சந்தனத்தூள் |
| குந்துருஷ்கம் | மருதமரப்பட்டை |
| தக்கோலம் | ஜாதிமொக்கு |
| கோஷ்டம் | கண்டுபாரங்கி |

இந்த தினுசுகளை சமவெடையாய் எடுத்து சூரணித்து அச்சூரணத்திற்கு சமஎடையாய்ச் சர்க்கரைக்கலந்து மூன்றுவிரற்கடை பிரமாணம் உட்கொண்டு வெந்நீர் குடித்தால் சிலேஷ்ம, பித்தசுரங்கள், பாண்டு, க்ஷயரோகம்,

மூலவியாதி, அரோசிகம், குல்மம், பழயசுரங்கள், சுவாச காசங்கள், விக்கல், மார்புநோவு சொஸ்தமாகும் இது ஜனங்களுக்கு மிகவும் நன்மையானதென்று பூஜ்ஜியபாத ரிஷி சொல்லியிருக்கிறூர்.

(ஆயுர்வேதம்)

முறைக்காய்ச்சலுக்கு

## நிம்பாதிசூரணம்

| | | | |
|---|---|---|---|
| வேப்பிலை | பாகம்-ச | ஓமம் | பாகம்-ரு |
| திரிபலங்கள் | ,, ந | திரிலவணங்கள் | ,, ந |
| திரிகடுகு | ,, ந | நவாக்ஷாரம் | ,, ந |

இந்த தினுசுகளை ஒன்ருய்ச்சேர்த்து சூரணித்து காலையில் உட்கொண்டால் சகல முறைக் காய்ச்சல்களும் பழய சுரங்களும் சொஸ்தமாகும்.

### சகலசுரங்களுக்கு சுதரிசனச்சூரணம்.

| | |
|---|---|
| கடுக்காய் | ஓமம் |
| தானிக்காய் | கரும்வெட்பாலையரிசி |
| நெல்லிவற்றல் | முருங்கவிதை |
| மஞ்சள் | காவிக்கல் |
| மரமஞ்சள் | வசம்பு |
| கண்டங்கத்திரி 2-விதம் | இலவங்கப்பட்டை |
| கிச்சிலிக்கிழங்கு | தாமரைக்கொடி |
| சுக்கு | கொத்துகடும்பை |
| மிளகு | வாய்விளங்கம் |
| திப்பிலி | சித்திரமூலம் |
| மோடி | தேவதாரி |
| பெருங்குரும்பை | சவ்வியம் |
| பூனைக்காஞ்சோறு | கொடிமுந்திரிப்பழம் |
| கடுகுரோகணி | பேய்ப்பொடலை |
| பற்பாடகம் | ஆடாதோடை |
| முத்தக்காசு | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| புங்கம்வேர் | இலவங்கம் |
| வேப்பன்வேர்பட்டை | வெள்ளைத்தாமரை |
| தாமரைக்கிழங்கு | தேள்கொடுக்குசெடிசமூலம் |
| அதிமதுரம் | இலவங்கப்பத்திரி |
| வெள்ளைவெட்பாலையரிசி | ஜாபத்திரி |
| சிறுதேக்கு | தாளிசப்பத்திரி |

இவைகளைச் சமயெடையாய்ச் சூரணித்து சூரணத்திற்கு பேர்பாதி நிலவேம்புச் சூரணங்கலந்து சலத்தால் ஒரு ரூபாயெடை உட்கொண்டால் வாதபித்த சிலேஷ்ம சுரங்கள், துவந்தசுரங்கள், திரிதோஷசுரங்கள், ஆயிகசுரங்கள், சப்ததாதுகதசுரங்கள், மேகம், பிரமை, பீநிசம், தாகம், சுவாசகாசங்கள், பாண்டு, காமாலை, பக்கசூலைகள் முதலிய ரோகங்களை திருமாலினது சக்கிரம் அரக்கர் குலத்தை நாசப் டுத்தியதுபோல் நாசப்படுத்தும்.

---

(கார்க்கேவம்)

## சகலசுரங்களுக்கும் ஆமலக்யாதி சூரணம்.

| | |
|---|---|
| நெல்லிவற்றல் | திப்பிலி |
| சித்திரமூலம் | இந்துப்பு |
| கடுக்காய் | |

இவைகளை சமயெடையாய் சூரணித்து மூன்று விரற்கடை பிரமாணம் உட்கொண்டால் சகல சுரங்கள் போம் தோஷங்களை பேதிக்கும் அரோசிகத்தை விலக்கும் மந்தத்தையோட்டி பசிதீவினையுண்டாக்கும்.

---

## விஷசுரங்களுக்கு ஹரீதக்யாதி சூரணம்.

கடுக்காய், வேப்பனிலை, சுக்கு, இந்துப்பு, சித்திர மூலம், ஷை தினுசுகளை சமனிடையாய் சூரணித்து மூன்று விரற்கடை பிரமாணம் உட்கொண்டால் விஷசுரம் விட்டகலும்.

---

## சீதசுரங்களுக்கு கிராதாதி சூரணம்

| | |
|---|---|
| நிலவேம்பு | வாய்விளங்கம் |
| சிவதைவேர் | சுக்கு |
| திப்பிலி | கடுகுரோகணி |

இந்த தினுசுகளை சமஎடையாய் சூரணித்து அச்சூரணத்தில் ஒருசிட்டிகை தேனிற்கலந்து உட்கொண்டால் சீக்கிரத்தில் சீதசுரங்கள் விட்டகலும்.

மேகசுரத்திற்கு

## அஸ்வகந்திரசாயனம்.

அஸ்வகந்தி பலம் - உசு காட்டெருமைப்பால்
ஏலம் சுக்கு
இலவங்கப்பட்டை மிளகு
இலவங்கப்பத்திரி திப்பிலி
சிறுநாகப்பூ வெட்டிவேர்
கொத்துமல்லி கிராம்பு
கொடிமுந்திரிப்பழம் திப்பிலிமூலம்
சந்தனத்தூள் சித்திரமூலம்
சன்னலவங்கப்பட்டை சவ்வியம்
கடுக்காப்பூ

இவைகள் தினுசுக்கு (ந) விராகனிடை இவையெல்லாம் இடித்து வஸ்திரகாயஞ்செய்து நாலுபடி பசும்பால் ஒருசட்டியில் வார்த்து அதில் (ருய) பலம் சீனிசர்க்கரைப் போட்டு வடிகட்டி பக்குவஞ் செய்துக்கொண்டு அதில் ஷ சூரணத்தைப்போட்டு நெய் படி (உ) தேன் படி (க) இவைகளை அவற்றுடன் சேர்த்து ரசாயனபக்குவமாய் செய்துக் கொண்டு வேளையொன்றிற்கு கொட்டைப் பாக்களவாக நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை ஒரு மண்டலஞ் சாப்பிட மேகசுரம், ரத்தபயித்தியம், பித்தரோகம், அஸ்திசுர முதலான வியாதிகள் சொஸ்தமாகும். இச்சாபத்தியம்.

அந்தர்கதகாய்ச்சலுக்கு

## அஸ்வகந்திலேகியம்.

நெய் படி - க தாளிசப்பத்திரி
சுக்கு சிறுநாசப்பூ
மிளகு கிராம்பு
திப்பிலி கொடி முந்திரிப்பழம்
அரத்தை ஏலம்
தூதுவளைவேரின்பட்டை சீரகம்
கண்டங்கத்திரிவேர்பட்டை லவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி கண்டத் திப்பிலி

இந்த தினுசுகள் வகைக்கு பலம் (க) இத்துடன் அமுக்கிருகிழங்கு பலம் (உய) சீனிசர்க்கரை (ய) பால் படி க) அமுக்கிருகிழங்கு தூதுவளை கண்டங்கத்திரிவேர்

இவைகளை மாத்திரம் வேரேயெடுத்து வைத்துக்கொண்டு, மற்றச் சரக்குகளை யெல்லாம் பொன்னிரமாய் வருத்துக் கொண்டு சகலத்தையும் சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து பாலுஞ்சர்க்கரையும் பாகுப்போல் பக்குவஞ்செய்து கொண்டு இந்தச் சூரணத்தை அதில்போட்டு நெய்யையும் வார்த்து அத்தோடு ஒரு சேர் தேனையும்விட்டு லேகியம் பக்குவமாய்ச் செய்துக்கொண்டு வேளைக்கு கொட்டைப் பாக்களவு நாளொன்றிற்கு இரண்டுவேளை அரைமண்டலஞ் சாப்பிட அந்தர்கதசுரம், இருமல், அக்கினிமந்தம், முதலியவைகள் நீங்கும் இச்சாபத்தியம்

சுரங்களுக்கு

## வாய்விளங்காதி சூரணம்.

| | |
|---|---|
| வாய்விளங்கம் | பெருங்காயம் |
| சுக்கு | இந்துப்பு |
| சித்திரத்தை | கண்டுபாரங்கி |
| திப்பிலி | |

இந்ததினுசுகளை சமயெடையாயெடுத்து சூரணித்து அதில் காலபாகம் நவாச்சாரம் பொடிசெய்து சேர்த்து வேளையொன்றிற்கு இரண்டு விராகனிடை தேனிற்கலந்து நாள் ஒன்றிற்கு இரண்டுவேளை சாப்பிட சுரங்கள், இருமல் இரைப்பு, அரோசிகம் அக்கினிமந்தம் அனுகூலமாகும்.

---

## சகலசுரங்களுக்குபிப்லாதிரசாயணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திப்பிலி | பலம் - | 16 | திப்பிலிமூலம் | பலம் - | 2 |
| சர்க்கறை | ,, | 8 | சவ்வியம் | ,, | 2 |
| வாய்விளக்கம் | ,, | 4 | கொடிவேலி | ,, | 4 |
| கண்டுபாரங்கி | ,, | 4 | சுக்கு | ,, | 2 |
| மிளகு | ,, | 4 | லோகசிந்தூரம் | ,, | 2 |
| சீரகம் | ,, | 4 | கையாந்தகரைசூரணம் | | 2 |
| லவங்சப்பட்டை | ,, | 4 | லவங்கப்பத்திரி | ,, | 1 |
| ஏலம் | ,, | 1 | கடுக்காய் | ,, | 1 |
| தானிக்காய் | ,, | 1 | நெல்லிமுள்ளி | ,, | 1 |
| ஜாதிக்காய் | ,, | ½ | தேன் | ,, | 8 |

இம்மருந்துகளை யெல்லாம் இடித்து சூரணித்து வஸ்திர காயஞ்செய்து சர்க்கரையும் தேனுஞ் சேர்த்து அறைத்து ஒரு பாத்திரத்தில் யெடுத்து வைத்துக்கொண்டு வேளை யொன்றுக்கு பெரியகழர்ச்சிக்காய்ப் பிரமாணம் நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை விகிதம் ஒருமண்டலம் சாப்பிட்டால் சகலசுரங்கள், பஞ்சகாசம், இருத்துரோகம், பாண்டுரோகம் வாயு, அக்கினி மந்தம்முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட இருள்போல் பறந்தோடும்.

## சுரபாண்டுரோகங்களுக்கு தாளிச்சாதிவடகம்

| | |
|---|---|
| தாளிசப்பத்திரி | ஏலம் |
| மிளகு | சிறுநாகப்பூ |
| சவ்வியம் | இலவங்கப்பட்டை |
| கிரும்பு | விலாமிச்சைவேர் |

| | |
|---|---|
| இந்ததினுசுகள் வகைக்குப் | பலம்-$1\frac{1}{2}$ |
| திப்பிலிமூலம் | பலம்-2 |
| திப்பிலி | ,, 2 |
| சுக்கு | ,, 3 |

இவைகளை யெல்லாம் இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சேலம் சர்க்கரை இரண்டுசேர், அச்சூரணத்தோடு சேர்த்து அறைசேர்பாலை அதின்பேரில் தெளித்து நன்றாய் கிளறி ஒருகுண்டுசட்டியில் இரண்டுபடி பசுவின் பாலையும் இரண்டுபடி ஜலத்தையும் ஊற்றி அந்த குண்டுசட்டியின் வாயை ஒருசவுக்கத்தால்மூடி அதின்மீது கிளறினச் சூரணத்தைவைத்து ஆவி வெளியே போகாதபடி அதின் பேரில் ஒருசட்டியை கவிழ்த்து அடுப்பின்பேரில் வைத்து பால் சுண்டுகிறவரையில் யெரித்து பிறகு அதில்வெந்து இருக்கிற சூரணத்தை ஒருசுத்தமான பலகையின்மீது கொட்டி ஒருசேர் பசுவின் நெய்யைவிட்டு ஆராமலிருக்கும் பொழுதே கொட்டைப்பாக்களவாக பிள்ளை பில்லையாய் தட்டி ஒருபீங்கானில்வைத்துக்கொள்ளவேண்டியது வேளை ஒன்றுக்கு ஒரு பில்லையாக நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை சாப்பிட்டுவந்தால் சுரத்தினால் உண்டாகும் ரோகங்கள், வாதரோகங்கள்- சிலேத்துமம், வரட்சி, கிராணி, பாண்டு ரோகங்கள், மார்புவலி, வாயுவினாலுண்டாகும் மூலரோகங்கள், குன்மம், கபம், பீநிசம், இரைப்பு, இருமல், நெஞ்சு வரட்சி, நெஞ்சுவலி முதலியவைகல் கூடியசீக்கிரத்தில் சொஸ்தமாகும்.

அஜீர்ணசுரத்திற்கு

## ஹரித்ராவடகம்.

மஞ்சள், வேப்பிலை, திப்பிலி, மிளகு, மரமஞ்சள், வாய் விளங்கம், கோரைக்கிழங்கு, சுக்கு இந்த எட்டையும் சம யெடையாய்சேர்த்து வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு நாள் ஊரவைத்து மறுநாளெடுத்தரைத்து குன்றியெடை மாத்தி ரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். அசீரண சுரத்திற்கு வெந்நீரில் ஒருமாத்திரையைக் கொடுக் கவும் அதிசாரம் கிராணிகளுக்கு மூன்றுநாள் மோரிலும், சர்ப்ப விஷங்களுக்கு எட்டுமாத்திரையை உள்ளுக்குக் கொடுத்து ஒரு மாத்திரையை அதன்மீது அரைத்து தடவவும், கண்ணில் சிவப்பு நீர் வொழுதல் திமிர் புழு வெட்டு கண்மயிர் உதிரல் இவைகளுக்கு கோமூத்திரத்தில் அல்லது தண்ணீரில் உரைத்து கண்ணிற்போடவும், திரி தோஷ விஷசுரத்திற்கு வெல்லத்திலும், இரத்த அதிசாரத் திற்கு ஏலம் இலவங்கப்பத்திரி இவைகளை வருத்துப் பொடிசெய்து அதோடு சேர்த்துக்கொடுக்கவும். பாண்டுக்கு கோமூத்திரத்திலும், தேள்கடிக்கு எருக்கம்பாலில் ஒரு மாத்திரை அரைத்து தடவ சொஸ்தமாகும்.

---

## சுரங்களுக்கு அரக்குதைலம்.

ஒருவீசை அரக்குவாங்கி அதில் (ச)வீசை ஜலம்விட்டு நாலில் ஒரு பாகமிருக்கும்படிக்குச் சுண்டக்காய்ச்சி வடி கட்டி அதற்குச் சமமாய் நல்லெண்ணெய்வார்த்து அவை களுக்கு நான்கு பாகங்கள் அதிகமாய் தயிரின் தேட்டை ஜலத்தைச்சேர்த்து ஒருபெரிய சாலில் வார்த்து அமுக்கிரு கிழங்கு மரமஞ்சள் தேவதாரிசக்கை காட்டுமிளகு கோஷ் டம் கோரைக்கிழங்கு சந்தனத்தூள் பெருங்குடும்பைக் கிழங்கு கடுகுரோகணி தும்பராஷ்டகம் சதாபிலை அதிமது ரம் இவைகளை வகைக்கு ஒருரூபாஎடை சூரணித்து ஷை தைலத்தில் போட்டுக்காய்ச்சி தைலபக்குவத்தில் இறக் கிக்கொள்ளவேண்டியது இதைதேய்த்துக்கொண்டு குளித் தால் சகல சுரங்கள், உள்மாந்தம், மூர்ச்சை, அபஸ்மாரம்,

பூதாவேசங்கள் முதலியவைகளை விலக்கிவிடும், இது கர்ப்பிணிஸ்திரீகளுக்கு மிகவும் நன்மையைச்செய்யும்.

விஷசுரங்களுக்கு

## சஹதேவி கிருதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சஹதேவியிலைரசம் | படி | க | கடுகுரோகணி | பலம் | ச |
| பசுநெய்யி | ,, | க | பால் | படி | க |

இவைகளை ஒன்றாய்க்கலந்து பாகம்செய்து மிளகு பதமாய்காய்ச்சி வடித்துக்கொண்டு உச்சிக்கரண்டிவீதம் உட்கொண்டால் விஷச்சுரங்கள், சீதசுரங்கள் முதலிய வியாதிகளை விலக்கிவிடும் தேகத்திற்கு வலிவுகொடுக்கும்.

விஷசுரங்களுக்கு

## க்ஷிரஷட்பலகிருதம்.

சுக்கு
திப்பிலி
திப்பிலிமூலம்
மிளகு
செவியம்
சித்திரமூலம்
இந்துப்பு

இவைகள் வகையொன்றிற்கு ($2\frac{1}{2}$) பலம்யெடுத்து எல்லாதினுசு யெடைக்குச் சமமாய் பசுவின்பால்விட்டு, பசுவின் நெய் பலம் 16 இவைகளை ஒன்றாய்ச்சேர்த்து காய்ச்சி மிளகு பதத்தில் இரக்கிக்கொள்ள வேண்டியது ஒரு கரண்டி விகிதம் உட்கொண்டால் சகல விஷ சுரங்கள் குன்மம் இவைகள் போம்.

## மூன்றுங்காண்டம்.

முற்றிற்று.

இன்னும் அநேக அற்புதமான அவிழ்த முறைகளை நான்காம் பாகத்தில் வெளியிட்டு இருக்கிறோம்.